# என்னைத் தாலாட்டும் சங்கீதமே...



# என்னைத் தாலாட்டும் சங்கீதமே...

## 1

"அன்பை முதலீடு செய்தால் உலகம் நம் வசம்!
ஆசையை முதலீடு செய்தால் நாம் சிறைவசம்!"

இலையுதிர் காலம் முடிந்து... மரங்களும், செடிகளும்... இளம் புதிய இலைகளும், தளிர்களும், மொட்டுக்களும், மலர்களுமாய் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த... அழகான வசந்த காலம்!

ஆதவன் அழகே உருவாய்... ஆர்ப்பரித்து... கிழக்கு வானில் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அந்த அழகன் பூமிக்காதலியைத் தன் வசப்படுத்தி... தன் கிரகணங்களால் சிறைச் செய்து கொண்டிருந்த... இளங்காலைப் பொழுது!

இனைனூர், இனைஞிகளுக்குள் பெரும் கனவுகளையும், கற்பனைகளையும் உற்பத்தி செய்யும்... கனவுத் தொழிற்சாலைகளான கல்லூரி திறக்கும் நாள், இன்று தான்!

வகைப்பட்ட ஆசைகளைக் கண்களில் தேக்கிக் கொண்டு... இனைனூர் பட்டாளம் எழுந்து குதூகலமாய் அரக்கப் பரக்க கிளம்பிக் கொண்டிருந்தது!

பஸ் நிரம்பி வழிய கள்ளக்குறிச்சி நகரமே களைகட்டியிருந்தது!

பூஜையறையில் மணியோசை உச்சஸ்தாயியில் கேட்டது!

மானசா படுக்கையிலேயே கிடந்தாள். தன் உடலைக் குறுக்கிக் கொண்டு... தலை முதல் கால்வரை போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு இருந்தாள்!

தந்தை சிவசங்கரனிடம் எம்.எஸ்ஸி சேர்த்து விடச் சொல்லி கெஞ்சிப் பார்த்து விட்டாள்!

சிவசங்கரன் அவளின் பேச்சைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை!

தாய்லாந்தில் இருக்கும்... தனது அக்கா திவ்யா, அத்தான் அன்புவிடமும் தன்னை சேர்த்துவிடச் சொல்லி சிபாரிசு செய்யச் சொன்னாள்!

திவ்யா தந்தைக்கு போன் செய்து... மானசாவை கல்லூரியில் சேர்த்துவிடச் சொல்லி வற்புறுத்தினாள்.

அவளிடம் 'சரி'யென்று கூறிவிட்டு... மானசாவிடம் சண்டைக்குப் போய் விட்டார்.

'நான் யார் சொல்லியும் கேட்க மாட்டேன்! எனக்கு எது சரியென்று படுதோ அதைத்தான் செய்வேன்! நீ படிச்சது



போதும்! கல்யாணம் செய்து வைக்கிறேன்! கட்டிட்டுப் போய் குடும்பம் நடத்தற வழியைப் பார்!' என்று 'காச் மூச்' என்று சத்தம் போட்டு விட்டார்.

கெஞ்சினாள்... அழுதாள்... அடம் பிடித்தாள்... உண்ணாவிரதம் இருந்தும் பார்த்து விட்டாள்.

எத்தனை போராடியும் சிவசங்கரன் மனமோ இளகவே யில்லை!

ஆனால், அவரை மீறி அவளால் எதுவும் செய்ய முடியவில்லை! அதே சமயம் படிப்பின் மேல் உள்ள ஆசையை, ப்ரியத்தை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை!

தோழிகள் எல்லோரும் சந்தோசமாய் முதுகலைப் படிப்புப் படிக்க கல்லூரிக்குப் போவார்களே என்று நினைத்தவளுக்கு அழுகையை அடக்க முடியவில்லை!

நேற்று இரவு ஆரம்பித்த அழுகையும்... கண்ணீரும் கார்த்திகை மாதத்து மழையாய் விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. பொங்கிப் பெருகி கன்னத்து ஓடையில் தாராளமாய் சலசலத்து ஓடியது!

''மானசா... மானசா... எவ்வளவு நேரம் தூங்குவாய்? எழு!'' என்று அதட்டலோடு அருகில் வந்து சிவசங்கரன் கத்த...

மானசா எழுந்தமர்ந்தாள்.

அழுகையை மென்று விழுங்கினாள்.

''என்ன மானசா...? ஏன்...?''

தலைகுனிந்து அமர்ந்திருந்தவளின் கண்களில் நீர் சொட்டியது.

''எதுக்கு அழறே? சொல்லிட்டு அழு?''

''அப்பா... இன்று கல்லூரிகள் எல்லாம் திறக்கும் நாள்!''

''ஆமா... அதுக்கென்ன?''

''மேலே படிக்கறேம்பா! எம்.எஸ்ஸி, சேர்த்து விடுங் கப்பா!'' அழுகையோடு கெஞ்சினாள்.

''இதுவரை படிச்சது போதாதா? இதுக்கும் மேலே படித்து என்ன செய்யப் போறே?''

''என்னைக் கல்லூரியில சேர்த்து விடுங்கப்பா!'' என்று மானசா பழைய பல்லவியையேப் பாட...

''ஏன் மானு... ஒரு முறை சொன்னால் புரிந்து கொள்ள மாட்டாயா...? எவனையாவது கட்டிட்டுப் போய் குடும்பம் நடத்த... இந்தப் படிப்பே போதும்! நிறைய வரன் வருது! இந்த வருடமே உன் திருமணத்தை முடிச்சிட்டால்... நான் நிம்மதியாயிடுவேன்!''

''அப்பா... கல்யாணம் இப்போ வேண்டாம்! நான் படிக்கணும்! படித்து முடித்து வேலைக்குப் போய் சுயமா சம்பாதிக்கணும்! என் சொந்தக் கால்ல இந்த உலக வாழ்க்கையை வெல்ல வேண்டும்!''

''ச்சீ... வாயை மூடு! வேலைக்குப் போக வேண்டிய அவசியமென்ன? உன் அத்தானும், அக்காவும் வெளி நாட்டுல ஏராளமா சம்பாதிக்கறாங்க! இப்போ நம்மகிட்ட நிறைய பணமிருக்கு! நிறைய சீர் செய்து உன்னை மணம் முடிக்கிறேன்! உன் ஆயுசுக்கும் உட்கார்ந்து சாப்பிடற அளவு வழிவகை செய்வான், நம்ம அன்பு! அப்புறம் என்னத்துக்கு படிப்பும்... வேலையும்? ம்?''

''அப்பா... நீங்கள் ஆசிரியராய் இருந்து வாலிண்டரி ரிட்டயர்மெண்ட் கொடுத்தவர்! படிப்போட அவசியம்...



மதிப்பு... பெருமை அத்தனையும் ஒரு ஆசிரியரான உங்களுக்கு நல்லாவேத் தெரியும்! அப்புறம் ஏம்ப்பா...?''

''மானு... மேலே பேசாதே! என் தாக்குதலுக்கு தாங்க மாட்டாய்! போய் வேலையைப் பார்!'' என்று சிவசங்கரன் கத்த...

அதைக் கேட்டு அம்மா சிவகாமியும், அத்தை ஜெயா வும் ஓடி வந்தனர்.

''ஏய் சிவகாமி... பிள்ளையா வளர்த்து வச்சிருக்கே? என்ன வளர்த்தே? திரும்பத் திரும்ப அப்பான்னு மரி யாதைக் கொடுக்காமல் பேசறா! என்ன லட்சணமான வளர்ப்புடி!''

அவர் மனைவியைப் பார்த்து சப்தமிட...

''மானு... வாடி!'' என்று அத்தை அவளை இழுத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள்.

''அத்தை... உங்க தம்பியை என்ன கேட்டேன்? என்னை படிக்க வையுங்கன்னு தானே கேட்டேன்! அது தப்பா, அத்தை?''

''தப்பில்லையடி பெண்ணே! அவன்தான் மடத் தனமா... உன்னைப் புரிந்து கொள்ளாமல் பிடிவாதமாய் இருக்கான்! நீயாவது பணிந்து போயேன்! நீயும் எத்தனை முறை கேட்டாய்! அந்தக் கல்லில் ஈரம் சுரந்ததா? கனிவே இல்லாத கல்லிடம் கெஞ்சி... என்ன புண்ணியம்? மானும்மா... படிச்சது போதும்டா!'' அத்தை அன்போடு கூற...

''ஆமாம், மானசா! உன் அப்பாவைப் பற்றி நாங்கள் நன்கு அறிந்தவர்கள்! மனுசன் முடிவெடுத்தால்

மாத்திக்கவே மாட்டார்! பிடிவாதம் வேண்டாம், மானும்மா! சொல்வதைக் கேளுடா! மற்றவர்களைப் பற்றிய கவலையே இல்லாத மனிதர்! பழமையில் ஊறியவர்! பழைய பஞ்சாங்கத்தையும்... பண்பாட்டையும் கட்டிட்டு அழற மனிதர்...

பொண்ணுங்க எத்தனை விதமா ட்ரஸ் பண்ணிக் கிறாங்க! அணிகலன்கள் அணிந்துகிறாங்க! ப்யூட்டி பார்லர் போய் பேஷியல், ப்ளீச்சிங்ன்னு தங்களை மெருகேற்றிக்கிறாங்க! நீ அப்படிப் போனதுண்டா? அதையெல்லாம் அப்படியே ஏற்றுக் கொண்டவள்... இந்த படிப்பு விஷயத்தில் முரண்டு பண்ணலாமா...?'' அம்மா கேட்க...

''இன்றைய பெண்களுக்கு நல்ல ஆடையோ... அணிகலன்களோ கூட முக்கியமில்லேம்மா! படிப்பு... படிப்பு தாம்மா முக்கியம்! படிப்பு உயிர் போன்றதும்மா! மக்களை படிக்க வைக்கவும்... எழுத்தறிவில்லாதோரை இல்லாமல் ஆக்கவும்... அரசாங்கம் எவ்வளவோ பாடுபடுதும்மா!

கம்ப்யூட்டர், இன்டர்நெட், ஈ-மெயில்ன்னு உலகம் எங்கேயோ போயிட்டு இருக்கு! நீங்க வேணாப் பாருங்க... நான் மேலேப் படிக்காமல் விட மாட்டேன்!''

''உன் அப்பா பிடிவாதக்காரர்டி!''

''நான் அவருக்குப் பிறந்த பெண்ணம்மா! அவருக்கு இந்த அளவு பிடிவாதம் இருக்கும்போது... அவர் பெற்ற பெண்ணான எனக்கு எவ்வளவு பிடிவாதம் இருக்கும்?''

''உன்னால் அவரை வெல்ல முடியாதும்மா!''



''பயப்படாதேம்மா! அப்பாவை எப்படி வெல்வது என்று எனக்குத் தெரியும்!'' என்று நம்பிக்கையோடு சொன்னாள், மானசா.

ஆனால், விதி இனிமேல்தான்... அவளுக்கு கண்ணாமூச்சுக் காட்டி... கடந்து போகப் போகிறது என்று தெரியாமல்!

## 2

**''மனிதனுக்குள் ஊறும் அமிர்தம் அன்பு!**
**மனிதனுக்குள் ஊறும் விஷம் பொறாமை!''**

அன்பு... அளவிட முடியாத சக்தியும் பெரும் வலிமையும் வாய்ந்தது.

அந்த அன்பால் எப்பேர்பட்ட மலையளவு குணக் கேடனைக் கூட... மடுவளவாய் ஆக்கிவிட முடியும்! அன்புக்கு அடிமையாகாதோர் இவ்வுலகில் யாருமே இருக்க மாட்டார்கள்! அத்தகைய அன்பு நம்மிடையே மலையளவு குவிந்து கிடக்கிறது. நெஞ்சில் அள்ள அள்ளக் குறையாதது, அன்பு மட்டுமே! அந்த அன்பை பிறருக்கு வாரி வழங்குவதில் தயக்கம் காட்டக் கூடாது! தாராளமாய் அன்பை அனைவரிடத்திலும் விதைக்க வேண்டும்! அப்போதுதான் மீண்டும் அதே அன்பை ஆனந்தமாய் அறுவடை செய்ய முடியும்!

அன்பு காட்டக் கூடத் தெரிய வேண்டும்! அன்பு காட்டுவது கூட ஒரு கலைதான்! அந்தக் கலையை

அறிந்தவர்களை மக்கள் சமுதாயத்தில் விரல் விட்டு எண்ணி விடலாம்!

அன்பை பகைவர்களிடமும் கூட செலுத்த வேண்டும்! இவ்வாறு பகைவரிடமும் அன்பு செலுத்த... நாட்டில் பகைமையும், பழி உணர்ச்சியும், வன்முறையும், தீவிர வாதமும் அடியோடு அழிந்து விடும்!

'அன்பில்லாதவர்களிடம் சுயநலத்தை மட்டுமே காணலாம்!'

'அன்புடையவர்களிடம் பிறர் நலம் ஓங்கி, உயர்ந்து வளர்ந்திருக்கும்!'

அப்பாகூட சுயநலவாதிதான்! அவளுக்குத் தெரிந்து அன்பாய், பாசமாய் பேசியதில்லை! இழுத்து வைத்து கொஞ்சியதில்லை!

அவருடைய வார்த்தைகளில் மென்மை இருக்காது! அதிகாரத்தோடும், கட்டளையாயும்தான் பேசுவார்!

அக்கா திவ்யா அப்பாவை எதிர்த்து இதுவரைப் பேசியதே இல்லை. மானசாவும் அப்படித்தான் இருந்தாள். படிப்பு விஷயத்தில் மட்டும்... அவரிடம் பணிந்து போகப் பிடிக்கவில்லை!

மானசா தந்தையிடம் பேசுவதேயில்லை!

முகம் வாடி அறைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள். உடல் மெலிந்து போனாள்!

சிவசங்கரனின் கண்ணிலும், கருத்திலும் மானசாவின் கோலம் பட்டது. அவருக்குக் கூட இது கஷ்டமாய் இருந்தது.

ஒரு மாதம் கடந்து... ஒருநாள்...



மானசாவை அருகில் அழைத்துப் பேசினார்.

''மானு... படிச்சி என்னம்மா செய்யப் போறே?'' என்று மெதுவாய் பாசத்தோடு கேட்க... சட்டென்று கண்கள் பொத்துக் கொண்டது.

''அத்தானை படிக்க வைத்தீர்கள்! அக்காவை படிக்க வைத்தீர்கள்! எனக்கு மட்டும் முதுகலைப் படிப்பு மறுக்கப்படுவதேன்? ஒரு கண்ணுல வெண்ணெய்யும், மறு கண்ணுல சுண்ணாம்பும் வைக்கலாமா?''

''மானு... அப்போ நாமெல்லாம் ரொம்பக் கஷ்டப் பட்டுட்டு இருந்தோம்! படிச்சால் உதவுமேன்னு அவர் களைப் படிக்க வைத்தேன்! இன்றைக்கு அவர்கள் நிறைய சம்பாதிக்கிறாங்க! எக்கச்சக்கமான பணம் இருக்கு! நல்ல பையனாய் பார்த்து திருமணம் செய்து வைக்கிறேன்! நிறைய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரேன்! கட் டிட்டுப் போய் சந்தோசமா குடும்பம் நடத்து!''

''அப்பா... ப்ளீஸ்ப்பா... இது ஒன்றுக்கு மட்டும் அனுமதியுங்க! படிச்சி முடித்ததும்... நீங்க கை காட்டற மாப்பிள்ளையை மறுபேச்சே பேசாமல் கட்டிட்டுப் போய் குடும்பம் நடத்தறேன்!

''நான் படிக்கணும்ப்பா!'' என்று அழுதவளை கண்ட சிவசங்கரனுக்குக் கொஞ்சம் கஷ்டமாய் போய்விட்டது.

அவரின் திடத்தை மகளின் பிடிவாதம் வெல்ல...

''கல்லூரி திறந்து ஒரு மாதம் ஆகிறது. அட்மிஷன் முடிந்திருக்குமே மானு! என்ன செய்யலாம்?''

அப்பா கேட்க... மானசா சந்தோசமானாள்.

"ப்ளீஸ்ப்பா... எங்காவது எனக்காக ஒரு இடம் இல்லாமல் போகாது!"

"சரி முயற்சிக்கலாம்! போ... போய் நல்லா சாப்பிடு! சந்தோசமாய் இரு!"

'அப்பாவா இப்படிப் பேசுகிறார்' என்று மானசா அதிசயப்பட்டாள்.

இந்த நல்ல செய்தியைச் சொல்ல... தாயையும், அத்தையையும் தேடி ஓடினாள்.

மறுநாளிலிருந்து மானசாவும், சிவசங்கரனும் கல்லூரிகளுக்கு புறப்பட்டனர்.

அந்த நகரத்தில் இருந்த பாரதி கல்லூரி, ஏ.கே.டி. கல்லூரி, ஆர்.கே.சண்முகம் கல்லூரி என்று உள்ள தனியார் கல்லூரிகள் ஒவ்வொன்றுக்கும் செல்ல... அட்மிஷன் முடிந்து விட்டதாய் சொன்னார்கள்.

"அப்பா... என்னை சேலம், சென்னை, கோவை, திருச்சின்னு வெளியூர்ல இருக்க கல்லூரியில சேர்த்து விடுங்கப்பா! அங்கே இடம் இருக்கலாம்! ஹாஸ்டலில் தங்கிப் படிக்கறேன்!"

"அதெல்லாம் வேணாம். மானசா! உன்னை அவ்வளவு தூரம் அனுப்பிட்டு... மடியில நெருப்பை கட்டிட்டு எங்களால் இருக்க முடியாது!"

கள்ளக் குறிச்சியிலிருந்து பத்து கி.மீ. தொலைவுள்ள சின்ன சேலத்திற்குச் சென்றனர்.

அங்கிருந்த 'ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி'யில் இடம் இருப்பதாய் கூற...



"இங்கே வேணாம்மா!" சிவசங்கரன் மறுத்தார்.

"ஏம்ப்பா...?"

"தூரமா இருக்கு. எப்படி வருவாய்?"

"கார்ல வரேன். இல்லேன்னால் என் ஸ்கூட்டியில வரேன்! இங்கேயே சேர்த்து விடுங்கப்பா! கிறிஸ்டியன் மேனேஜ்மெண்ட் ரொம்ப நல்லாயிருக்கும். கண்டிப்பு நிறைந்திருக்கும்! ஒழுக்கம் இங்கே உயிராய் போற்றப் படும்! நல்ல தரமான கல்வியும் கிடைக்கும்! பாதர் வில்லியம்ஸ் தான் இதை நிர்வகிப்பவர்! திறமையானவராம்பா! என் ப்ரண்டுங்க இங்கே நிறையப் பேர் படிக்கறாங்க!"

"பொண்ணுங்களும் பையன்களும் சேர்ந்து படிக்கறாங்களே! இது நமக்கு சரிப்பட்டு வராது, மானசா! நம்ம குடும்பத்துக்கு ஒழுக்கம் முக்கியம்!"

சிவசங்கரன் முகம் சுளித்துச் சொல்ல...

"என் மேல் நம்பிக்கை இல்லையாப்பா? நான் உங்க பொண்ணுப்பா! வழி தவறிப் போக மாட்டேன்! எந்த ஆண்மகனையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன்! என்னை நம்புங்கப்பா! உங்க கௌரவத்துக்கு பங்கம் வராப்போல செயல்ல ஈடுபட மாட்டேன்!" என்று மானசா கெஞ்ச...

சிவசங்கரன் ஆமோதிப்பாய் தலையசைத்தார்.

அவர் மானசாவை நம்பினார்!

அவர் நம்பிக்கையில்... மானசா கைப்பிடி மண் எடுத்துப் போடப் போகிறாள் என்று அறியாமல்!

# 3

**''அன்பு கொண்டவனால் அடக்கி ஆளமுடியும்! ஆசை கொண்டவனால் அடங்கிப் போக முடியாது!''**

உலகத்து சுறுசுறுப்பையெல்லாம்... சந்தோசத்தையெல்லாம் தன்னகத்தே கொண்டு... தயக்கமின்றி, தடைகளைக் கடக்கும் இளைஞனாய்... வீறுநடைப் போட்டுக் கொண்டிருந்தான், இளம் ஞாயிறு!

அழகின் இலக்கணமாய்... சந்தோசத்தில் துள்ளி... இரண்டிரண்டு படிக்கட்டுகளாய் தாவிக் குதித்து ஓடி வந்தாள், மானசா.

இளம் ஆரஞ்சு நிற சேலையில்... கறுப்பும், வெள்ளையுமாய் பூக்களும், ஜிமிக்கிகளும் மின்ன... தளரப் பின்னிய நீண்ட கூந்தலில் ஆரஞ்சு நிற ரோஜா காதோரம் குடியிருக்க... அழகே உருவாய் கல்லூரிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

சந்தன மேனியும்... அழகிய குண்டு முகமும்... இரு நீண்ட நயனங்களும்... இளம் ரோஜா நிற இதழுமாய்... பாலாய்... பளிங்காய்... கதுப்புக் கன்னங்கள் இயல்பாய் எந்த ஒரு செயற்கைப் பூச்சும் இல்லாமல் மின்ன... அந்தக் காலத்து இளம் ஸ்ரீதேவி போல இருந்தாள், மானசா! கூடுதலாய் கன்னக்குழி கவர்ச்சி... அப்படியே யாரையும் வாரிச் சுருட்டி... தரைக்குப்புற அவளிடம் விழ வைத்து விடும்.



அம்மா, அத்தையிடம் சொல்லிக் கொண்டு... தந்தையிடம் வந்தாள்.

''நான் வரேம்ப்பா!'' சொன்னாள், மானசா.

''உனக்கு படிப்பு எவ்வளவு முக்கியமோ... அதுபோல எனக்கு ஒழுக்கம் முக்கியம்! நம்ம வீட்டு ஒழுக்கத்துக்கு மானபங்கம் வராப்போல நடந்து கொண்டே வெட்டிப் பொலி போட்டுடுவேன்! ஜாக்கிரதை!'' என்று கடுமையாகக் கூற...

மானசா முகம் வாடி ''சரிப்பா...'' என்று வெளியேறினாள்.

கல்லூரியின் கட்டிடங்கள் கலை நயத்தோடு... பிரம்மாண்டமாய் இருந்தது.

எங்கும் சுத்தம், சுகாதாரம்! கண்களுக்கு குளிர்ச்சியைத் தர வித விதமான பூச்செடிகள்! நிழலினை வள்ளலாய் வாரிக் கொடுக்கும் குல்மொஹர், வேம்பு, நாகலிங்க மரம் என்று கல்லூரியே ரம்யமாய் இருந்தது.

மானசா தனது வகுப்பறையைக் கண்டுபிடிக்க ரொம்பவே சிரமப்பட்டாள். அவளுடைய வகுப்பறை மூன்றாவது தளத்தின் மத்தியில் இருந்தது.

''எங்கே படித்தாய்? ஏன் காலதாமதம்? எங்கிருந்து வருகிறாய்?'' என்று ஆளாளுக்கு கேள்விகளைக் கேட்க... மானசா புன்னகையுடன் பதிலளிக்க... அவளின் அழகை, வசீகரத்தை இளைஞர்கள் வைத்த விழி எடுக்காமல் அதிசயமாய்ப் பார்த்தனர்.

ஒரு சில இளைஞர்கள் அவளோடு கை கோர்த்து காதல் தேசம் புறப்பட்டு விட்டனர். மாணவிகளில் சிலர் அவளின் அழகு கண்டு பொறாமையுடன் நோக்கினர்.

நாலைந்து தெரிந்த மாணவிகள் இருந்தனர்.

ஆனால், முதல் வரிசையில் அமர்ந்திருந்த நிர்மலா... அவளுக்கு இடம் விட்டு நகர்ந்து உட்கார... அங்கேயே அமர்ந்தாள்.

புதிதாய் கல்லூரி திறந்த கொஞ்ச நாட்களுக்கு எல்லோரும் வகுப்பறையை 'கட்' செய்யாமல் வருவர். பொறுப்பாய் பாடத்தை கவனிப்பர் என்பதால்... ஆசிரியப் பெருமக்கள் நிறைய பாடங்களை முடித்திருக்க... அவளுக்கு புரபசர்கள் வந்து நடத்தும் பாடங்கள் புரியவில்லை!

அவள் பாடம் வேதியியல் என்பதால் புரிந்துகொள்ள முடியாமல் திணறினாள்...! திண்டாடினாள்...!

வேதியியல் பார்மலாக்களும், சோதனைகளும் புரியாமல் போனது!

மதிய இடைவேளைக்கு பிறகும் இதுவே தொடர... தாங்க முடியாமல்... அருகில் இருந்த நிர்மலாவிடம் கேட்டாள்.

''நிர்மலா... இதுநாள் வரை வகுப்பை கவனித்து நோட்ஸ் எடுத்திருப்பீங்க அல்லவா... அதனை எனக்குக் கொடுத்து உதவுங்களேன். ப்ளீஸ்... எனக்கு பாடங்களே புரியலைங்க!'' மானசா கேட்க...

நிர்மலா புன்னகையுடன் கூறினாள்.

''ஸாரிங்க, மானசா! நான் ஏனோ தானோன்னு குறிப்பெடுத்து வச்சிருக்கேன்! உங்களுக்கு என் நோட்ஸ் பயன் தராது!''

''நான் யாரிடம் கேட்க? இந்த வகுப்பறையில் நன்றாகப் படிக்கும் நபரைச் சொன்னால்... நானே கேட்டு வாங்கிக் கொள்வேன்!''



''மைக்கேல்! பொறுப்பானவன்! நன்கு படிப்பவன்! அவன் நோட்ஸ் உங்களுக்கு ரொம்ப நல்லாப் பயன் படும்!''

''மைக்கேலா... யார் அது?''

''அதோ... நம் வரிசையில் லாஸ்டாய் உட்கார்ந்திருப் பவன்தான் மைக்கேல்!''

''மானசா உட்கார்ந்த நிலையிலேயே குனிந்து... தலையைத் திருப்பி நோக்க... ஏதேச்சையாய் அவனும் இவளை நோக்கிக் கொண்டிருக்க...

இருவர் பார்வைகளும்... சட்டென்று ஒன்றுடன் ஒன்று கலந்தது! கரைந்தது!

இருவர் விழிகளும்... ஒன்றை ஒன்று எதிர் துருவ காந்தங்களாய் இழுத்தது!

மானசா பார்வையைத் தழைத்துக் கொண்டாள்!

அவன் பார்வை... அவள் உயிர் வரை ஊடுருவி... மூடுபனியாய் ஜில்லிட வைத்தது!

இதுநாள் வரை எந்த ஆணின் பார்வையும்... அவளைச் சலனப்படுத்தியதில்லை! முதன் முதலாய் சலனம், அவளுள்!

ஆண்களையே அவளுக்கு அறவே பிடிக்காது! அப்பா என்ற ஆணின் அரக்கக் குணத்தை நன்கு அனுபவித்தவள்! அப்பாவின் கட்டுப்பாட்டில் மூச்சு முட்டி சுவாசத்துக்காய் தவிப்பவள்! எல்லா ஆண் பிள்ளைகளும்... தன் தந்தையைப் போலவே இருப்பர் என்று எண்ணியே... அவளுக்கு ஆணினத்தையே பிடிப்பதில்லை!

விதி விலக்காய் அவளுக்கு தனது அக்காவின் கணவன்... அத்தையின் மகனான அன்புவை ரொம்பவேப் பிடிக்கும்!

மற்றபடி அவள் மேல் ஆண்களின் பார்வை பட்டாலே கம்பளி ஊறிய வேதனையாய் இருக்கும்! கசக்கும்! எரிச்சல், கோபம் வரும்!

ஆனால் இன்று மைக்கேலின் பார்வை தன் மீது பட்டபோது அருவெறுக்கவில்லை! கோபம் வரவில்லை! எரிச்சல் வரவில்லை!

மாறாக, அவளைத் தென்றலாய்... அந்தப் பார்வை தட்டி தாலாட்டியது!

மாறாக, அவள் உள்ளத்தில் புதுவித ராகத்தை, ரசாயன மாற்றத்தை ஏற்படுத்தியது!

இதுவரை கண்டிராத அனுபவம்! பரவசம்! அந்த பரவசம்... அவளை ரெக்கைக் கட்டி பறக்க வைத்தது!

என்னன்னவோ கனவுகளையும், கற்பனைகளையும் சித்தரிக்கச் சென்ற மனதின் மண்டையில் நாலு தட்டு தட்டி இயல்புக்கு வந்தாள்!

மனம் அடங்கி... அவள் வசமானது!

மானசா எழுந்து... மைக்கேலிடம் சென்றாள்.

''எக்ஸ்கியூஸ் மீ...'' என்று அழைக்க... தலை குனிந்து எதையோ எழுதிக் கொண்டிருந்தவன் நிமிர்ந்தான்.

மீண்டும் அந்த கண்களிலிருந்து எழும்பிய ஒளி... அவளை நிலைகுலையச் செய்தது! அவனுடைய கம்பீரம்... அவளைக் கேளாமலேயே அவளுள் குடி கொண்டு விட்டது! அவன் அழகு அவளை வீழ்ச்சியுறச் செய்தது!



இத்தனை அழகும், வசீகரமும், கம்பீரமும் இணைந்த ஆண்மகனை இரண்டாவதாய் இப்போதுதான் பார்க்கிறாள்.

அன்பு அத்தான்... நல்ல அழகன்! வசீகரன்! ஆனால் அவன் அழகு அவளை நிலை குலைய வைக்கவில்லை! ஒரே வீட்டில் வளர்ந்ததாலோ... என்னவோ... இத்தனை ஈர்ப்பு வந்ததில்லை! அவள் அவனின் பார்வையை, பழக்கத்தை பாகுபாடாய் நினைத்ததில்லை!

''நான் கல்லூரிக்கு புதுசு! லேட்டாய் வந்ததால்... எனக்கு பாடமே புரியலைங்க! உங்க குறிப்பு நோட்டைக் கொடுத்தால்... வீட்டுக்கு எடுத்துட்டுப் போய்... எழுதிக் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்! கொடுக்கிறீர்களா?''

அவன் புரியாமல் பார்க்க...

''நிர்மலாதான் சொன்னாள். நீங்க சின்சியராய் குறிப்பெடுத்து வைத்திருப்பதாய்! முடிந்தால் இரவோடு இரவாய் எழுதிட்டு கொடுத்துடறேங்க! எனக்கு கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்களேன்!''

மானசா கெஞ்ச... நோட்டைத் தூக்கி நீட்டினான்.

''நன்றிங்க!'' என்று கூறிவிட்டு தன்னிடத்திற்கு வந்து அமர்ந்தாள்.

எழுத்துக்கள் அழகான கையெழுத்தில் தெளிவாய் இருந்தது. ஒரே மாதிரியான ஜெய்ப்பூர் முத்துக்களை எடுத்து... அழகான மாலையாய் கோர்த்தாற் போல... வரிகளும், வார்த்தைகளும் இருந்தன.

'எத்தனை தெளிவாய், சுருக்கமாய், சிரத்தை எடுத்து எழுதி இருக்கிறார். இந்த காலத்தில் இப்படி ஒரு

பொறுப்பான இளைஞனா?' என்று அவனை மெச்சி னாள்.

இரவோடு இரவாய் எழுதி முடிக்க வேண்டும் என்ற முடிவோடு அமர்ந்து எழுதினாள்.

நள்ளிரவு கடந்தும் தூக்கம் கண்களைச் சிறை செய்ய... அவளால் விழித்தெழுத முடியாமல் உறங்கிப் போனாள்.

மறுநாள் கல்லூரிக்குச் செல்ல... நடைபாதையில் கிடந்த பெஞ்சில்... மைக்கேல் தனியாளாய் அமர்ந் திருக்க... மானசா அருகில் போனாள் - வணங்கினாள்.

மானசாவின் பார்வையின் தாக்கம்... மைக்கேலை என்னவோ செய்ய... சட்டென்று தலைக்குனிந்து கொண் டான்.

''ஸாரி சார்! இன்னும் பாதி எழுதவில்லை! முழுசாக முடித்துவிட்டு... உங்கள் நோட்டை தந்து விடுகிறேன்! கொஞ்சம் எனக்காக தயவு காட்டுங்கள், சார்!''

அவன் கண்களைப் பார்த்து... அவளாலும் பேச முடியவில்லை. தரையைப் பார்த்துதான் பேசினாள்.

''ஓ.கேங்க!''

''தேங்க்யூ, சார்!''

அந்த சார் அவனை சங்கடப்படுத்த...

''ஓ... நோ...! எதுக்குங்க வார்த்தைக்கு வார்த்தை சார் எல்லாம்! நானும் உங்க வகுப்பைச் சேர்ந்தவன்! இந்த அளவு மரியாதை தரவேண்டாம்! மை நேம் ஈஸ் மைக் கேல்! சோ... கால் மீ மைக்கேல்! ஓ.கே.யா?''

''ஓ.கே.! நான் மானசா! கால் மீ மானசா!''



''நல்ல பெயர்ங்க! உங்களுக்கு பொருத்தமான பெயரும் கூட!''

''காலதாமதத்துக்கு மன்னிக்க வேண்டுகிறேன்!''

மைக்கேல் பதறினான்.

''மன்னிப்பு அது இதுன்னு எதுக்கு பெரிய பெரிய வார்த்தையெல்லாம்? என் வகுப்பைச் சேர்ந்த உங்களுக்கு உதவ... எனக்குக் கடமையும் இருக்கு அல்லவா?''

''நான் வரேங்க!'' என்று மல்லிகை மலராய் புன் னகைத்து விட்டு செல்ல...

அந்த பல் வரிசையும், கன்னக் குழியும்... அவனை அசர வைத்தது. மீண்டும் மீண்டும் அந்த அழகான புன்னகையைக் காண பேராசை வந்தது.

அடுத்த நாள் நோட்டை திருப்பிக் கொடுத்துவிட்டு... பலமுறை நன்றி சொல்லிவிட்டுப் போனாள், மானசா.

அதன் பிறகு இருவரிடையே பேசாத மௌனம்!

ஒருவரை ஒருவர் விழிகளால் ஆராய்வர்!

மைக்கேல்... அவள் மீது ஒரு பார்வையை வீசிவிட் டால்... மானசாவின் உள்ளம் பூரிக்கும்! அவன் அருகே ஓடிப்போய்... நன்றியுள்ள ஜீவனாய் சுத்தும்!

மைக்கேல்... அவளை அடிக்கடிப் பார்க்க மாட்டான். ஆனால், அவளைக் காண வேண்டும் என்ற ஆவலை அடக்குவதாய்... அவளுக்குத் தோன்றுவது உண்மையா? அல்லது பிரமையா?

# 4

**''புரிதல் 'மனித மொழி'**
**புரியாதது 'மிருக மொழி'**

தாய்லாந்து!

தாய்லாந்தின் தலைநகர் பாங்காங்!

பாங்காங்கின் முக்கிய வீதியில் இருந்த... அந்த மிகப் பிரம்மாண்டமான பங்களாவினுள் இருந்து... அன்புவும், திவ்யாவும் தங்களுடைய தொழிற்சாலைக்குக் கிளம் பினர்.

அன்புவின் நெஞ்சத்தில் பழைய ஞாபகம் நிழலாடியது.

திவ்யா சிவசங்கரனின் மூத்த புதல்வி! மானசாவின் தமக்கை!

அன்பு... சிவசங்கரனின் அக்கா ஜெயாவின் ஒரே தவப் புதல்வன்!

ஜெயாவின் கணவன்... அன்பு பிறந்தவுடன் இறந்து போக... எல்லாமும் தம்பியாய் ஆக... ஜெயா தம்பி வீட்டி லேயே தங்கி விட்டாள்.

அன்பு, திவ்யா இருவருக்கும் சம வயது!

அவன் ஆண்கள் பள்ளியிலும்... அவள் பெண்கள் பள்ளியிலும் படித்தவர்கள்! முதுகலை கம்ப்யூட்டர் பாடம் முடித்தவர்கள்!

அன்பு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வேலைத் தேட... அவனுடைய அதிர்ஷ்டம் வெளிநாட்டில் வேலை கிடைத்தது.



சிவசங்கரன் அந்த வேலை வேண்டாம் என்று ஒத்த காலில் நின்றார்.

''அன்பு... இந்த வேலை வேண்டாம்! உள்ளூரிலேயே ஒரு நல்ல வேலையைத் தேடிக்கோ! எனக்கு இந்த வேலை பிடிக்கலே!''

''ஏன் மாமா?''

''சொன்னால் கேட்கணும், அன்பு! மறுத்துப் பேசாதே!''

''நல்ல வாய்ப்பு மாமா! தவறவிட மனசு வர்லே!''

''தாய்லாந்து வேணாம்பா! வெளிநாடுகளில் கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம், கட்டுப்பாடு எல்லாம் மலிஞ்சிப் போய் கிடக்கு! விபச்சாரம் பெருகி... மலிஞ்சி... அதுவும் தாய்லாந்தில் விபச்சாரமும் விபச்சார விடுதிகளும் அதிக மாய் இருப்பதாய் தினசரி பேப்பரில் படித்திருக்கிறேன்! 'செக்ஸ் தொழிலாளிகள் நிறைந்த நாடு' என்று சர்வே எடுத்துப் போட்டிருக்கான்!''

''என்மேல் நம்பிக்கையில்லையா, மாமா?'' அன்பு கண்கள் கலங்கக் கேட்டான்.

''உன் மேல் நம்பிக்கை இருக்கு! உன் வயசு மேலதான் நம்பிக்கை இல்லை! ரெண்டும் கெட்டான் வயசு! ஆசையைக் கட்டுப்படுத்த முடியாத வயசு! மேற்கத்திய நாகரீகம், கண்றாவி என்று தறிகெட்டு... மதி கெட்டுப் போய் விட்டால்... உன்னை வளர்த்ததுக்கே அர்த்தமில் லாமல் போய்விடும்!''

அன்பு கோபமாய் சிவசங்கரனை நோக்கிக் கொண் டிருக்க...

''மாமன் வளர்த்த பிள்ளை மதிகெட்டுப் போச்சு! அப்பன் இருந்து அடிச்சி வளர்த்திருந்தால் ரொம்ப நல்லா

வளர்ந்து இருப்பான் என்று ஒரு மனிதன் என்னைக் குறை சொல்லக்கூடாது!''

அன்பு தலையில் கை வைத்து அமர்ந்து விட்டான்.

ஜெயா, சிவகாமி இருவரும் ஒரு மூலையிலும்... திவ்யா, மானசா இருவரும் ஒரு மூலையிலும் நின்று அன்புவின் நிலை கண்டு தவித்துக் கொண்டிருந்தனர்.

அத்தனை பேரும் சிவசங்கரனின் வாதத்தை மறுத்துப் பேசி அறியாத பேதைகள்!

''அன்பு... நீ சம்பாதிச்சிட்டு வருவேங்கிற... அதிகப்படியான ஆசையில... உன்னை அனுப்பிட்டு... பிறகு எங்களால் கலங்கிட்டு இருக்க முடியாது!...

நிறைய பணமும், வசதியும் அதிகரிக்க அதிகரிக்க... அந்த திமிரில்... இளமை வேகத்தில்... தப்பு தண்டாவுக்குப் போய்... தப்பானவர்களோடு கூடி... எய்ட்ஸ்ங்கிற எமனை இழுத்து விட்டுக்கிவியோன்னு பயம்தான்டா எனக்கு!''

''ஐய்யோ... மாமா...'' அன்பு காதைப் பொத்திக் கொண்டான்.

ஜெயாவுக்கு கோபம் வந்து விட்டது. தனது தம்பி இத்தனை கீழ்த்தரமாய் தன் மகனை எண்ணுகிறானே என்று பட்டென்று கேட்டாள்.

''சங்கரா... என்னடா பேசறே? யாரைப் பார்த்துடா இப்படிப் பேசறே? நான் ஒருத்தி மட்டும் வளர்த்திருந்தால்... அன்பு சோடைப் போகக்கூட வாய்ப்பிருக்கு! நீ வளர்த்த பிள்ளைடா! உன் வளர்ப்பு எப்படிப் பொய்யாகும்? நீ வளர்த்த பிள்ளை மேல் எப்படி சந்தேகம் வரலாம்?''



''நீ சும்மா இருக்கா! உனக்கு வெளிநாட்டு வேலைகளால் வரும் துன்பங்களும்... துயரங்களும்... இன்னல்களும்... இடர்பாடுகளும் தெரியாது!''

''என்னடா தெரியாது? அதான் பேப்பர்லேயும், டி.வி.யிலேயும் காட்டறானே... அதைத்தான் பார்க்கிறேனே! எனக்குத் தெரியாதா? என் மகன் இதுவரை உன்னை எதிர்த்துக் கேள்வி கேட்டதுண்டா? ஆசைப்பட்டு எதையாவது கேட்டதுண்டா? முதன் முதலா இந்த வெளிநாட்டு வேலை மேல் ஆசைப்பட்டிருக்கான்! அனுப்பி வை, சங்கரா! என் பிள்ளையும் நாலு காசு சம்பாதித்து... சௌகரியமா வாழ வேண்டாமா?''

''பேஷா...! யார் வேண்டாம் என்றா? அந்த வேலையை இங்கேயே செய்து சம்பாதிக்கச் சொல்?''

''எவன் வெளிநாட்டுல குடுக்கறாப்போல... பெரிய தொகையை சம்பளமா இங்கே தூக்கித் தருவான்? என் மகன் சீக்கிரம் முன்னேறணுமான்னால் வெளிநாட்டு வேலை, சம்பளம்தான் நல்லது!''

''போயிட்டு ஒரு வருஷத்துல சம்பாதிச்சிட்டு... பிறகு இங்கேயே வந்து சேர்!''

மனமே இல்லாமல்தான் அன்புவை தாய்லாந்திற்கு அனுப்பினார், சிவசங்கரன்.

தனது நண்பன் கௌதமும், அன்புவும் வெளிநாடு பயணமானார்கள். வேலையில் சேர்ந்தார்கள்.

அவன் வேலை பார்க்கும் கம்பெனி வெள்ளி, தங்க நகைகளை புதுப்புது டிசைன்களில் வடிவமைத்து... உள்நாட்டிலும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து... விற்பனை செய்தது.

அன்புவுக்கு அக்கௌண்ட் செக்ஷனில் வேலை! அக்கௌண்டை முடித்த கையோடு... கௌதம் புதுப்புது டிசைன் நகைகளை வடிவமைப்பதை... அவன் அருகில் அமர்ந்து பார்க்க... அன்புவுக்கும் அதன் மேல் ஆர்வம் வந்தது.

அந்த ஆர்வம், ஆசையோடு... அவனும் சில மாடல்களை உருவாக்கி எம்.டி.யிடம் காட்ட உளமாறப் பாராட்டினார்.

அன்றிலிருந்து அன்புவின் எண்ணங்களும், கற்பனைகளும் நகைகளாய் மாறியது. அந்த செக்ஷனுக்கு மாற்றப்பட்டு... சம்பளத்தை கம்பெனி உயர்த்திக் கொடுத்தது.

இருவரும் சம்பாதித்த தொகை... கணிசமாய் உயர்ந்து சேமிப்பாய் இருக்க...

இரண்டு பேரும் கம்பெனியை விட்டு வெளியேறி... சிறிய அளவில்... தானே தொழில் செய்து... முன்னேற ஆசை வந்தது.

இந்தியாவிற்கு வந்து மாமாவிடம் கேட்க சப்தம் போட்டார்!

''ஒரு வருடத்திற்குதானே உனக்கு அனுமதி கொடுத்தேன்! சம்பாதிச்சது போதும்! இந்தியாவிலேயே அதை வைத்துத் தொழில் செய்ய முயற்சி செய்!''

''மாமா... சம்மதிங்க! கௌதமும், நானும் சேர்ந்து... பிசினஸ் ஆரம்பித்து... நல்ல நிலைக்கு வர அருமையான வாய்ப்பிருக்கு! கெடுத்துடாதீங்க, மாமா!''

அன்பு கெஞ்ச...



''நான் சம்மதிக்கணும்ன்னால் ஒரு வழியிருக்கு!''

''என்ன வழி, மாமா?''

''கல்யாணம் செய்துட்டு... பிறகு தொழிலை, எங்கே வேணா செய்!''

''என்ன மாமா சொல்றீங்க?'' அன்பு அதிர்ந்து விட்டான்.

''திவ்யாவை கட்டி, உன்னோட கூட்டிட்டுப் போ! சந்தோசமாய் அனுப்பி வைக்கிறேன்!'' என்ற சொல் அன்புவை வெடிகுண்டாய் தாக்கியது.

ஏனென்றால், திவ்யாவின் மேல் ஒரு நாளும் ஆசையோ, ஈர்ப்போ வந்ததில்லை!

திவ்யாவும் அவனோடு அவ்வளவாய் ஒட்டமாட்டாள், சிறு வயது முதற்கொண்டே!

அதனால் அவளை ஒருநாளும் தன் பிரியசகியாய் கற்பனைகூட செய்து பார்த்ததில்லை!

எந்த நேரமும் சுறுசுறுப்பாய்... துறுதுறுப்பாய்...

வாயாடிக் கொண்டு... அவன் பின்னே சுற்றிய... மானசாவைத்தான், அவனுக்கு நிரம்பப் பிடிக்கும்!

'மானு... மானு...' என்று அவனும், 'அன்பு அத்தான்' என்று அவளும் பின்னோடே அலைவார்கள்.

அன்புவுக்கு எந்த வயதில்... எப்போது... மானசா மேல் காதல் வந்தது என்று தெரியாது! ஆனால், அந்த நேசம் இப்போது விஸ்வரூபம் எடுத்து... விழுதாய் அவன் இதயத்தை பற்றிக் கொண்டிருக்கிறது.

அவன் விரும்பிய பெண், மானசா!

அவன் சுவாசமாய் எண்ணிய பெண், மானசா!

அவன் இதயத்தை ஆக்கிரமித்து... அரசாட்சி செய்து கொண்டிருக்கும் பெண், மானசா!

அவன் உடல், உயிர், ஆன்மா, இதயம் அத்தனையுமே மானசாதான்!

மானசாவின் மேல் உயிரையே வைத்து... அவளையே சுவாசமாயும் வாழும் அன்பு... மாமாவின் சொல் கேட்டு அரண்டு விட்டான்.

நேசிப்பது ஒரு பெண்ணையும்...

நெறி தவறி... வேற்று பெண்ணை தொட்டு, தாலி கட்டி, குடும்பம் நடத்துவது எப்படி? எப்படி அவன் ரெட்டை வேடம் போடுவான்? வாழ்க்கை என்ன கதைக் களமா? நாடக மேடையா? அவன் சந்தோஷமாய் 'டபுள் ஆக்ட்' கொடுக்க?

திவ்யாகூட அப்படி ஒரு கனவு காணவுமில்லை! கற்பனை செய்து பார்த்ததில்லை!

அவளும் மருண்டு விட்டாள்!

அன்பு அவசரமாய் சொன்னான்!

''எனக்குக் கல்யாணமும் வேண்டாம்! வெளிநாட்டு தொழிலும் வேண்டாம்!''

''ஏன்?''

கல்யாணம் பண்ற வயசில்லே, எனக்கு! ஆளை விடுங்க சாமி!'' என்று மனம் நொந்து வெளியேறினான்.

''அன்புவுக்கும், திவ்யாவுக்கும் சம வயது! சரி வராது சங்கரா! என் பிள்ளை நல்ல வாலிபமாய் இருக்கும்



போது... திவ்யா வயசாகிப் போவாள். பெண்ணுக்கும் பையனுக்கும் குறைந்தது ஐந்து, அல்லது ஏழு வயது இடைவெளி இருக்கணும்! அதுதான் நல்லது!'' ஜெயா சொல்ல...

சிவசங்கரன் எதையும் தன் காதில் போட்டுக் கொள் ளாமல்... தன் போக்கில்...

அன்பு, திவ்யாவின் ஜாதகத்தை எடுத்தார். பத்து பொருத்தமும் பொருந்தி இருப்பதாய் ஜோசியர் சொல்ல...

வீட்டு உறுப்பினர்களை ஹாலில் அமரச் செய்தார்.

அன்பு தவித்துக் கொண்டிருந்தான். திவ்யா பயந்து கொண்டிருந்தாள்.

''நான் சொல்லப் போறது நல்ல செய்தி! யாரும் மறுத்துப் பேசக்கூடாது! அன்பு, திவ்யாவின் ஜாதகத்தைப் பார்த்தேன்! பத்துக்குப் பத்து பொருத்தமும் பொருந்தி நல்லா இருக்கு! ரெண்டு பேரையும் சேர்த்து வைத்தால் அமோகமாய் வாழ்வார்களாம்! நான் பத்திரிகை அடிக்கச் சொல்லிட்டேன்!'' என்று முடிக்க...

அன்பு பதறி... கண்களில் வலியுடன் மாமனை நோக்கி...

''மாமா... எனக்கென்ன வயசாகுது? இப்போ கல் யாணம் தேவையா? வேண்டாம், மாமா! உங்க விருப் பப்படி உள்ளூரிலேயே வேலை தேடிக்கிறேன்!''

''நான் முடிவு பண்ணிட்டேன்! திவ்யா உனக்குதான்னு எப்போதோ முடிவு செய்து வைத்திருந்தேன்!''

''வேணாம், சங்கரா! தலைச்சன் பிள்ளைக்கு தலைச் சன் பிள்ளையை மணம் முடிக்கக் கூடாது! அது சரி வராது!''

"நீ எந்தக் காலத்தில் இருக்கேக்கா? சில பையன்கள் தன்னைவிட மூத்த பெண்களை கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள்! நம்ம இண்டியா கிரிக்கெட் டீமில் அதிரடி ஆட்டக்காரர்கள் சிலர் தங்களைவிட வயதில் மூத்த பெண்களை மணந்து இன்பமாக வாழ்வதை பேப்பரில் படிக்கவில்லையா? பெயர் பொருத்தம், ராசி பொருத்தம், நாள் பொருத்தம், ஆயுள் பொருத்தம் அத்தனையும் ரொம்ப நல்லாயிருக்கு! அப்புறமும் ரெண்டையும் இணைக்கறதுல என்ன தப்பு? வயசா...? அதைத் தூக்கி குப்பையிலே போடுக்கா! திவ்யா என்றுமே இளமையாய் இருப்பாள். உன் தம்பி... உனக்கும், உன் பிள்ளைக்கும் கெடுதி செய்வேனா? என்னை நம்புக்கா!" என்று சங்கரன் சொல்ல... ஜெயா வாயை மூடிக் கொண்டாள்.

'எல்லாப் பொருத்தமும் இருக்க... மனப் பொருத்தம் இல்லையே! என் மனதில் உள்ளவள் மானசா என்று எப்படி சொல்லுவேன்? மாமா ஒரு முடிவை எடுத்தால் மாற்றிக் கொள்ளவே மாட்டார்' என்று தெரிந்தவன், அன்பு-

அன்பு எத்தனை கெஞ்சியும்... சிவசங்கரன் கொண்ட கொள்கையிலே, செயலிலே பிடிவாதமாய் இருந்தார்.

அன்பு சுருண்டு விட்டான்! கலங்கி கண்ணீர் விடுவதைத் தவிர... அவனால் எதுவும் செய்ய முடியவில்லை!

அவனுடைய தந்தை இறந்து... தவித்த போது... தெய்வமாய் தாங்கிக் கொண்டவர் சிவசங்கரன். ஒரு நாள் கூட அவனையும், அவனுடைய அன்னையையும் காப்பாற்ற சலித்துக் கொண்டதில்லை. அவர் மட்டும்



நேசக்கரம் நீட்டாவிட்டால்... இந்த அளவு முன்னேறி இருக்க முடியாது! தன் பிள்ளைகளோடு பிள்ளையாய் அவனையும் சேர்த்து வளர்த்தவர்!

அவருடைய வார்த்தைக்கு மறுப்பு சொல்ல முடியாமல் கஷ்டப்பட்டான்.

திவ்யாவும் நல்லவள்தான்! அழகிதான்! ஆனால் அவளுடைய அழகு அவனை ஒரு நாளும் கவர்ந்ததில்லை.

அடக்கமானவள்! நல்ல புத்திசாலி! வகுப்பில் எப்போதுமே முதலிடமே வருவாள்!

மானசா சுறுசுறுப்பு... துறுதுறுப்பானவள்! ஊசிப் பட்டாசாய் வெடிப்பாள்! அவள் இருக்கும் இடம் கலகலப்பாய் இருக்கும்! எவரையும் தன் பேச்சால்... தன் வசீகரத்தால்... தன் வதனத்தால்... தன் செயலால் சட்டென்று கவர்ந்து விடுவாள்.

திவ்யா அதிர்ந்து பேசமாட்டாள்! யாரோடும் ஒட்டவே மாட்டாள்! அன்புவைப் பார்த்தால் சிறு புன்னகை செய்வாள். தன் அறையில் பூட்டிக் கொண்டு... புத்தகத்தை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருப்பாள்.

ஆனால், மானசா அன்புவிடம் வாயாடுவாள்! அவனோடு உட்கார்ந்து செஸ், கேரம்... அடுத்ததாய் டென்னிஸ், கிரிக்கெட் என்று விளையாடுவாள். நேரத்திற்கு சாப்பாடு, காபி என்று மறக்காமல் கொடுப்பாள். அவன் உடைகளை துவைத்து... அயர்ன் செய்து கொடுப்பாள். ஷூக்களுக்கு பாலீஷ் போடுவாள்! பாடத்தில் வரும் சந்தேகங்களைக் கேட்பாள்! அறிவியல் ரெக்கார்டு நோட்டில் படம் வரைந்து தரச் சொல்லுவாள்!

திவ்யா... தந்தை சிவசங்கரன் போல...!

மானசா... தாய் சிவகாமி போல...!

எந்த நேரமும் தன்னோடு ஒட்டிக் கொண்டு திரிந்த மானுவிடம் ஈர்ப்பு வந்து காதலிக்கத் தொடங்கினான்! அந்தத் தொடக்கம் எப்போது என்று தொடங்கியவனுக்கே தெரியாது!

அவன் நேசம்... நெருப்பில் விழுந்த ரோஜாவாய் தீய்ந்து போனது!

அவன் அன்பு... ஆழ்கடலில் மூழ்கிய கப்பல் போல கரையேறாமல் போனது!

அவன் ஆசைகளையும், எண்ணங்களையும், கனவு களையும், கற்பனைகளையும் மாமன் தீயிட்டுக் கொளுத்தி விட்டார். அவனுக்கென்று ஒரு மனமும்... அந்த கற்பக கிருபத்தில் மானசா என்ற தெய்வமும் குடிகொண்டு இருப்பதை அறியாமல்... மாமன் அவன் தலைவிதியை மாற்றி அமைத்து விட்டார்.

அன்பு... விதி வழியே செல்வதைத் தவிர... வேறு மாற்றுப் பாதையில்லை என்பதை அறிந்தான்.

அன்பு பலிக்குப் போகும் ஆடாய் கலங்கி... மண வறைக்குப் போய்... திவ்யாவை மணந்து... மாலை மாற்றி... அம்மி மிதித்து... அருந்ததி பார்த்து... மெட்டி போட்டு மணவறையை வலம் வந்து மனைவியாக்கிக் கொண்டான்.

மானசா பட்டுப் பாவாடை, தாவணியில் மானாய் துள்ளினாள். அவளைக் காணும் போதெல்லாம்... அன்பு வின் கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.



திவ்யாவோடு ஏற்பட்ட தனிமையில்... மானசாவின் மேல் தான் கொண்ட காதலைக் கூறிவிட நினைத் தான்.

ஆனால், தன் கணவன்மார்களின் பழைய காதலால்... எத்தனை குடும்பங்கள் நடுத்தெருவுக்கும், விவாகரத்துக் கும் கோர்ட் படியேறியிருக்கிறது என்று அறியாதவன் அல்ல அன்பு!

சில பெண்கள்... தங்கள் கணவனின் கடந்த கால காதலை, காதல் தோல்வியைக் கேட்டு... 'அடப் பாவமே...' என்று இரங்குபவர்களும் உண்டு!

'நீங்க ஒரு பெண்ணை உயிருக்குயிரா காதலிச்சீங் களா? உங்க காதல் நிறைவேறவில்லையா? பொய்த்து விட்டதா? அடப்பாவமே! நீங்க கவலையேப் படாதீங் கப்பா! நான் இருக்கேன்! அவள்கிட்ட கிடைச்ச அன்பை விட... என்கிட்ட நிறைய இருக்கு! அள்ள அள்ளக் குறை யாமல் இருக்கு! கலப்படம் இல்லாமல் உண்மையான, தூய்மையான அன்பு என்கிட்ட ஏராளமா மலைபோல குவிஞ்சி கிடக்கு! உங்களை அந்த அன்பால் குளிப் பாட்டறேன்! நான் அவள் இல்லாமல் இருக்கலாம்! என் முகம், என் உடல்தான் மாறி இருக்கு! அவள்கிட்ட அனுபவித்த... அதே மாறாத அன்பும், உள்ளமும் என்கிட்டேயும் இருக்கு! வா என் செல்லமே! என் மடியில படுத்துக்கோ! உன்னை தினம் தினம் தட்டி தாலாட்ட றேன்! நான் உங்களுக்கு ஒரு பாசமான அம்மாவா... ஒரு நல்ல காதலியா... நற்பண்புள்ள மனைவியா இருப்பேன்!' என்று தன் கணவனின் பழைய நேசம் பொய்த்துப் போனதை எளிதாய் எடுத்துக் கொண்டு... அவன் மேல்

இரக்கம் கொண்டு... 'அந்தக் காதலியைவிட உயர்ந்தவளாக வேண்டும், இவரின் இதயத்தில்!' என்று சில பேர் இழுத்து அணைத்துக் கொள்வார்கள்.

'அடப்பாவி...! துரோகி...! என்னை ஏமாத்திட்டையோ ஏற்கனவே ஒரு பெண்ணை நேசிச்சவனா...? அவளை நெஞ்சில் சுமந்தவனா...? தொட்டு, கட்டி விளையாடியவனா? இதயத்தை அவளிடம் கொடுத்துவிட்டு... இதயமே இல்லாதவனாய்... என்னைக் கட்டிக் கொண்டாயா...? ச்சே! ச்சே! உன்னைப் பார்க்கவே அருவெறுப்பாய் இருக்கு!...

நீ அவளிடம் எப்படிப் பழகினாயோ...! அவளை எப்படிக் கொஞ்சினாயோ...! அவளையே வட்டமிட்டு வளைய வந்தாயோ...! என்னைத் தொடும்போது... உனக்கு அவள் ஞாபகம் தானே வரும்! என் சிரிப்பில்... என் பேச்சில்... என் அன்பில்... என் பாசத்தில்... என் அணைப்பில் அவள் இருக்கிறாளா? அவளின் பிரதிபலிப்பு உள்ளதா என்றுதானே பார்ப்பாய்! என்னில் அவளைத் தானே காண்பாய்! நான் அவளாய் இருக்க மாட்டேன்! நான் நானாக இருக்கவே விரும்புகிறேன்! நீ எனக்கு வேண்டாம்! நான் போகிறேன்!' என்று போகிறவர்களும் பல பேர் உள்ளனர்.

திவ்யாவை இதில் எந்த ரகத்தில் சேர்ப்பது? பழைய காதலைச் சொல்லி... ஒரு புயல் தன் வாழ்க்கையில் வீசிவிட்டால்... அதில் சிக்கி எவ்வாறு கரையேறுவது? வேண்டாம்! என் நேசம் என்னுள்ளே... என் ஆழ் மனதினுள்ளே... ஒரு மூலையில் கிடந்து விட்டுப் போகட்டும்! என் ரகசியம்... என்னுள்ளே புதைந்து விட்டு போகட்டும்!



என்று தன்னைப் பற்றி திவ்யாவிடம் அன்பு சொல்லவேயில்லை!

முதலிரவு அறை...

கட்டில் தன்னை இளம் பெண்ணாய் அலங்கரித்துக் கொண்டிருந்தது! மேஜையில் இருந்த ஊதுவத்தியின் மணம்... அறை முழுக்க பரவி... ஒரு ரம்யத்தை ஏற்படுத்த... தன்னை எதிலும் ஈடுபடுத்திக் கொள்ளாமல்... மரக்கட்டையாய் அமர்ந்திருந்தான், அன்பு!

திவ்யா முகம் முழுக்க நாணத்தைப் பூசிக் கொண்டு... மெல்லிய புன்னகையுடன்... தேவதையாய் வந்தாள். அன்புவிடம் பால் சொம்பை நீட்ட... அதை வாங்கி அருகில் இருந்த ஸ்டூலில் வைத்தான்.

அன்புவின் காலில் விழுந்து வணங்கியவளை... அவன் தூக்கவேயில்லை! எத்தனை சினிமா, டி.வி. நாடகங்களில் முதலிரவு காட்சிகளைப் பார்த்திருக்கிறாள். நாயகி காலில் விழுந்து வணங்க... நாயகன் அன்போடு, ஆசையோடு, மோகத்தோடு அள்ளி அணைத்துக் கொள்வான்.

முதலில் திவ்யாவுக்கு இந்த செயல் ஏமாற்றம்தான்! தன் ஏமாற்றத்தை சமாளித்து, எழுந்து, அவன் அருகில் ஒட்டிக் கொண்டு அமர்ந்தாள்.

அன்பு மெல்லப் பேசினான்.

"திவ்யா... இத்தனை சீக்கிரம் கல்யாணம் நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை! கல்யாணத்தில் என் மனம் இன்னும் ஒன்றவேயில்லை! மற்ற சமாச்சாரங்களை... நாம் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து... விரும்பிய பிறகு வைத்துக் கொள்வோமா?"

அடுத்த ஏமாற்ற அலை கரைபுரள சமாளித்தாள்.

''நாம் இருவரும் மனதால் ஒன்றுபட்டு... பிறகு உடலால் ஒன்றுபடலாம், திவ்யா! ஒரு மாதமோ... ஒரு வருடமோ... கூட ஆகலாம்! நீ என்னைப் புரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன்! ப்ளீஸ்... நாம் இருவரும் உடனடியாய் தாய்லாந்து போகலாம்! மாமா ஏற்கனவே உனக்கு விசாவும், பாஸ்போர்ட்டும் எடுத்து வைத்தது எவ்வளவு நல்லதாப் போச்சு! உடனே கிளம்பலாமா? உனக்கு சம்மதமா?''

திவ்யா தலையாட்டினாள். உடனடியாய் எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிளம்பி னார்கள்.

அரசாங்கத்திடம் அனுமதி பெற்று... குறைந்த விலையில்... ஒரு பழைய கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து... ஆட்களை அமர்த்தி... தொழிலைத் தொடங்கி னார்கள்.

மாதங்கள் செல்லச் செல்ல... உற்பத்தி அதிகமாகி... விற்பனையும் அதிகமானது! ஏற்றுமதி சிறந்து விளங் கியது.

மலேசியா, சிங்கப்பூர், சீனா, வியட்நாம், அமெரிக்கா, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலெல்லாம் இவர்களின் நகைகளுக்கு நல்ல மவுசு இருந்தது.

திவ்யா தாய்லாந்தின் மொழியான 'தாய்' என்ற மொழியைக் கற்றுத் தேறினாள். அவளும் அவனோடு ஆபீஸ் புறப்பட்டுப் போய் கடுமையாக உழைத்தாள்.



கல்யாணத்திற்கு முன்பு இருந்த திவ்யா தலை கீழாக மாறி அவனை அன்பாலேயே அபிஷேகம் செய்தாள்.

அவளுடைய அன்பும்... காலமும்... அவன் மனப் புண்ணை ஆற்றியது!

வியாபாரமும் பெருகி... அருகருகே இரு பெரிய பங்க ளாவை வாங்கி... அன்புவும், திவ்யாவும் கௌதமும், கீதாவும் குடியேறினர்.

புது பங்களாவில்... இருவரும் மனம் ஒத்து... உட லாலும் இணைந்து... சமீபமாய் வாழ்கின்றனர்.

உடனே இந்தியாவிலும் நல்ல அழகிய பங்களாவை வாங்கி மாமனுக்குப் பரிசளித்தான், அன்பு.

வசதி பெருகிய பின்புதான் சிவசங்கரன் மானசாவின் படிப்பிற்கு தடைப்போட்டதெல்லாம்!

அன்பு நிகழ் காலத்துக்கு வந்து... திவ்யாவைப் பார்த்து புன்னகைத்தான்!

''என்னத்தான்... பழைய ஞாபகமா?''

''ம்...''

''நாம ரெண்டு பேரும் இவ்வளவு நாள் வாழ்க்கையை விரயமாக்கிகிட்டோமே, அத்தான்! சரியா...?'' திவ்யா கேட்க...

அவன் சரியென்று புன்னகைத்தான்!

இனிதான் இருவருக்கிடையே பெரிய பிரிவே ஏற்படப் போகிறது என்று தெரியாமல்!

# 5

**"அன்புடையார் இருக்குமிடத்தில் இன்பங்கள் பெருகும்**
**அன்பிலார் வசிக்குமிடத்தில் குற்றங்கள் பெருகும்"**

நாளெல்லாம் வெய்யிலின் உக்கிரத்தில் களைத்து களையிழந்து காணப்பட்ட பூமிப்பெண்... தென்றலின் தாலாட்டில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்ட அழகான மாலைப் பொழுது!

மானசா கல்லூரி முடிந்ததும், தன் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்!

மானசாவின் உடல்தான் வண்டி ஓட்டியதே தவிர... அவளுடைய மனம்... அவளை மட்டும் தனிமையில் தவிக்க விட்டுவிட்டு... மைக்கேலிடம் போய் விட்டது!

மானசாவை கேளாமலேயே... மைக்கேல், அவளுள் மெல்ல மெல்ல ஊடுருவிக் கொண்டிருந்தான். 'மனப் பிரதேசம்' முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டான்.

நாள் முழுக்க அவனை பிரியமுடன், அன்புடன், ஆசையுடன் நோக்குவதும்... படிப்போடு கூடிய அவளின் முக்கியமான வேலைகளில் ஒன்று!

இது தப்பு என்று தெரிந்தும், அவளால்... அவளையே கட்டுப்படுத்த முடியவில்லை!

அப்பாவின் எதிர்ப்பு... அவளின் காதலுக்கு அதிகமாய் இருக்கும் எனத் தெரிந்தாலும்... அவளால் மைக்கேலை நினையாமல் இருக்க முடியவில்லை!



ஜாதி, மதம், இனம் பார்த்தா... காதலும், பிரியமும், அன்பும் தோன்றும்? காதல் இயல்பானது! அது யாருக்கு, யார் மேல், எப்போது தோன்றும்? என்று அந்த இறைவ னாலும் கணித்துச் சொல்ல முடியாது!

காதலுக்கு ஒப்புமையே கூற இயலாது!

காதலுக்கு மொழி, இனம், மதம் பார்க்கத் தெரியாது!

இயல்பாய் இதயத்தில் வேர்விட்டு, கிளை பரப்பி, விழுது விட்டு பூக்கும் செயல் அது!

ஜாதி, மதம், இனம், பொருள், சொத்து, பணம், அழகு, நிறம், அந்தஸ்து பார்த்து வருவதற்கு பேர் காதலே யில்லை! அப்படி அனைத்தும் பார்த்து தன் வாழ்க்கைக்கு பிற்காலத்தில் ஒரு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்வது... காதல் விபச்சாரம்! கள்ளத்தனமாய் பாதுகாப்பு தேடும் வெறித்தனமான ஈனச்செயல்!

அவளுள் விரவிய காதலால்... பிறகு, பெரிய யுத்தமே நடக்கப் போகிறது என்று... கண் முன்னே பயங்கரமான அப்பாவின் ருத்ர தாண்டவ காட்சிகள் விரிந்தாலும்... அவளால் மைக்கேலை நேசிக்காமல் இருக்க முடியாது!

அப்பா இதை அறிந்தால் கழுத்தை நெரித்துக் கொல் லவும் செய்யலாம்! ஆனாலும் பயமின்றி... அவளுள் நுழைந்து விட்டது... அவன் மேலான நேசம்!

கடலின் ஆழ் பகுதி போல் அமைதியாய் கிடந்த மனம்... கடலின் மேல் பகுதி போல் ஆர்ப்பரித்து... அலையலையாய் பொங்கிய அன்பும், ஆசையும்... அவள் மனதை சித்ரவதைச் செய்தது.

ஆசை மனிதனை அபாரத் துணிச்சலுள்ளவர்களாக மாற்றுகிறது! கோழைக்குக்கூட மனதில் ஆசை புகுந்து

துணிச்சலுள்ளவனாக மாறி விடு விட்டால் அபார துணிச்சலுள்ளவனாக மாறி விடுகிறான்.

இங்கே மானசாவும் வீரப்பெண்மணியாகிக் கொண்டிருக்கிறாள்!

மைக்கேலின் நினைவுகள் இம்சிக்க... அதனை ஒதுக்கி விட்டு கவனமாய் வண்டி ஓட்டாமல்... ஏனோதானோ வென்று சென்றவள் ஒரு திருப்பத்தில் எதிரே வந்த லாரியை கவனியாமல் போய் நேரே விட...

மானசா தூக்கியெறியப்பட்டாள்!

லாரிக்காரன் அஜாக்கிரதையாய் வந்திருந்தால் இன்னேரம் கூழ் கூழாகி சிதறி இருப்பாள்!

யார் செய்த புண்ணியமோ... காயங்களுடன் தப்பித்தாள்.

ஒரு பெரும் கூட்டம் கூடி வேடிக்கைப் பார்த்தது.

ரத்தம் ஒழுக மயங்கிக் கிடந்தவளுக்கு முதல் உதவி செய்யாமலேயே மனித நேயமற்ற மக்கள் கூட்டம் ஒன்றுகூடி வேடிக்கைப் பார்க்க...

கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்த மைக்கேல் மானசாவைக் கண்டு அதிர்ந்தான்.

சட்டென்று அள்ளியெடுத்து... அருகில் இருந்த ஆட்டோவில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குப் பயணமானான்.

மைக்கேல் கல்லூரி முடிந்து... ஒரு டுடோரியல் காலேஜில் மாலை நேரம் வேலை பார்த்து ஐயாயிரத்திற்கு மேல் சம்பாதிக்கிறான், அப்படி வந்தவன்தான் மானசாவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகிறான்.



மானசாவின் மேல் வழிந்த ரத்தத்தை தன் கைக்குட்டை கொண்டு துடைத்து... மயங்கிக் கிடந்தவளை ''மானசா... மானசா'' என்று அழைக்க... அவள் மயக்கம் தெளிந்த பாடில்லை!

அவள் பையில் இருந்த செல்போனை எடுத்து... அவள் வீட்டிற்கு போன் செய்து...

''அம்மா... நான் மைக்கேல்! அவங்களோட க்ளாஸ் மெட்! மானசாவுக்கு சின்ன ஆக்ஸிடெண்ட்! பயப்படும் படி எதுவும் இல்லை!''

''ஐய்யோ...'' என்று சிவகாமி அலற...

''நான் சொல்றேன் இல்லீங்கம்மா! அச்சப்படும்படி எதுவும் ஆகலே! ஆஸ்பிட்டல் கோகிலத்துக்கு வந்துடுங்க!'' என்று போனைக் கட் செய்தான்.

ஸ்டெச்சர் வர... அவளை அதில் கிடத்தி நர்ஸுகள் தள்ளிக் கொண்டு ஓடினர்.

மானசா அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டாள்.

மைக்கேல் கதவுக்கு வெளியே கையைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தான்.

அவளுக்கு அவசரமாய் ரத்தம் தேவைப்பட... அவளுடைய வகையைச் சேர்ந்த ரத்தமே அவனுக்கும் இருக்க... மானசாவிற்கு தேவையான ரத்தம் கொடுத்தான்.

கொஞ்ச நேரம் கழித்து சிவசங்கரனும், சிவகாமியும் பதறியடித்துக் கொண்டு ஓடி வந்தனர்.

மைக்கேலைக் கண்ட சிவசங்கரன் கோபமானார்.

ஒரு இளைஞன் மானசாவை அள்ளி, அணைத்து, தூக்கிக் கொண்டு வந்து ஆஸ்பிட்டலில் அட்மிஷன்

செய்தான் என அறிந்ததிலிருந்து கொதித்துப் போயிருந் தார்.

''தம்பி... நான் அவளுடைய தகப்பன். நாங்க வந்துட்டோம்... இல்லையா? நீங்க கிளம்பலாம்'' என்று பட்டென்று சொல்ல... மைக்கேலுக்கு ஒரு மாதிரி ஆனது. ஆனாலும்...

''சார்... சிகிச்சை முடிந்து... அவங்களுக்கு மயக்கம் தெளியட்டும்! பார்த்துட்டுப் போயிடறேன்!''

''இந்த அளவு நீங்க அவள் மேல் அக்கறை காட்ட... அவளுக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு?'' என்று ஆங்காரமாய் கேட்க...

'ஆபத்தில் உதவுவது தப்பா? ஏன் இவர் இவ்வாறு நடந்து கொள்கிறார்?' என அறியாமல் மைக்கேல் முகம் கறுத்துச் செல்ல...

அவனை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்ட நிம்மதி யில் வெற்றி சிரிப்பொன்றை வீசினார், சிவசங்கரன்.

ஆனால், அவனோ தனது மகளின் மனதில் ஏறி... சிம்மாசனம் போட்டு அமர்ந்து விட்டான் என அறியாமல்!

## 6

**''மறக்கக் கூடாதது... மற்றவரின் உதவியை!**

**மறக்கக் கூடியது... மற்றவரின் துரோகத்தை!''**

மைக்கேல் ஒரு அநாதை!

பிறந்த அன்று தொப்புள் கொடியை அறுத்த தாய்... அவனுக்கும் அவளுக்கும் உள்ள உறவை அறுத்துக்



கொண்டு... கொட்டு பனியில் அந்த சர்ச் வாசலில் அவனைப் போட்டுவிட்டு போய் விட்டாள், அந்த கொடூர குணம் படைத்த தாய்! இல்லையில்லை அவள் தாயில்லை... அவள் பேய்! பிணம் தின்னி! சாத்தான்!

குழந்தையின் அழு குரல் கேட்டு பாதர் வில்லியம்ஸ் எழுந்து வந்த பார்க்க... பனியில் நனைந்த ரோஜாவாய்... உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகுடன் கிடந்த வனை எடுத்து அணைத்துக் கொண்டார்.

அன்றிலிருந்து அவனும் அவரின் பிள்ளையானான்!

மற்ற குழந்தைகளைவிட மைக்கேல் பாதரிடம் உயி ராய் இருந்தான்!

மைக்கேலின் ஞானத் தந்தையானார், வில்லியம்ஸ்! அவர் சொல்லே வேதமாய் வாழ்பவன்!

கல்லூரியை ஒட்டியிருந்த சர்ச்தான் அவன் வாசம் செய்யும் இடம்!

அவன் தாய், தந்தையெல்லாம் இறைவன் ஏசுவும், பாதர் வில்லியம்ஸும்தான்!

கண்காணாத தெய்வம் இறைவன் ஏசு!

கண்கண்ட தெய்வம் பாதர் வில்லியம்ஸ்!

அவன் வளர வளர 'தான் ஒரு அநாதை' என்ற எண் ணம் அதிகமாகி... உள்ளுக்குள்ளே ஊமையாய் உருக் குலைய... அதைக் கண்ட பாதர் எவ்வளவோ அறிவுரை களைக் கூறி தேற்றியிருக்கிறார்.

''மைக்கேல் இந்த உலகில் ஜனித்த எந்த உயிரியுமே அநாதையில்லை! நான் உனக்கு உறவு! நீ எனக்கு உறவு! நமக்கெல்லாம் பெரிய உறவுக்காரன், இறைவன்! நம்மை யெல்லாம் படைத்த ஏசுப்பா இருக்க... நாம் எப்படி அநாதையாகலாம்? ம்?

"மைக்கேல்... எனக்கு அப்பா, அம்மா, தங்கை, தம்பி என ஒரு உறவுப் பட்டாளமே இருந்தது. ஒரு திருமணத்திற்குச் சென்றபோது... எங்கள் கார் ஆக்ஸிடெண்ட்டாகி... அதில் அனைவரும் இறந்துவிட... நான் மட்டும் அதிர்ஷ்ட வசமாய் உயிர் பிழைத்தேன்! நானும் உன்னைப்போல சஞ்சலப்பட்டு... உலகை வெறுத்து இறந்திருக்கலாம். ஆனால் ஏசப்பா கொடுத்த உயிரைப் போக்கிக் கொள்ள... எனக்குத் துணிச்சலில்லை!

நானும் வளர்ந்து உன்னைப்போல அநாதையாய் விடப்பட்டவர்களுக்கெல்லாம் தந்தையாகவும், தாயாகவும் ஆகி... அவர்களை அணைத்து ஆறுதல் சொல்ல என்ன வழி என்று யோசித்தேன்!

என்னில் உதிர்த்தது... இந்த இறைசேவகன் வேலை! இறையியல் படித்தேன்! பாதராகி எத்தனையோ ஜீவன்களுக்கு அன்பையும், பாசத்தையும், ஆறுதலையும் அள்ளி அள்ளி வழங்கிக் கொண்டிருக்கிறேன்!

மைக்கேல்... உனக்கென்று ஒரு லட்சியம் இருக்கணும்! மற்ற மனிதர்களைப்போல சாதாரண வாழ்வா...? அல்லது தன்னை இந்த மக்கள் சமுதாயத்திற்கு அர்ப்பணிப்பதா... என முடிவெடுத்துக்கொள்! அதன்படி உன்னை மாற்றிக் கொள்! நீ கொண்ட கொள்கையில் சற்றும் மனம் தளராதே, மகனே! உனக்கென்ற வழியை... உனக்கென்ற ஒரு பாதையை தீர்மானித்து வீறுநடை போடு மகனே!" என்று பேசிப் பேசியே மைக்கேலினுள் இறையியலையும், இறை சேவகனாவதையும் விதைத்தார்.

அந்த விதை வேர்விட்டு, விழுது விட்டு உறுதியாய் நின்றபோது... லேசாய் மானசாவால் ஆட்டம் கண்டது!



மானசாவின் ஒர விழிப்பார்வை... அவன் உயிரை அசைக்கும்! மானசாவின் புன்னகை... அவளிடம் அவனை புதையுறச் செய்யும்! பூகம்பமாய் அசைக்கும்! காட்டாறு வெள்ளமாய் கரைபுரண்டு ஓட அவன் மனம் முயற்சிக்கும்!

மானசாவின் இருவிழிப் பார்வை... அவன் இதயத்தில் ஆழக் கால் தடம் பதித்து கண்ணாமூச்சி காட்டும்!

அவள் வேல்விழிகள் கத்தி எடுத்து யுத்தம் நடத்த வரும்! அவனை வீழ்ச்சியடைய முயற்சிக்கும்!

இந்த சலனத்தை அப்புறப்படுத்த ரொம்பவே கஷ்டப் படுவான்!

மனம் என்ற மரக்கிளை தாவும் குரங்குக்கு விலங்கு பூட்ட ரொம்பவே சிரமப்படுவான்!

மானசாவை ஆபத்தில் அள்ளி எடுத்தபோது உடலும், உள்ளமும் நெகிழ... வேதனைப்பட்டான்! ஆசை கொண்ட மனதின் முகத்தில் காறித் துப்பினான். அதன் பிறகுதான் அந்த மனம் வாலைச் சுருட்டிக் கொண்டு அடங்கியது!

அவளுடைய தந்தை அவமானப்படுத்தியது ஒரு புறம் துன்பத்தைத் தந்தாலும்... 'அவள் எப்படி இருக்கிறாளோ? கண் விழிச்சாளா? காயம் ரொம்ப வலிக்குமா? காய்ச்சல் வந்ததா? எத்தனை தையல்கள் போட்டார்கள்? பயப் படும்படி எதுவும் இருக்குமா? அல்லது கவலை கொள்ளத் தேவையில்லாத அளவு தேறி விடுவாளா?' என்று ஆயிரமாயிரம் கேள்விகள் அவன் மனதை வண்டாய்க் குடைய தூக்கம் வரவில்லை!

சர்ச்சின் கதவு திறந்து போய் இறைவனின் காலடியைப் பற்றி கண்ணீர் விட்டான்.

அவனுக்கு நேர்ந்த அவமானத்திற்காகவும்... அவளுக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது என்றும்... விடிய விடிய மானசாவிற்காக ஏசுவிடம் முறையிட்டான்! ஜபித்தான்!

காலையில் எழுந்து என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என்று... குளித்து, உடுத்தி, உண்ணாமலையே... தனது பைக்கை எடுத்துக் கொண்டு மைக்கேல் கிளம்ப...

பாதர் வில்லியம்ஸ் புரியாமல் அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

'நேற்று அவ்வளவு கடுமையாக முகத்தை சுளித்துக் கொண்டு அவமானப்படுத்தியும்... திரும்பவும் துடைத்துக் கொண்டு வருகிறான் என்றால் என்ன அர்த்தம்?'

'மானுவுக்கும், இவனுக்கும் ஏதோ தேவையில்லாத அருவெறுக்கக்கூடிய உறவு இருக்குமோ!' என்று சிவசங்கரன் நினைத்துக் கொண்டிருக்க... அவர் அருகில் வந்து விட்டான், மைக்கேல்.

''சார்... மானசா முழிச்சாங்களா? இப்போ பரவாயில்லையா?'' என்று குரலில் அக்கறையோடு கேட்க...

''அதைக் கேட்க நீ யார்? அவளைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் எதுக்கு?'' கடுமையாகக் கேட்க...

''என்ன சார் மறந்துட்டீங்களா? நேற்று அவங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்த்தவன், நான்! அவங்களுக்கு தேவையான ரத்தத்தை கொடுத்தவன்! அவங்களோட க்ளாஸ்மெட், நான்!'' அவன் பொறுமையாய் பதில் சொல்ல...

''நல்லாத்தான் இருக்கா! நீ கிளம்பு!''



''ஒருமுறை பார்த்துட்டுப் போறேனே!''

''ஏய்... என் கோபத்தை சீண்டிப் பெரிசாக்காதே! எனக்கு கோபம் வந்தால் நீ தாங்க மாட்டாய்? போ... போயிடு!'' சிவசங்கரன் கத்த...

''என்ன சார் இப்படிப் பேசறீங்க? என்ன கேட்டேன்? மானசாவைப் பார்த்துட்டுப் போறேன்னு தானே? இதுக்கு எதுக்குக் கத்தறீங்க? கோபப்படறீங்க?''

''உனக்கு எதுக்குடா அவள் மேல் அக்கறை?''

''மனசு கேக்கலே, சார்!''

''அப்படி என்னடா உங்களுக்குள்ளே உறவு?''

''எந்த உறவுமில்லே! அவங்ககிட்ட சரியாப் பேசியது கூட இல்லை! சக மாணவன் என்ற முறையில்தான் வந்தேன்!''

''அவள் மேல் அப்படி என்ன பாசம் பொத்துட்டு ஒழுகுது?''

''ஏன் சார்... இப்படிக் காட்டுக் கத்தலா கத்தறீங்க?''

''என் துடிப்பு உனக்குக் கத்தலா தெரியுதா? பெண்ணைப் பெத்தவன்டா, நான்! வீணா ஏன்டா... வம்புக்கு வந்து கலவரப்படுத்தறீங்க? இப்படியெல்லாம் ஏதாவது ஏடாகூடமாய் செய்துட்டு வந்து எனக்கு அவமானத்தைத் தேடித் தருவான்னு தெரிஞ்சதாலத்தான்... அவளை கல்லூரியில சேர்த்துவிட மறுத்தேன்! கழுதை... எனக்கு ஆயிரத்தெட்டு ஆட்டம் காட்டி... கல்லூரியில சேர்ந்துட்டு... சேர்ந்த ஐந்தாம் மாதமே எனக்கு அல்வா கொடுக்கிறாள்! உடல் தேறி வரட்டும்! காலை ஒடிச்சி வீட்டுலேயே கிடத்தறேன்! இளங்கலை படிக்கறவரையும்

சின்னப் பெண்ணா இருந்தவள்... இப்போ பெரியவளா யிட்டாளா?''

''ஏன் சார்... இப்படியெல்லாம் பேசறீங்க? மரியாதையா பேசுங்க, சார்.''

''உனக்கெல்லாம் மரியாதை ஒரு கேடா?''

''நான் எந்த விதத்துல மரியாதை கெட்டுட்டேன்?'' மைக்கேலும் சரிக்குச் சமமாய்ப் பேச...

''போடா இடியட்! என் பெண் மனசைக் கெடுத்த பாவி நீ...!''

''சார்... என்ன பேசறீங்க? பெரியவங்கன்னு பார்க்கறேன்!''

''இல்லேன்னா என்னடா செய்வே? எங்க மானு அப்பாவி! அவள் மனசை காதல், கல்யாணம்ன்னு கலைச்சிட்டியா? உருப்படுவியா, நீ?''

''பார்த்தால் டீசண்டா இருக்கீங்க! இப்படி அடிமட்டமா பிஹேவ் பண்றீங்களே! கொஞ்சம் பண்பாடா நடந்துக்கங்களேன்!''

''நீயும் அவளும் காதலிக்கலேன்னு உன் இதயத்து மேல கை வைத்து சத்தியம் பண்ணிச் சொல்லு? சொல்லுவியாடா?''

''எனக்கும் அவங்களுக்கும் காதலெல்லாம் இல்லே! உங்க பொண்ணு ரொம்ப நல்லவங்க! யார் கிட்டேயும் அநாவசியப் பேச்சு வச்சுக்க மாட்டாங்க! நீங்க பெத்த பொண்ணையே சந்தேகப்படறீங்களே... நீங்களெல்லாம் ஒரு தகப்பனா? இப்படி ஒரு தகப்பன் இருப்பதற்கு பதிலாய்... இல்லாத நானெல்லாம் புண்ணியம் செய்தவன் தான்!''



''என்னடா ஏதேதோ பேசறே?''

''மரியாதையா பேசுங்க! எங்களுக்குள்ள எந்தத் தவறான உறவுமில்லே! நான் பார்க்க வந்தது மனசு கேட்காமல்தான்! மனிதாபிமானத்தின் அடிப்படையில் தான்! தப்புன்னா மன்னிச்சிடுங்க, சார்! உங்க பெண் பார்வை படும் இடத்திலோ... மூச்சுக்காற்று பரவியுள்ள இடத்திலோகூட போக மாட்டேன்! நான் வரேன்!'' என்றவன் பின்னர் நின்று, திரும்பி...

''மனிதனுக்கு முக்கியம் நம்பிக்கை! அந்த நம்பிக்கை தான் வாழ்க்கையின் அச்சாணி! மானசா நீங்க பெத்த பெண்! பெத்த பெண்ணின் மேல் நம்பிக்கை வையுங்க, சார்! இல்லேன்னால் இதுவரை நீங்கள் பாசம் காட்டிய தற்கும்... அவர்கள் 'அப்பா...' என்று ஒரு நாளில் பல தடவை அன்போடு அழைத்து கடவுளாய் நினைத்தது எல்லாவும் அர்த்தமற்றதாகிவிடும்!'' பட்டென்று கையெடுத்துக் கும்பிட்டுவிட்டுத் திரும்பிப் பாராமல் நடந்தான்.

கல்லூரிக்கு எப்படி வந்தான் என்று தெரியாது! அவ்வளவு கண்மண் தெரியாத கோபம்! அதுவும் தன் மேலேயே!

மதிய இடைவேளையில்... கோபத்தோடு... கல்லூரி பூங்காவில் இருந்த பெஞ்சில் படுத்திருக்க... நிர்மலா அவனிடம் வந்தாள். மானசாவைப் பற்றிக் கேட்க... அவளுக்கு ஆக்ஸிடெண்ட் ஆனது... அவளுக்கு உதவியது... இன்று காலை அவளுடைய தந்தையிடம் அவமானப்பட்டது அத்தனையுமே சீற்றத்தோடு சொல்லி முடித்தான்.

மதியமே நிர்மலா விடுப்புப் போட்டு விட்டு மானசாவின் முன்பு நின்றாள்.

அந்த நேரம் சிவசங்கரனும், சிவகாமியும் அவளையே தனியே விட்டுவிட்டு... வீட்டிற்குப் போயிருந்தார்கள்.

பழங்கள் அடங்கிய பையை மேஜை மேல் வைத்து விட்டு... மானசாவின் அருகில் அமர்ந்தாள். அங்கங்கே போட்டிருந்த தையல், பேண்டேஜைப் பார்த்துவிட்டு கேட்டாள்.

''மானசா... இப்போ பரவாயில்லையா?''

''ம்...'' என்று கண்கள் கலங்கினாள்.

''பார்த்துப் போகக்கூடாதா, மானு? அப்படியென்ன உனக்கு கவனம் சிதறும் படியான எண்ணங்கள்? நினைவுகள்? ம்?''

அந்த எண்ணச் சிதறலை, அலைக்கழிப்பை எப்படிச் சொல்லுவாள்? அதனால் மானசா மௌனமாய் இருந்தாள்.

''ஏதோ கடவுளின் கருணையால் இந்த அளவு பிழைத்திருக்கிறாய்! விபரீதமாய்... ஆகாமல் உன்னைக் காப்பாற்றிய கடவுளுக்கு நன்றி சொல், மானசா?''

''அதைப் பிறகு சொல்லிக் கொள்ளலாம்! எனக்கு அடிபட்டதுதான் தெரியும்! மயங்கிட்டேன்! என்னை யார் எடுத்துட்டு வந்து ஆஸ்பிட்டலில் சேர்த்தது? அப்பாவைக் கேட்டால் முறைக்கிறார்! அம்மாவும் சொல்ல பயப்படுகிறாள்! யார் என்னைக் காப்பாற்றியது? தெரிந்தால் ஒரு நன்றியையாவது சொல்லலாம்! தெரியுமா, நிர்மலா?''

''சத்தியமா உனக்குத் தெரியாதா? தெரிந்து என்ன ஆகப் போகிறது?'' நிர்மலா விட்டேற்றியாய் சொல்ல...



''அப்போ உனக்கு கண்டிப்பா தெரியும்! சொல்லு? சொல்லுப்பா? ப்ளீஸ்...'' என்று மானசா அவசரப்பட...

''நம்ம மைக்கேல்! டுடோரியல் காலேஜுக்கு போகும் போது... நீ அடிபட்டு இருந்ததைப் பார்த்திருக்கான். உடனடியா ஆஸ்பிட்டலில் சேர்த்து உதவினது, நம்ம மைக்கேல்தான்!''

''நிஜம்தானா? நிஜம்தானா?'' என்று ஆச்சரியப்பட்டாள், நிர்மலா.

''அப்போ நான் பொய்யா சொல்றேன்?'' என்று நிர்மலா கோபப்பட...

''சரி... சரி... கோபிக்காதே, நிம்மி! மேலே சொல்லு?''

''டாக்டர் உனக்கு ரத்தம் தேவைன்னு சொல்ல... உன்னோட குரூப் ரத்தமே அவனுடையதாகவும் இருக்க... உனக்கு ரத்தமும் கொடுத்திருக்கான்.''

''ஐய்யோ... அவர் ரத்தமும், என் ரத்தமும் கலந்து, பிணைந்து என் மேல் ஓடுதா?'' என்று முகம் மலர்ந்தவள் பின் முகம் வாடினாள்.

''இத்தனை செய்தவர் என்னைப் பார்க்கவே வரவில்லையே, நிம்மி?''

''உனக்குத் தெரியுமா?''

''அப்போ வந்தாரா? எப்போ?''

''காலையில உங்கப்பா...'' என்று மைக்கேல் கூறியது அனைத்தையும் கூறி முடிக்க...

''ஐய்யோ...'' என்று அழுதாள். கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது!

''நான் அவரைப் பார்க்கணும்! எங்க அப்பாவினால் நேர்ந்த அவமானத்திற்கு... மனப்பூர்வமாய் மன்னிப்பு கேட்கணும்!''

''மைக்கேலா... அவன் நிச்சயமா வரமாட்டான்!''

''நிம்மி... நிம்மி... நான் அவரைப் பார்க்கணும்! ப்ளீஸ்... ப்ளீஸ்... இல்லேன்னால் என் நெஞ்சே வெடித்துச் செத்துடுவேன்!'' என்று மானசா அழ... நிர்மலா புரியாமல் பார்க்க...

''யெஸ்... ஐ லைக் மைக்கேல்! ஐ லவ் மைக்கேல்!'' என்றவள் இதயமே வெடித்து விடும் அளவு கதறியழுதாள்.

# 7

## ''போராட்டங்களில் வெல்வதே மனித சக்தி!''

இரவெல்லாம் அடித்த மழையால்... விடியலில், பூமிப் பெண் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தாள்!

ஆனால், மனிதர்களோ... சுறுசுறுப்பாய் அவரவர் வேலைகளைக் கவனிக்க... கையில் குடையோடு புறப்பட்டு விட்டனர்!

மானசாவிற்கு சிவகாமி உணவு ஊட்டிக் கொண்டிருந்தாள். சிவசங்கரன் அருகில் அமர்ந்திருந்தார். நேற்று மைக்கேல் வந்ததைப் பற்றி... அவர் மூச்சுக்கூட விடவில்லை! அதனால் மானசாவும் எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை!



சிவசங்கரனின் செல்போன் இசைக்க... எடுத்துப் பார்த்தவர், கொஞ்சம் அதிர்ந்தார்.

தாய்லாந்திலிருந்து அன்புதான் அழைத்திருந்தான்.

செல்லை ஆன் பண்ணினார்.

''மாமா... பிசினஸ் விஷயமா சென்னை வரேன்! பிஸினஸ் முடிஞ்சதும்... நம்ம ஊருக்கு வந்து உங்களையெல்லாம் பார்த்துட்டுக் கிளம்பலாம்ன்னு இருக்கேன்! அம்மா, அத்தை, மானு எல்லாம் நலம் தானே?'' என்று கேட்க... மறைக்க முடியாமல்...

''மானுவுக்கு...'' என்று இழுக்க...

''மானுவுக்கு என்ன, மாமா?'' என்று அன்பு அவசரப்பட்டான்.

''சின்ன ஆக்ஸிடெண்ட் மாப்பிள்ளை! கோகுலத்துல அட்மிட் பண்ணியிருக்கேன்?''

''ஐய்யோ... என்ன மாமா? ஏன், மாமா? எனக்கேன் சொல்லலை? நடந்து எத்தனை நாளாகுது?'' பதறினான்.

''மூன்று நாளாகுது, அன்பு!''

''மானுகிட்ட போனைக் கொடுங்க!'' என்றவன்... மானு லைனில் கிடைத்ததும் அரை மணி நேரத்திற்கு சத்தம் போட்டான். பின் சமாதானமானான்.

''முதலில் உன்னைப் பார்த்துவிட்டுத்தான்... மறுபடி பிஸினஸ் எல்லாம்! கோடி ரூபாய் இதனால் கைநழுவிப் போனாலும் பரவாயில்லை, மானு!''

அன்பு சொல்ல... மானசா நெகிழ்ந்து விட்டாள்.

மறுநாள் அன்பு வந்தான்.

மானசாவைக் கண்டவள் துடிதுடித்து விட்டாள். சிவகாமி, சிவசங்கரனிடம் சண்டைக்குப் போய் விட்டாள்.

''ஏன் மாமா... எனக்கும், திவ்யாவுக்கும் சொல்லலே! நான் போன் பண்ணலேன்னால்... மானுவின் நிலையை மறைத்து இருப்பீர்கள் அல்லவா? இது உங்களுக்கே நல்லாயிருக்கா? சொல்லுங்க, மாமா? மாமா சொல்லாமல் போனா என்ன? நீங்களாவது சொல்லலாமே, அத்தை?''

சிவகாமியைப் பார்த்து கேட்க... அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஏய் மானு... அரக்கி... நீ கூட என்னை வேற்று ஆளா பார்க்க ஆரம்பிச்சிட்டே, இல்லையா? இந்த பிஸினஸும், வசதியும் வந்த பின்பு என்னிடம் தள்ளியே நின்று நீங்களெல்லாம் பழக ஆரம்பிச்சிட்டீங்க, இல்லையா? வீட்டுல காரும், டிரைவரும் இருக்க... உன்னை யார் ஸ்கூட்டியில போகச் சொன்னது?

''மடைச்சி... நான் சம்பாதிப்பதெல்லாம் யாருக்கு? உங்க எல்லோருக்கும் தான்! இனியாவது கல்லூரிக்கு ஒழுங்கா கார்ல போ!...

''எல்லாம் நீங்க பண்ற வேலைதான், மாமா! ஒழுங்கா காலா காலத்துல கல்லூரியில சேர்த்து விட்டிருந்தால்... மானு உள்ளூரிலேயே படித்திருப்பாள்! இப்படி பத்து கிலோ மீட்டர் பயணம் பண்ணி போகத் தேவையில்லே! சரி ஒண்ணும் தப்பில்லே! ஒண்ணு நம்ம கார்ல போ! அல்லது கல்லூரி பஸ் வரும் இல்ல... அதுல போ! இப்படி டூவீலர்ல போய் இனியும் விபரீதத்தை ஏற்படுத்திக் காதே!''



மானசா தலையாட்ட...

''இப்போ மண்டைய மண்டைய ஆட்டிட்டு... பிறகு என் சொல்லைக் காற்றில் பறக்க விட்டுடாதே, மானு!''

''சரியத்தான்!''

அங்கு வந்த நிர்மலா தயங்கித் தயங்கி வாயிற்படியில் நிற்க... அன்பு பார்த்து விட்டான்.

''யார் அது?'' மானசாவைப் பார்த்துக் கேட்டான்.

''என் தோழி! பேர் நிர்மலா!''

''எங்க மானுவை ஜாக்கிரதையா பார்த்துக்கோம்மா! உடல் தேறி கல்லூரி வந்தாலும்... அவளுடைய ரெக் கார்ட் வொர்க், ரைட்டிங் வொர்க் எல்லாத்தையும் ப்ரண்ட்ஸுங்க ஷேர் பண்ணி செய்து கொடுங்க!''

''கண்டிப்பாங்க!'' நிர்மலா சொல்லிவிட்டு... அன்புவையே பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தாள்.

''அக்காவை அழைச்சிட்டு வரலாம்ல்ல?''

''உடனடியா ரெண்டு டிக்கெட் கிடைக்கல, மானு! அதான்! சீக்கிரமே அழைச்சி வரேன்!''

''அக்கா... நல்லாயிருக்காளா? கௌதம், கீதா எப்படி இருக்காங்க?''

''அருமையாயிருக்காங்க!''

கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தவன்... உடனடியாய் கிளம்புவதாய் கூற...

''தங்கிட்டுப் போகக் கூடாதா, அன்பு?'' என்று சிவசங்கரன் கேட்க...

''இப்போ மணி எட்டு இல்லையா? உடனே புறப்பட்டுப் போய் சென்னையில பிஸினஸைப் பார்க்கணும், மாமா!''

என்று அன்பு மானசாவிடம் சொல்லிவிட்டு கிளம்ப... சிவகாமியும், சிவசங்கரனும் பின்னாடியே சென்றனர்.

''என்னடி கல்லூரிக்குப் போகலையா? காலையிலே வந்திருக்கே!''

''அது இருக்கட்டும்! ஏய் மானு... யார்டி இந்த மன்மதன் சொல்லவே இல்லையே?''

''என் அக்கா திவ்யாவின் கணவர்! என் அத்தான்!''

''அந்த திண்ணிய தோள்களும்... பரந்து விரிந்த மார்பும்... உயரமும்... உடலமைப்பும்... கலரும்... அழகும்... பார்க்கும் பெண்கள் எல்லோரின் மனதையும் கொள்ளை கொள்வாரேடி! என்ன கம்பீரம்! என்ன அழகு! வாவ்! வொண்டர் புல்டி! இந்த அழகனை விட்டுட்டு... மைக்கேலை காதலிக்கிறேன்னு சொல்றீயே!''

''ச்சீ... வாயைக் கழுவுடி! ஏன் இப்படி அசிங்கமா பேசறே? இவர் என் அக்கா புருஷன்! இவர் மேல் எப்படி ஆசை வரும்? பிறர் மனை நோக்கக்கூடாதுன்னு நீ படிச்சதில்லையா? அவரை கண்களாலேயே கற்பழிச்சிட்டையே! உன் பார்வையை அவரும் கவனிக்கலே! கவனிச்சியிருந்தால்... இதுபோல கீழ்த்தரமான தோழிகளோடு உனக்கென்ன நட்புன்னு உபதேசம் செய்திருப்பார்!''

''அம்மா தாயே... உன் அத்தானை ஆசையோடு நோக்கியது தப்புதான்! கன்னத்தில் எத்தனை போட்டுக்கட்டும்?''

''சரி அதைவிடு, நிர்மலா! மைக்கேலைப் பார்த்தாயா? நான் அவரைப் பார்க்கணும்! மன்னிப்பு கேட்கணும் என்று கூறியதைச் சொன்னாயா?''



''ஸாரிடி! மைக்கேல் இப்போ ஊர்ல இல்லை! பாதர் ஏதோ வேலையாய் ஐதராபாத் போயிருக்காராம்! அவரோட மைக்கேலும் போயிருப்பதா... அவன் பிரண்ட் ராஜா சொன்னான்!''

''எப்போ திரும்புவாராம்?''

''கூடிய சீக்கிரமே!''

''மைக்கேல் வந்தவுடன்... அவரை ஆஸ்பிட்டலுக்கு அழைத்து வருவது உன் பொறுப்பு, நிம்மி! நான் உன்னை நம்பறேன்! என்னை ஏமாத்திடாதே, நிம்மி! எனக்கு அவரைப் பார்க்கணும்! பேசணும்! என்னால தாங்கவே முடியல! நான் இப்போ வெறும் மானசா இல்லே! நோயாளி, மானசா! இந்த நோயாளியின் ஆசையை நிறைவேற்றுப்பா! ப்ளீஸ்...''

மானசா கண்கள் கலங்கக் கேட்க... நிர்மலா தலையாட்டினாள்.

மானசாவின் ஆசையை நிறைவேற்ற முடியாது என்று தெரியாமல்!

## 8

**''அன்புடைய மனிதன் மற்றவர் கண்களுக்கு தெய்வமாய் தெரிவான்!''**

நிலமகளிடம் கோபித்துக் கொண்ட கதிரவன்... தன் வெறுப்பைக் காட்ட... தன் கிரகணங்களால் சுட்டெரித்து... நிலமகளை வாட்டிக் கொண்டிருந்த... நண்பகல் 1.00 மணி!

ஐந்து நாட்கள் கழித்து... மைக்கேல் ஐதராபாத்தி லிருந்து வந்தான்! அன்று மதிய வகுப்புக்குதான் வந்தான். மாலையிடைவேளையில் நிர்மலா அவனைத் தனியே சந்தித்தாள்.

''காபி சாப்பிட கேண்டீன் போகலையா, நிர்மலா?'' மைக்கேல் கேட்க...

''ம்கூம்! என் தோழி ஒரு கோரிக்கையை என்னிடம் வைத்திருக்கிறாள். அதை நிறைவேற்ற முடியுமா? முடியாதா?ன்னு தெரியலே! அதான் காபி சாப்பிட ணும்ன்னு எண்ணமே வர்ல!''

''அந்த தோழி யார்? என்ன கோரிக்கை?'' மைக்கேல் புரியாமல் கேட்க...

''மானசா...!'' அடுத்ததாய் நிர்மலா பேசப் போவதற் குள்...

''அவளைப் பற்றிய பேச்சானால் எனக்குத் தேவையே யில்லை!'' என்று வெறுப்புடன் கூற...

''இப்படிச் சொல்லிவிட்டால் எப்படி மைக்கேல்? மானசா... ரொம்ப நல்லப் பெண்! அவள் அப்பா செய்த தவறுக்கு... மானசா எப்படி பொறுப்பாவாள்? உன்னைப் பார்க்கணும்! உன்கிட்ட பேசணும்ன்னு துடிக்கிறாள்! உன்னிடம் அவளுடைய தந்தையின் தவறுக்காய் மன் னிப்பு கேட்க விரும்புகிறாள்! அந்தப் பெண் உன்னைக் காண தவியாய் தவிக்கிறாள்! அவளின் தவிப்பை அலட்சியப் படுத்த வேண்டாம், மைக்கேல்!''

''நீ என்ன சொன்னாலும்... அவள் பக்கம்கூடத் திரும்பிப் பார்க்க மாட்டேன்!'' என்று கறாராய் சொல்ல...



''இப்படிச் சொல்லிட்டால் ஆச்சா? ஒரு நோயாளி பெண் மீது கொஞ்சமாய் கருணைக் காட்டுங்கள்!''

''அதெல்லாம் முடியாது, நிர்மலா!''

''நீங்க படிக்கிற பைபிளும், வேதமும் உங்களுக்கு இப்படி கருணையில்லாத குணத்தைத்தான் கற்பித்ததா?'' அவள் கேட்க...

மைக்கேல் சட்டென்று அடங்கி விட்டான்!

பின்னர் சொன்னான்.

''அந்த கோபக்கார அப்பா இருப்பாரே!''

''அவர் இல்லாத சமயமாய் நான் அழைத்துப் போகி றேன்!'' மாலையேப் போகலாம்!''

''சரி!''

''கடைசியா ஏமாத்திடாதீங்க, மைக்கேல்! மானசா தாங்கிக் கொள்ள மாட்டாள்!''

நிர்மலா அப்படிச் சொல்லிவிட்டுப் போக... மைக்கேல் புரியாமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

மைக்கேல் போல பக்குவப்பட்ட மாணவனைப் பார்க்க முடியாது! அவனைப் பாதர் வில்லியம்ஸ் அப்படி ஒரு நல்லவனாய் வளர்த்திருக்கிறார்!

விடுமுறை நாட்களில் சர்ச்சை சுத்தப்படுத்துவான்!

படிப்பறிவு இல்லாதவர்களுக்கும்... வயதான காலத் தில் பார்வை மங்கிய பெரியவர்களுக்கும்... பைபிளை நிறுத்தி, நிதானமாய், அக்கறையோடு படித்துக் காட்டி விளக்கம் சொல்லுவான்!

காலையில் அருகில் இருக்கும்... ஏழை வீட்டு குழந்தைகளுக்கு இலவசமாய் பாடம் போதிப்பான்!

உண்மையான காதலை வரவேற்பான்!

உண்மையான காதலர்களை தட்டிக் கேட்பான்!

பொய்யான காதலை விடுத்து பிறன் மனையை நோக்கும்...

தன் மனையை விடுத்து பிறன் மனையை நோக்கும்... நெறிபிழற் நடத்தை உள்ளவர்களுக்கு... அறிவுரைக் கூறி... நல்ல நடத்தை உள்ளவர்களாய் மாற்றுவான்!

டுடோரியல் காலேஜில் வரும் வருமானத்தை ஏழைகளுக்கும், இல்லாதவர்களுக்கும் அரிசியும், பருப்பும் வாங்கிக் கொடுத்து... அவர்களின் வறுமையைப் போக்குவான்!

பாதரோடு... நோயில் உள்ளோரின் வீடு தேடிப் போய்... பூஜை செய்து... அவர்களுக்கு நோய் தீர மனம் உருகி இறைவனிடம் வேண்டுவான்!

தவறாமல் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ரத்ததானம் செய்வான்!

போலியோ சொட்டு மருந்து முகாமுக்கும்... எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு முகாமுக்கும் சென்று இலவச சேவை செய்வான்!

யாருக்கு ஆபத்து என்றாலும் முதல் ஆளாய் நிற்பான்!

அவனைக் காணும் அத்தனை பேரும் மைக்கேலை ஒரு குட்டி பாதராய்த்தான் பார்ப்பார்கள்!

தங்கள் கஷ்டங்களையும், இன்னல்களையும், வேதனைகளையும் சொல்வார்கள்!

பெற்றோர்களுடைய அரவணைப்பில்... அன்பில்... கனிவில்... கட்டுப்பாட்டில்... கண்காணிப்பில் இருக்கும் பிள்ளைகளே... தீய பழக்கங்களைத் தேடிப்போய்... அதில் தன்னை ஈடுபடுத்தி... கெட்டு குட்டிச் சுவராகும் இந்தக்



காலத்தில்... மைக்கேல் யாருமில்லாத அநாதையாய் இருந்தாலும்... நற்குணங்களின்... நற்பண்புகளின் புகலிடமாய் இருப்பது கண்டு மானசா வியந்தாள்!

ஒரு மனிதன்... வாழ்க்கையில் அளவுக்கதிகமான கஷ்டத்தைச் சந்திக்கும்போத ஒன்று அவன் நல்லவனாகிறான்...! அல்லது நாலு பேர் கை கொட்டிச் சிரிக்க நாசமாய் போகிறான்...!

அவன் நல்லவனாவதும்... நாசமாய்ப் போவதும் அவரவர்களுடைய மனம், எண்ணம், சூழ்நிலை, நட்பு, குணத்தைப் பொறுத்து உள்ளது!

கட்டுப்படுத்த யாருமில்லை! கண்டிக்க யாருமில்லை! தடைப் போட யாருமில்லை!

ஆனாலும், மைக்கேல் தூயவனாய் இருப்பது கண்டு மானசாவுக்கு ஆச்சரியம்தான்! அதிசயம்தான்!

அந்த ஆச்சரியமும், அதிசயமும்தான் அவன் மேலான காதலை மேலும் மேலும் விரிவுப்படுத்தத் தூண்டியது!

மாலை இருவரும் கிளம்பினார்கள்!

மைக்கேலுக்கும் மானசாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையும், ஆவலும்... அவனிதயத்தில் கரை புரண்டு ஓடியது!

மைக்கேலைக் கண்ணுற்றவள்... திடுக்கிடலுடன் எழுந்து...

''நிர்மலா... நிர்மலா... தேங்க்ஸ்... தேங்க்ஸ்ப்பா!'' என்று கண்கள் கலங்கி... அவளின் கைப்பற்ற...

''சந்தோசமா, மானு? ரெண்டு பேரும் பேசிட்டு இருங்க வரேன்!'' என்று நிர்மலா அவ்விடம் விட்டு அகல...

இருவர் இதயமும் முட்டி, மோதி, தட்டி, தடுங்கி... சட்டென்று அணைத்துக் கொண்டன!

இரு ஜோடி விழி வாள்களும் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டு... கோபித்து... ஊடி... கூட... அங்கே காதல் பொறி பறந்தது!

அவள் விழி வீச்சினைத் தாங்க முடியாமல்... தாக்குப் பிடிக்க முடியாமல் தலை குனிந்தவனிடம்...

''என் தந்தையின் செயலுக்காய்... என்னை மன்னிக்க வேண்டுகிறேன்!''

மானசா கையெடுத்து வணங்க...

''என்னங்க இது மன்னிப்பெல்லாம் கேட்டுட்டு...'' பட்டென்று மைக்கேல் சொல்ல...

''என்னை உடனடியாய் ஆஸ்பிட்டலில் சேர்த்து... தக்க சமயத்தில் ரத்தம் கொடுத்து உதவி... உயிர் பிழைக்க வைத்த உங்களுக்கு எனது நன்றியை உரித்தாக்கு கிறேன்!''

மீண்டும் வணங்கி... கண்ணீர் சொட்டி நின்றவளின்... கண்ணீரைத் துடைக்க நீண்ட கையை... ரொம்பவே சிரமப்பட்டு கட்டுப்படுத்தினான், மைக்கேல்.

''உங்கள் உடம்பு பரவாயில்லையா?'' என்று மெல்ல கேட்க...

மைக்கேலினின் அந்த சொற்கள் மயிலிறகாய் வருட... அந்த சுகத்தில்... இமைச் சிறப்பியை உயர்த்தி... நேருக்கு நேராய் நோக்கி...

''ம்...'' என்று தலையாட்டிய மானசாவையே வைத்த விழி எடுக்காமல் மைக்கேல் நோக்க...



இந்த நிலை ரொம்ப நேரம் நீடித்தது!

முதலில் உணர்வுக்கு வந்தவன், மைக்கேல் தான்!

மானசாவிடம் சொல்லிக் கொண்டு இருவரும் கிளம்பினர்.

மறுநாளும்... மறுநாளும் என மைக்கேல் வர...

ஒரு நாள் மானசா துணிச்சலாய் சொன்னாள்.

''மைக்கேல்... என் தந்தை கோபக்காரர்தான்! அடுத்தவர் மனதை புரிஞ்சிக்காத பழைய பஞ்சாங்கம்தான்! ஜாதி, மதம், பார்க்கிறவர்தான்! அவரிடம் எனக்கு நிறைய பயம்தான்! ஆனாலும்... ஆனாலும்... உங்கள் மேலான என் காதலைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை!''

மைக்கேல் அதிர்ச்சியுடன் மானசாவைப் பார்க்க... மீண்டும் தொடர்ந்தாள்.

''காதல் கட்டுப்பாடுகளை, தடைகளை எல்லாவற்றையும் தாண்டி... காற்றுப் புகாத இடத்தில் கூடப் புகுந்து விடும்! அப்படித்தான் என்னுள் புகுந்தது! எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற துணிச்சல்... என்னுள் துளிர்த்தது! அந்த நம்பிக்கையில்... உங்கள் மேலான ஆசையை, நேசத்தை நிறையவே... என்னுள் விரிவு படுத்திவிட்டேன்! ஆழமா விதைச்சுட்டேன்!'' என்றவள்.

''நான் உங்களை நேசிக்கிறேன்! உங்களுள்ளும் என் மேலான நேசம் இருக்கு! நிஜம்தானே?''

''....................''

''மௌனத்தை சம்மதமாய் எடுத்துக் கொள்ளவா? என் தந்தையை நினைத்து பயமா?''

"............"

"எத்தனை எதிர்ப்பு வந்தாலும்... அதையெல்லாம் தாண்டி வந்து... உங்களை மணப்பேன்! மாலையிடுவேன்!"

"............"

"உங்களுக்குக் கிடைக்காமல் போன தாய்ப்பாசத்தை அள்ளி அள்ளி ஊட்ட... எனக்கொரு சந்தர்ப்பத்தைக் கொடுங்க, மைக்கேல்! என்னிடம் உங்கள் தாயையும், கிடைக்காமல் போன தாய்ப்பாசத்தையும் காணலாம்! முதலில் உங்களுக்கு நல்ல தாயாய் இருப்பேன்! அடுத்த தாய் நல்ல காதலியாய் இருப்பேன்!"

அவன் பேசாமல் முழிக்க...

"முடிவெடுக்க வேண்டிய நேரத்தில் இதுயென்ன சின்னக் குழந்தையாய் முழிப்பு? ம்?"

"............"

"நம் காதல் நிறைவேறாது என்று பயமா? என் அக்கா திவ்யா இருக்கா! அத்தான் அன்பு இருக்கார்! எந்த நேரத்திலும் நம்மைக் கைவிட மாட்டார்! நிச்சயமா, மைக்கேல்! யாரை நம்பலேன்னாலும் என் அத்தான் அன்புவை நம்பலாம்! நம்மை சேர்த்து வைப்பார்!"

மானசா அன்புவின் மேல் நம்பிக்கை வைத்தாள்.

ஆனால், அவள் நம்பிக்கையை அன்பு பொய்யாக்கப் போகிறான் என்று அறியாமல்!



# 9

**"தீயதை திரும்பத் திரும்ப நினைக்காதே!
நல்லதை ஒருபோதும் மறக்காதே!"**

இரவு வானில்... நொடியில் மேகமூட்டங்கள் சூழ்ந்து... சட்டென்று பொத்துக்கொண்டு மழையைக் கொட்டியது.

சர்ச்சுக்கு முன்புறம் இருந்த தோட்டத்தில்... மழையில் நனைந்த உணர்வுகூட இல்லாமல்... மைக்கேல் சிலையாய் நின்றிருக்க... இதைக் கண்ட பாதர் வில்லியம்ஸ் வேகமாய் ஓடி வந்து... அவன் கைப்பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே போய்... டவல் கொண்டு அவன் தலையைத் துவட்டி... மாற்று ஆடை அணிந்து வர பணிக்க... அவனும் அவ்வாறே செய்தான்.

மைக்கேலைப் பிடித்து அருகில் அமர்த்தி...

"மைக்கேல்... என்னப்பா நானும் கொஞ்ச நாளா கவனிச்சுட்டு வரேன்! ரொம்ப டல்லா தெரியறே? ரெண்டு நாளா உன் முகமே சரியில்லை! சதா சர்வ காலமும் எதையோ உள்ளுக்குள்ள போட்டுப் புதைக்கவும் முடியாமல்... ஜீரணிக்கவும் முடியாமல் கஷ்டப்படறாப் போல தெரியுதே! உன் நெஞ்சுக்குள்ள இருந்து கரையானா அரிக்கிற நிகழ்ச்சிதான் என்ன? உன்னை இந்த அளவு நொந்துப் போக வைக்கும் உன் இதயத்தைக் கசக்கிப் பிழியும் செய்தி... நல்லதா? கெட்டதா? சொல்லுப்பா, மைக்கேல்? உன் தந்தைகிட்ட சொல்ல என்ன தயக்கம்?"

"............"

"என்கிட்டகூட சொல்ல முடியாத விஷயமா?"

"ஐய்யோ தந்தையே... அப்படியெல்லாம் இல்லை!" மைக்கேல் அவசரமாய் மறுக்க...

"ஆமான்... டெல் மீ மை சன்...!" என்று வில்லியம்ஸ் அருகில் அமர்ந்து... முதுகைத் தட்டிக் கொடுக்க... தாங்க முடியாமல் அத்தனையையும் அவரிடம் கொட்டினான்.

"மானசா... உன்னைக் காதலிக்கிறாள்!"

"ஆமாம், பாதர்!"

"நீ...?"

"நானா? நா... நான் எ... எப்படி? நான் தான் படிப்பு முடிஞ்சதும்... இறையியல் படிச்சி... உங்களைப் போல... பாதர் ஆகி... இறை சேவை செய்யணுமே!" அவன் திக்கித் திணறிச் சொல்ல...

"இந்த காரணமெல்லாம் வேண்டாம், மைக்கேல்! மானசாவை உனக்குப் பிடிச்சிருக்கா? இல்லையா? மானசாவின் பக்கம் உன் இதயம் ஈர்க்கப் படுகிறதா? இல்லையா? அதான் என் கேள்வி! மானசாவும், அவளைப் பற்றிய நினைவுகளும், எண்ணங்களும் உன்னை நெகிழ வைக்குதா? உன்னைக் கட்டிப் போடுதா? சலனப்படுத்துதா? சஞ்சலப்படுத்துதா? அதை சொல்லுப்பா?"

"பாதர்..." என்று அவன் அச்சமாகப் பார்க்க...

"நான் உன் தந்தை! உன்னைத் தத்தெடுத்த ஞானத் தந்தை! என்னிடம் ஒளிவு, மறைவு தேவையே இல்லை!"

மைக்கேல் மவுனமாய் பார்க்க...

"அப்போ... மானசா உன்னைக் கவர்ந்துவிட்டாள்! உன் இதயம்... உன்னைக் கேளாமலேயே கொஞ்சம்



கொஞ்சமாய் அவளிடம் பயணிக்கிறது! உண்மை தானே?"

"இது தப்புதானே, பாதர்?" கண்கள் கலங்க கேட்க...

"எது தப்பு?"

"சிறு வயது முதலே... இறையியல் படித்து... ஏசுநாதருக்கு தொண்டு செய்வேன் என்று உறுதி பூண்டு... இப்படி இடையில் மனதை மாற்றிக் கொள்வது... தடுமாறுவது... அநியாயம் தானே, பாதர்? ஏசு என்னை மன்னிப்பாரா? இவ்வளவுதான் என் இறை விசுவாசமா? இறை நேசமா? என்று என்னை ஏளனமாய் ஏசப்பா நினைக்க மாட்டாரா? மானசாவின் காதலை ஏற்றுக் கொண்டு... கல்யாணம், குழந்தை என்று சராசரி மனிதனாய் வாழ... என்னால் முடியுமா? இறைவன் அதை ஏற்பாரா?"

"மைக்கேல்... இது உன் வாழ்க்கை! உன் வாழ்க்கையைப் பற்றி முடிவெடுக்கும் உரிமை முழுவதும்... உனக்கு மட்டுமே!"

"பாதர்..."

"இதில் குறுக்கே வர எனக்கும், இறைவனுக்கும் என்ன உரிமை இருக்கு? இறை விசுவாசத்தை விட... உன் மனதிடம் விசுவாசமாய் இரு! உன் மனதிற்கு முதலிடம் கொடு! உன் மனதை நேசி! இன்று மனதில் தோன்றும் ஆசைகளுக்கு... கட்டாயம் ஒரு புதை குழியைத் தோண்டி... மனதை, அதில் போட்டு மரிக்கச் செய்து விட்டால்... மீண்டும் அந்த மனம் விரைவிலேயே உயிர் பெற்று வந்து... உன்னை காலமெல்லாம் கண்ணீர்விட வைக்கும்! உன்னை உயிரோடே கொன்று கூறு போட்டு விடும்!"

''இது தப்பில்லையா, பாதர்?''

''எது காதலா...? கல்யாணமா...?''

''ரெண்டுமே! ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து போயிட்டே இருக்கும்போது... அதை விடுத்து அடுத்த பாதையில் பயணிக்க விரும்புவது?''

''உனக்கான பாதை தெரியாமல் பயணித்துக் கொண்டிருந்த நீ... அதை விடுத்து சரியான பாதையை கண்டறிந்து செல்வது ஒன்றும் தவறில்லையே! என்னுடைய இளமைப் பருவத்தில்... என்னை இதுபோல எந்தப் பெண்ணும் ஈர்த்ததில்லை! என்னையும், எந்தப் பெண்ணாவது விரும்பி... எனக்கும் அவளைப் பிடித்திருந்தால்... நான்கூட பாதராய் ஆகாமல்... சராசரியாய் திருமணம், குழந்தை என்று வாழ்ந்திருப்பேன், மைக்கேல்! என்னால் அப்போது சமுதாயத்திற்கு என்ன சேவை செய்ய முடியுமோ... அதைச் செய்திருப்பேன்!''

''நிஜம்தானா, பாதர்? என் செயலுக்காய் இறைவன் என்னை மன்னிப்பாரா?''

''தன் குழந்தையின் இன்பம் கண்டு மகிழாத தகப்பன் உண்டா? ஏசு மகிழ்ந்து போவார், மகனே! பிரம்மச்சரியம் காத்து... பாதராகித்தான் நீ இறைவனுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்பதில்லை! கண்ணுக்கு, மனதுக்கு நிறைவான பெண்ணை மணந்து... சமுதாய சேவையில் ஈடுபட்டாலும்... ஏசப்பா மகிழ்ந்து போவார்! இந்த தகப்பன் சொல்வது புரியுதா, மைக்கேல்?''

அவன் மௌனமாய் இருக்க...

''இவ்வளவு விளக்கியும் இன்னும் புரியவில்லையா, மகனே? மானசாவை நேசி, மகனே! சந்தோசமாய் இரு!''



வில்லியம்ஸ் இரு கைகளையும் தூக்கி ஆசீர்வதித்தார்.

''மானசா வேறு எந்த ஆயுதம் கொண்டு தாக்கியிருந்தாலும்... இந்த மைக்கேல் வீழ்ந்து இருக்க மாட்டேன், பாதர்! அன்பு என்ற ஆயுதம் கொண்டல்லவா என்னை வீழ்த்தி விட்டாள்!'' கலங்கிய கண்களுடன் சொல்ல...

''அன்பிற்கும், பாசத்திற்கும் அடிமையாகாத ஜீவனுண்டா? உன்னுள் சிறு கலக்கம் கூட கூடாது, மைக்கேல்! அந்தப் பெண் தவித்துப் போய் இருப்பாள்! நாளையே உன் சம்மதத்தையும், நேசத்தையும் சொல்லி சந்தோசப்படுத்து! அவளுடைய தந்தையை சமாளித்துக் கொள்ளலாம்! பயம் வேண்டாம்! சரியா?''

மைக்கேல் தலையாட்டினான்! படுக்கையில் போய் விழுந்தான்.

பாதர் விளக்கியதும்... அவனுள் மேகமாய் சூழ்ந்திருந்த இருட்டு நீங்க... கலக்கம் நீங்க... மைக்கேல் நிம்மதியானான்!

அந்த நிம்மதியில் தூக்கத்தைத் தொலைத்துவிட்டு... விடிய விடிய மானசாவோடு பேசினான்... சிரித்தான்... கைக்கோர்த்து காதல் தேசம் பயணமானான்!

வெளியே மழை 'சோ'வென்று பெய்து கொண்டிருந்தது. ஈரக்காற்று ஜன்னலின் வழியே ஊடுருவி... அவன் மேனி தீண்டிச் சென்றது. சந்தோச மிகுதியில் அவனுக்குக் குளிரே தெரியவில்லை!

மறுநாளே மைக்கேல் தன் மனதைத் திறந்து காட்ட... சந்தோச மிகுதியில் மானசா துள்ளிக் குதித்தாட நினைத்தாள். ஆனால் முடியாதே!

''எத்தனை எதிர்ப்பு வந்தாலும் நம் காதல் ஜெயிக்கும் நாம் ஜெயிப்போம், மைக்கேல்!'' என்றாள்.

மைக்கேலும் அவளின் சொல் கேட்டு எக்கச்சக்கமாய் மனதில் ஆசைகளை வளர்த்துக் கொண்டான்.

அவனுடைய மன ஆசையில் பெரிய பூகம்பம் ஏற்படப் போகிறது என்று தெரியாமல்!

## 10

**''வெல்வதற்கு செல்வம் தேவையில்லை; உள்ளம் தேவை!''**

மானசா உடல்நலம் தேறி வீட்டிற்கு வந்தாள்.

அவளை மீண்டும் பார்க்க அன்பு ஒருமுறை வந்திருந்தான். ஆனால், அக்கா திவ்யா வராததுதான் மானசாவிற்குக் கஷ்டமாய் போய்விட்டது.

அன்று அன்பு மீண்டும் தனியாளாய் வர...

''அத்தான்... நல்லாயிருக்கீங்களா? அக்கா ஏன் வர்லே? அவளை நீங்க அழைச்சிட்டு வர்லயா? அல்லது அவளுக்கு என்னைப் பார்க்க விருப்பமில்லையா? சொல்லுங்கத்தான்?'' என்றவளிடம்...

''மானு... திவ்யா செய்தி கேள்விப்பட்டு கத்திட்டாள்! அவளுக்கு வருவதற்கு ஆசைதான்! ஆனால் அவளுக்கு பயணம் ஒத்துக்காது! டாக்டர் நீண்ட தூர பயணம் வேண்டாம் என்றார்!''

மானசா பயத்துடன் பார்க்க...



''மாப்பிள்ளை என் பொண்ணுக்கென்ன?'' இது சிவகாமி.

''அன்பு அவளுக்கு என்னடா?'' இது சிவசங்கரன்.

''நல்ல விஷயம்தான் மாமா! நீங்க, அம்மா, அத்தை அத்தனை பேரும் தாத்தா, பாட்டியாகப் போறீங்க! உங்கப் பொண்ணு கர்ப்பமா இருக்கா!''

''அன்பு... அன்பு...'' ஜெயா ஓடிவந்து மகனைக் கட்டிக் கொள்ள... சிவகாமி, சிவசங்கரன், மானசா அத்தனை பேரும் மகிழ்ச்சியில் மலர்ந்தனர்.

''இந்த நல்ல செய்திக்காகத்தான் இத்தனை நாளும் தவமிருந்தோம்!''

''உடனடியா திவ்யாவைப் பார்க்கணும்ங்க!'' சிவகாமி கேட்க...

''மானுவால் முடியுமா? கொஞ்ச நாள் ஆகட்டுமே?''

''அப்பா... எனக்கு பூரணமா குணமாயிடிச்சி! நாம போகலாம்ப்பா! உடனே திவ்யாவைப் பார்க்கணும் போல இருக்கு!''

அன்பு கிளம்பி விட்டான்.

அதன் பிறகு ஒரு வாரத்தில் குடும்பமே தாய்லாந்திற்கு புறப்பட்டது.

''என் தங்கமே! என் கண்ணே! என் வம்சத்தை தழைக்க வச்சிட்டையே!'' என்று திவ்யாவை இழுத்து அத்தை ஜெயா அணைத்துக் கொண்டாள்.

''ஆனால் இந்த நல்ல செய்தியை கல்யாணமானதும் சொல்லியிருந்தால் எவ்வளவு சந்தோசமாய் இருந்திருப்

போம்! ஒரு வருடத்திற்கு மேலாக்கிட்டையே, திவ்யா!'' அத்தை வருத்தப்பட்டாள்.

''எனக்கு தெரியும், அன்பு! நீ திவ்யாவை மணந்தால் சந்தோசமாய் இருப்பாய் என்று!'' இது சிவசங்கரன்.

''அத்தான்... நீங்க ரொம்ப அழுத்தமானவர்தான்! கல்யாணமே வேண்டாம் என்றவர் செய்த காரியமா, இது? அப்பாவிபோல இருந்தவர்... அப்பாவாகப் போறீங்களா?''

மானசாவிற்கு படிப்பு வீணாவதால் அவர்களால் அங்கே ரொம்ப நாள் இருக்க முடியவில்லை!

சிவகாமி அங்கேயே இருந்து பெண்ணைப் பார்த்துக் கொள்வதாய் கூற...

''நீ இல்லாமல் நான் எப்படி இருப்பேன்? அக்கா வேணா இருக்கட்டும்! என்னக்கா சொல்ற?''

''நானா? எப்படி சங்கரா? என்னால இந்த பாஷைப் புரியாத ஊர்ல எல்லாம் காலத்தைத் தள்ள முடியாதுப்பா!''

''என்ன செய்யலாம்?''

''திவ்யாவை நம்மோடவே கூட்டிட்டுப் போயிட லாங்க!'' சிவகாமி சொல்ல...

''நான் வர்லேம்மா!'' திவ்யா பட்டென்று சொல்ல...

''ஏன் திவ்யா?''

''அத்தானை இங்கே தனியே விட்டுட்டு... நான் எப்படி வருவேன்! நான் இல்லாமல் இவர் தவிச்சிப் போவார்!''

''அக்கா... தவிக்கப் போறது நீயா? இல்ல இவரா? நீதானே அத்தான் இல்லாமல் கலங்கிப் போவாய்? அவரைப் பிரிந்து இருக்க முடியாமல் இருக்க... அப்படி என்ன 'சொக்குப்பொடி' போட்டார்?''



மானசா கேட்க... திவ்யா முகம் சிவந்தாள்.

''அத்தான்... இன்னும் ஸ்டாக் இருக்கா?'' என்று அன்புவைப் பார்த்துக் கேட்க...

''எது?'' எனப் புரியாமல் அன்பு கேட்க...

''சொக்குப்பொடி! கொஞ்சம் கொடுத்தால் எனக்கும் பயன்படும் இல்லையா? நாளைக்கு எனக்கு புருஷனா வருபவனுக்கும் போட்டு... மயக்கி... என் முந்தானையில் முடிந்து கொள்ள உதவுமில்லையா?'' மானசா கிண்டலாய் கேட்க...

''ஏய் வாலு... சும்மாயிருக்க மாட்டாயா? ஜோக்கடிக்கற நேரமா இது?'' என்று செல்லமாய் அவள் தலையில் கொட்டினாள், திவ்யா.

''திவ்யா... நான் இங்கே சமாளித்துக் கொள்வேன்! நீ கிளம்பும்மா!'' அன்பு சொல்ல...

''மாட்டேன், அத்தான்! உங்களை விட்டுட்டு ஒரு நாளும் பிரிந்து இருக்க மாட்டேன்! என்னால் அது முடியாது! என்னால் அது ஒன்று மட்டும் முடியாது, அத்தான்! ப்ளீஸ்...'' என்று திவ்யா அழ...

''சரி அழ வேண்டாம்! மாமா... நீங்க எல்லோரும் போங்க! நான் திவ்யாவை... என் கண்ணுக்குள்ளே வச்சிக் காப்பேன்! சீமந்தம், அது இதுன்னு திவ்யாவைக் கஷ்டப்படுத்த வேண்டாம்! திவ்யாவைப் போல... மானுவின் படிப்பும் முக்கியம் இல்லையா? நீங்க கிளம் புங்க!''

''டேய் சங்கரா... நான் இங்கேயே தங்கிடறேன்! என் மருமகளை கவனிப்பதை விட்டுட்டு... அங்க வந்து உட்கார்ந்து... என்ன செய்யப் போறேன்!'' என்று ஜெயா

சொல்ல... திவ்யாவிற்கு துணையாய் அக்கா இருக்கிறாள் என்ற நிம்மதியில் சிவசங்கரன் மனைவி, மகளோடு விமானம் ஏறினார்.

மானசா கல்லூரி சென்றாள்.

''அக்காவும், அத்தானும் எப்படி இருக்கிறார்கள், மானு?'' மைக்கேல் கேட்க...

''ரொம்ப நல்லா இருக்காங்க, மைக்கேல்!''

''நான் தான் தவிச்சிப் போயிட்டேன், மானு! நீயில்லாத வாழ்க்கை வெறுமை தெரியுமா? இனி நம்மிடையே இவ்வளவு நாள் பிரிவு வேணாம், மானு!'' அவன் வருத்தத்துடன் சொல்ல...

''மைக்கேல்... இதெல்லாம் தவிர்க்க முடியாத பிரிவு! இதையெல்லாம் ஒன்றுமே செய்ய முடியாது, மைக்கேல்! அடிக்கடி... இனி அக்காவைப் பார்க்கப் போக வேண்டி வரும். அதையெல்லாம் நீங்க பொறுத்துக் கொள்ள வேண்டும்! சின்னப் பிரிவுகளைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும்!''

''மெல்ல பழகிக்கிறேன், மானு!'' மைக்கேல் சொல்ல அவள் மலர்ந்தாள்.

மானசாவின் வேலைகளை மைக்கேல், நிர்மலா, இன்னும் பல தோழியர்கள் அனைவரும் பங்கிட்டுச் செய்து கொடுத்தனர்.

மானசாவும், மைக்கேலும் கல்லூரிப் பூங்காவில் தனிமையில் சந்தித்துக் கொள்வர்.

அவர்களுடைய பேச்சில் அரசியல், சினிமா, சமுதாயம், இலக்கியம், உள்நாடு, வெள்ளிநாடு என்று இருக்கும்!



''என்ன அநியாயம் மைக்கேல்? நம்ம விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் அருகே உள்ள கிராமத்தில் நடந்த செய்தி என்னை கொதிப்படைய வைக்குது! ஒரு பெண்ணும், பையனும் காதலித்து இருக்காங்க! பையன் பணக்காரன்! பெண் ஏழை! இருவர் வீட்டிலும் காதலுக்கு எதிர்ப்பு வர... வீட்டுக்குத் தெரியாமல் ஓடிப்போய் திருமணமும் செய்துட்டாங்க! பையன் தன் மனைவியை ஊருக்கு அழைத்துப் போய்... வாசலிலேயே அவளை விட்டுட்டு... அவன் உள்ளேப் போனவன்தான்... இரவு முழுக்க வெளியே வரவேயில்லை! அவள் நின்று நின்று கால் ஓய்ந்து... வாசலிலேயே படுத்து உறங்கி விட்டாள். காலையில் வெளியே வந்த மாமியார்க்காரி சட்டி நிறைய சாணத்தை கரைத்து வந்து அவள் மேல் ஊற்ற... மாமனார் பெரிய தடியை எடுத்து வந்து மாட்டை அடிப்பது போல அடிக்க... அவளின் அலறல் கேட்டு... அக்கம் பக்கத்து ஜனங்க உதவி... ஆஸ்பத்திரியில் சேர்த்து இருக்கிறார்கள். பாவம் அந்தப் பெண்! அவன் என்ன மனிதனோ! கயவன்! எப்படித்தான் ஒரு பெண்ணை ஏமாற்றவும், கொடுமைப் படுத்தவும் முடிகிறதோ! அவர்களையெல்லாம் நிற்க வைத்து சுடணும், மைக்கேல்...'' மானசா கோபமாய்ச் சொல்ல...

''ரெண்டு கிராமத்தோட சண்டை... ரெண்டு ஜாதியோட சண்டை... ரெண்டு கட்சிகளோட சண்டை... தற்கொலைப்படை தாக்குதல்... தீவிரவாதிகளின் வன்முறை வெறியாட்டம்... குண்டு வெடிப்பால் இத்தனைப் பேர் பலி... என்று பேப்பரைப் பிரித்தால் பயங்கரவாதமும், வன்முறையும் தான் மலிஞ்சி கிடக்கு! நாடு போற போக்கே சரியில்லை! தீவிரவாதம் தலைவிரிச்சாடுது!'' மைக்கேல் காரமாய் சொல்ல...

''அடுத்ததா, காதல் தோல்வி...! காதலித்து அந்தப் பெண்ணை கர்ப்பமாக்கி ஏமாற்றுதல்... வரிசையா பெண்களை காதல் வலையில் விழ வைத்து... கல்யாணமும் பண்ணி... முதலிரவு நடத்தி... அதை படம் பிடித்து வைத்துக் கொண்டு ப்ளாக்மெயில் செய்த கடலூர் இளைஞன்னு ச்சே... சமுதாயமே கெட்டுக் குட்டிச்சுவராகி... சாக்கடையா மாறுது!

பொண்ணுங்க படிக்கறாங்க! ஆண்களுக்கு சரிநிகர் சமமா வேலைப் பார்க்கறாங்க! ஆண்களுக்கு இணையா பெண்கள் வேலை செய்யாத இடமேயில்லை! அத்தனை ஆண்கள் மத்தியில் விண்வெளிக்குச் சென்ற கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் போன்ற வீரமிக்க பெண்களின் மத்தியிலே... சில கோழையான... ஆண்களின் வெல்லக்கட்டி பேச்சுக்கு மயங்கும் பெண்கள் இருக்கத்தான் செய்யறாங்க1 கடைசியில ஏமாந்து தற்கொலை, அது இதுன்னு தவறான முடிவுக்கு போயிடறாங்க!''

''பெண்கள்கிட்ட இன்னும் விழிப்புணர்வு வேணும், மானசா.''

''எப்படி?'' மானசா இமைகளை அழகாய் கொட்டி கேட்க...

''காதலிக்கற பெண்கள் தன் காதலனைத் தள்ளியே நிறுத்தணும்! கல்யாணத்துக்குப் பிறகுதான் தொடவே அனுமதிக்கணும்! உதாரணமா உன்னைப்போல...! என்னைப்போல தள்ளியே பழகினால் எந்தத் துன்பமும் வராது, இல்லையா? இதுல நான் ஜென்டில்மேன் தானே?'' மைக்கேல் கேட்க...

''நீங்களா...?''



''பின்னே? உன் விரல் நகத்தைக்கூட நான் இதுவரை தொட்டிருப்பேனா?''

''உங்க பேச்சுல ரொம்பத்தான் ஆதங்கம் தெரியுதே!'' மானசா கிண்டலடிக்க...

''மானசா... எனக்கு ரொம்ப நாளா ஒரு ஆசை! உன் கையை மட்டும் தொட்டுப் பார்க்கட்டுமா? ப்ளீஸ்...'' மைக்கேல் கெஞ்ச...

மானசா தயங்கி... பின் நீட்ட...

மைக்கேல் அந்தக் கையை தன் கைகளுக்குள் பொத்திக் கொண்டான். பின் சொன்னான்.

''மானு... உன் கை ரொம்ப மிருதுவா பஞ்சுப் போல இருக்கே! பூவின் மென்மையும், தென்றலின் குளிர்ச்சியும் ஒன்று சேர்ந்தாற்போல ஒரு உணர்வு உன் கையைத் தொட்டதும்! மானு... மானு... என் தாய் கையும் இப்படித் தான் இருந்திருக்குமோ...?''

''ஐய்யோ... என்ன நீங்க... நேசிக்கிற பெண்ணைத் தொட்டுப் பார்த்துப் பேசறப் பேச்சு போலவா இருக்கு... உங்க பேச்சு!'' அவள் சலிப்பாய்ச் சொல்ல...

''மானு... நான் இதுவரை என் தாயைப் பார்த்ததில்லே! தாயன்பை அனுபவிச்சதில்லே! முதன் முதலாய் ஒரு பெண்ணின் ஸ்பரிசம்... எனக்கு தாயைத்தான் நினைவூட்டுது, மானு!'' மைக்கேல் வலியோடு சொல்ல...

''மைக்கேல்...'' என்று உயிர் உருகக் கூறினாள்.

''மானு... இன்னும் ஒரு சின்ன ஹெல்ப் பண்ண முடியுமா?''

''சொல்லுங்க, மைக்கேல்?'' அவள் அன்போடு கேட்க...

"கொஞ்ச நேரம் உன் மடியில் தலை வைத்துப் படுக்க அனுமதிப்பாயா? தாய் மடியின் சுகத்தை அனுபவித்துப் பார்க்க..."

மைக்கேல் கண்களில் நீர் தளும்பக் கேட்க... மறுக்க முடியாமல் மடியைக் காட்டினாள்.

மைக்கேல் சட்டென்று அவள் மடியில் தலை வைத்துப் படுத்தான்.

"மானு... மானு... என்ன சுகம்! இப்படி ஒரு சுகத்தை இறைவன் எனக்கு மட்டும் மறுத்ததேன்? என் நெஞ்சில்... எனக்கொரு தாய் கிடைத்த சந்தோசம்...! பூரிப்பு...! என்னால் இந்த மகிழ்ச்சியைத் தாங்கவே முடியலையே, மானும்மா! இந்த நிமிடம் என் உயிர் போனாலும் பரவாயில்லை, மானும்மா!"

மைக்கேலின் கண்களிலிருந்து சூடான கண்ணீர் சரசரவென காதோரம் இறங்க... மானசா துடைத்து விட்டாள்.

"அழாதீங்க, மைக்கேல்! தாய்க்காகவும்... தாயன்புக்காகவும் எந்த அளவு ஏங்கியிருக்கீங்கன்னு தெரியுது! மைக்கேல்... முதல்ல நான் உங்களுக்கு ஒரு நல்ல தாயாக இருப்பேன்! உங்களுக்குக் கிடைக்காமல் போன தாயன்பை தாராளமாக வாரி வாரி வழங்குவேன்! முதல்ல உங்களுக்கு நான் ஒரு நல்ல தாய்! பிறகுதான் காதலி, மனைவி எல்லாமே! நமக்குக் கல்யாணமாகட்டும்! ஒரு தாயா அன்பு காட்டிடறேன்! அரவணைச்சிக்கிறேன்! உங்களை தினம் தினம் தட்டி தாலாட்டறேன்!" அவள் உள்ளன்போடு நெகிழ்ந்து சொல்ல...

"ப்ராமிஸ்..."



"ப்ராமிஸ்ஸாதான்! அவனவன் காதலிகிட்ட, காதல், காமம் போன்ற உணர்வுகளைத்தான் உணருவான்! ஆனால், நீங்கள் என்னிடம் ஒரு தாயின் உணர்வுகளை கண்டு இருக்கிறீர்கள்!...

எப்போ சந்தர்ப்பம் கிடைக்கும் தொட்டு, கட்டி, கன்னம், உதடுன்னு பாராமல் முத்தமிடலாம்ன்னு அலையும் இளைஞர்கள் மத்தியில் நீங்க ஒரு ஜெம்! ஜெண்டில்மேன்! இந்த மாதிரியான உயர்ந்த காரணங்களால்... என் மனசுல ரொம்ப ரொம்ப உயர்ந்துட்டே போறீங்க! ஐ லவ் யூ, மைக்கேல்!" என்று மானசா உருகினாள்.

அவன் முடி கோதி... முகம் நீவி... மார்பைத் தட்ட... அவன் கண்மூடி படுத்திருந்தான்.

கொஞ்ச நேரம் கழித்து "போதும்... எழுங்க மைக்கேல்!" என்றதும் எழுந்துக் கொண்டான்.

"மானு... இந்த நாளை, இந்த உதவியை என் வாழ்நாளில் ஒரு கணம்கூட மறக்கவே மாட்டேன்!" என்று உணர்ச்சி கொப்பளிக்க பேசினான்.

"எவ்வளவு மனப்பக்குவத்தோடு பேசறீயே, மானும்மா! இத்தனை உன்னதமான... உத்தமமான பெண் எனக்கு கிடைத்ததிலே பெருமை, மானசா! நண்பனின் அன்பு... காதலியின் அன்பு... சுற்றத்தாரின் அன்பு... மனைவியின் அன்பு... ஆசானின் அன்பு இப்படி எல்லோரின் அன்புக்கும் ஒரு எல்லை உண்டு! ஆனால் தாயன்புக்கு எல்லை ஏது? எல்லையே இல்லாத அந்த அன்பை எனக்கு நீ வாரி வழங்க வேண்டும், மானசா!" என்று கையெடுத்துக் கும்பிட்டவனின் கையை கெட்டியாய் பற்றிக் கொண்டாள்.

''மானு... நம் காதல் ஜெயிக்குமா...? உன் அப்பா நம திருமணத்திற்கு ஒத்துக் கொள்வாரா? ஒத்துக் கொள்ள வில்லையென்றால்...?'' அவன் பயத்தோடு கேட்க...

''ஏன் எதையும் நெகட்டிவ்வா திங்க் பண்றீங்க? முதல்ல எந்த செயலைச் செய்தாலும் பாஸிட்டிவாய் திங்க் பண்ண கத்துக்கணும்! நடக்கும்... நடக்கும்னு மனக்குள்ள ஜெபிக்கும்போது... அது நிச்சயமா ஒரு நாள் நடக்கும்!'' மானசா நம்பிக்கையோடு சொல்ல...

''உன் அப்பா மறுத்தால்... அந்த துன்பத்தை என்னால் தாங்கவே முடியாது, மானு!'' என்று கண்கள் கலங்க...

''துன்பத்தையும் இன்பத்தைப்போல இருகை நீட்டி வரவேற்று... அதிலிருந்து மீள என்ன வழி என்று யோசிக்க வேண்டும்! இன்பம், துன்பம் இரண்டும் இரவு, பகல்... கோடை, குளிர்... வாடை, தென்றல்... வெப்பம், குளிர்ச்சி போல இயற்கைதான்! நாம் பகலை மட்டும் வரவேற்று இரவை வெறுக்கிறோமா? கோடையை வெறுத்து குளிரை நேசிக்கிறோமா? இல்லையல்லவா? அந்த இயற்கையை வெல்லும் மகத்தான மனோ தைரியத்தை ஆண்டவன் நமக்குக் கொடுத்திருக்கிறான்! அதனை முழுமையாய் பயன்படுத்த வேண்டும்!

துன்பத்தைக் கண்டு தூரே விலகி ஓடாமல்... அதிலிருந்து விடுபட என்னென்ன வழிகள் என்று... வழியைத் தேடுபவன்தான் நல்ல அறிவாளி!

சோதனையை சாதனையாக்குபவன்தான் மனிதன்...!

எட்டாத உயரத்தையும் எட்டி எளிதாய் கடப்பவன் தான் மனிதன்...!

மனிதன் என்ற மகத்தான மானுட சக்தியால் முடியாதது என்று ஒன்று உண்டா? மைக்கேல் உங்ககிட்ட இருக்க



தாழ்வு மனப்பான்மையை, கோழைத்தனத்தை விட்டொழிங்க! உங்ககிட்ட உள்ள நெகட்டிவ் திங்கிங்கை... உங்ககிட்ட இருந்து சுத்தமா வழிச்சி தூரே எறிங்க!''

மானசா பேசப் பேச... அவளையே ஆச்சரியத்துடன் வைத்த விழி எடுக்காமல்... நோக்கிக் கொண்டிருந்தவன் சொன்னான்.

''மானு... மானு... எத்தனை அழகா, அறிவுப் பூர்வமா பேசறீயேடா!'' என்று அதிசயித்தான், மைக்கேல்!

அத்தனை அறிவும் ஒரு நாள் பொய்க்கப் போகிறது எனத் தெரியாமல்!

## 11

**''குறைகளைச் சுட்டிக் காட்டுபவன் நண்பன்! நிறைகளை மட்டுமே சுட்டிக்காட்டுபவன் பகைவன்!''**

ஏழாம் மாதம் ஸ்கேன் செய்து பார்த்தார், டாக்டர்.

திவ்யாவின் வயிற்றில் இரு குழந்தைகள் இருப்பதாய் டாக்டர் கூற... திவ்யா, அன்புவின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை!

இருவரும் குதூகலத்தோடு இருக்க... டாக்டர் அவர்களை அச்சத்தோடு நோக்கிக் கொண்டிருக்க... அதை அன்பு கவனித்து விட்டான்.

''என்ன டாக்டர்? எனி பிராப்ளம்?'' என்று கேட்க... அவர் தயங்க...

''எதாயிருந்தாலும் சொல்லுங்க, டாக்டர்?'' என்று அன்பு கேட்டதுதான் தாமதம்... டாக்டர் சொல்லி விட்டார்.

''ஸாரி... ஸாரிங்க, அன்பு! உங்க மனைவியோட கர்ப்பப்பையில் குழந்தைகளோட, புற்றுநோய் கட்டியும் வளர்ந்துட்டு இருக்கு! ஆராய்ச்சியில் தெளிவாய் தெரிஞ்சிடிச்சி!''

''ஐய்யோ...'' என்று திவ்யா அலறி அழ...

''கடவுளே... கடவுளே... நாங்க என்ன பாவம் செய்தோம்? எதுக்கு இவ்வளோ பெரிய தண்டனை?'' என்று அன்புவும் அழ...

இருவரையும் கொஞ்ச நேரம் அழ அனுமதித்த டாக்டர்... பின் கேட்டார்.

''மிஸ்டர் அன்பு உங்க மனைவி வயிற்றில் உள்ள பிள்ளைகள் வேணுமா? இல்ல உங்களுக்கு உங்க மனைவி திவ்யா வேணுமா? ரெண்டுல ஒண்ணை முடிவு பண்ணிக்கங்க!''

''எனக்கு என் மனைவி திவ்யாதான் வேண்டும்!'' பட்டென்று அன்பு பதில் சொல்ல...

''ஆபரேசன் செய்து குழந்தைகளை அகற்றிட்டு... கர்ப்பப்பையை அகற்றினால்... நோய் மற்ற உறுப்புகளைத் தாக்காமல் காக்கலாம்! நீ என்ன சொல்ற திவ்யா?''

''என் ரெண்டு குழந்தைகளை... என் கருவிலே உருவான அத்தானின் ஜீவனை அழிச்சிட்டு நான் வாழணுமா?''

''நீ பிழைக்கணும்ன்னால் இதுதாம்மா முடிவு!'' டாக்டர் திட்டமாய் சொல்ல...



''இந்த மடத்தனமான செயலை செய்தால்... அத்தானின் பேர் சொல்ல வாரிசே இல்லாமல் போகுமே! நான் மாட்டேன்! என்னால் முடியாது! என் குழந்தைகளை அழிக்க அனுமதிக்க மாட்டேன்! எனக்கு நான் முக்கியமல்ல! அத்தானும், அத்தானின் ஜீவன்களும்தான் எனக்கு முக்கியம்!'' திவ்யா தேம்பித் தேம்பி அழ...

''திவ்யா... எனக்கு நீதான்டா முக்கியம்! நீயில்லாமல் எனக்கு ஒரு வாழ்வும், வாரிசும் வேண்டாம்! டாக்டர் திவ்யா அபிப்பராயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காதீர்கள்! முதலில் என் மனைவியைக் காப்பாற்றுங்கள்!''

அன்பு டாக்டரிடம் கெஞ்சினான்.

''ப்ளீஸ் டாக்டர்... இன்னும் ரெண்டு மாசம் பொறுத்துக்கிறேன்! குழந்தையைப் பெற்றுக்கிறேன்! என் இரு குழந்தைகளின் உயிர் உங்கள் கையில்தான் உள்ளது!'' என்று திவ்யா அழுது அலற...

''ப்ளீஸ்... ப்ளீஸ்... அன்பு அத்தான்! என் இரு குழந்தைகளின் மீது இரக்கம் காட்டுங்கள். பரிவு கொள்ளுங்கள்! உங்களைக் கடவுளாய் நினைத்துக் கேட்கிறேன்! எனக்காக மனம் இரங்கி... வரமாய்... என் பிள்ளைகள் உயிரை மீட்டுக் கொடுங்கள்!''

அன்பு மனமிரங்கி... டாக்டரிடம் கேட்டான்.

டாக்டர்... குழந்தை வயிற்றில் இருக்கும்போது... இந்த புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக் கூடாதா?''

''அளிக்கலாம், மிஸ்டர் அன்பு! ஆனால்... ஹீமோ தெரபி, ரேடியம் தெரபி கொடுக்கும்போது ஏற்படும் அந்த கதிர் வீச்சால் பிள்ளைகள் தலையில் முடியில்லாமல் வழுக்கையாய் பிறக்க வழியுண்டு! இரண்டும் பெண்

குழந்தைகள்! பிள்ளைகளின் தலையில் முடியில்லாம பார்த்துப் பார்த்து... நீங்கள் இருவரும் தினம் தினம் உயிரையே விட்டுக் கொண்டிருப்பீர்!'' டாக்டர் கூறினார்.

''சிகிச்சையை மேற்கொள்ளவில்லையென்றால்... திவ்யாவின் கர்ப்பப்பையில் நோய் அதிகமாகுமே, டாக்டர் குழந்தைகளின் உயிரைக் காக்க... என் மனைவியை இழக்க வேண்டிய தைரியம் என்னுள் இல்லையே! நான் என்ன செய்வேன்? திவ்யா... திவ்யா... பிடிவாதம் வேண்டாம்மா! நமக்கு குழந்தைங்க வேண்டாம்மா! நீ எனக்குக் குழந்தை! நான் உனக்குக் குழந்தையாய் வாழ்ந்து விடலாம்! யோசி... யோசிடாம்மா! என் உயிரே!''

''எத்தனை யோசித்தாலும்... என் கருவில் உருவாகும் குழந்தைகள்தான்... என் உடம்பைவிட, உயிரைவிட... எனக்கு முக்கியம்!''

''ஓ.கே. மிஸ்டர் அன்பு! அவங்க இஷ்டத்துக்கு விடுங்க! எட்டாம் மாதம் முடியட்டும்! ஒன்பதாவது மாத ஆரம்பத்தில் குறைப்பிரசவமாய் குழந்தைகளை ஆபரேசன் செய்து எடுத்து, இங்குபேட்டரில் வைத்து காப்பாற்றி விடலாம்! அப்போதே திவ்யாவின் கருப்பையை அகற்றி விடலாம்! அதுவரை கலங்காமல் இருங்க! கவலைதான் ஒரு நோயாளிக்கு எமன், திவ்யா! கவலைப்படாமல் இருப்பது அவசியம்!'' என்று கூறி அனுப்பி வைத்தார், டாக்டர்!

திவ்யா நிம்மதியானாள்!

அன்பு நிம்மதியையிழந்தான்!

ஒன்பதாவது மாத ஆரம்பத்திலேயே தேதி குறிக்கப்பட்டது!



திவ்யாவை ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்தான்!

டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை எடுத்தனர். பின்னர் கர்ப்பப்பையையும் அகற்றினார்கள்.

திவ்யாவிற்கு நோயின் தன்மை அதிகரிக்கா வண்ணம் செய்தது, அவள் கருவிலே வளர்ந்த குழந்தைகள்தான்!

கருவறையில் உருண்டு, புரண்டு, குதித்து... அந்த நோயின் தீவிரத்தை கட்டுப்படுத்திய மகத்தான மருந்துவர்கள்... அவளின் அழகு குழந்தைகள்!

குழந்தைகளை இங்குபேட்டரில் வைத்து பராமரித்தனர்!

அன்புவின் சாயலில் ஒரு குழந்தையும், திவ்யாவின் சாயலில் ஒரு குழந்தையும் இருந்தது!

புற்று நோய்க்கான சிகிச்சையை உடனடியாய் ஆரம்பிக்கச் சொன்னான், அன்பு.

''அப்படியெல்லாம் செய்யக்கூடாது! ஆபரேஷன் காயங்கள் கொஞ்சம் ஆறட்டும்!'' என்றார் டாக்டர்.

டாக்டர் அவளை குழந்தைகளுக்கு பால் கொடுக்க வேண்டாம் என்று கூறிவிட்டார்.

ஆனால், இயல்பாகவே திவ்யாவிற்கு பால் சுரக்கவில்லை! பத்து மாதங்கள் முடிந்து குழந்தை பிறந்திருந்தால் ஒருவேளை அவள் மார்பில் பால் சுரந்திருக்குமோ... என்னவோ...!

அந்தத் தாயின் உள்ளம் தவித்தது! அந்த தாயின் உள்ளம் கண்ணீரில் கரைந்தது!

எத்தனை கொடுமை!

தன் குழந்தைகளைத் தூக்கி... அணைத்து... மார்பில் சுரக்கும் மதுவை ஊட்ட முடியாத ஊனமானவளாய் போய்விட்டாளே! ஒரு வகையில் இதுகூட ஊனம்தான்!

ஜெயாவுக்கு அவள் நோய் பற்றிய செய்தி தெரியாது! குறைப் பிரசவமாய் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை எடுத்த காரணத்தை அன்புவிடம் கேட்க...

''அம்மா... ரெட்டை குழந்தைகளோட வெயிட்டை அவள் கர்ப்பப்பை தாங்கக்கூடிய சக்தியில் இல்லையாம்! அதனால் திவ்யாவுக்கு ஆபத்து எனக்கூற... உடனடியாய் ஆபரேசன் செய்து எடுக்க சம்மதித்து விட்டேன்!'' என்று பொய்யான காரணம் சொல்லி மழுப்ப... ஜெயாவும் மகனை நம்பி விட்டாள்.

இந்தியாவிற்கு செய்தி போய் சிவசங்கரன், சிவகாமி, மானசா மூவரும் உடனடியாய் வந்து சேர்ந்தனர்.

''என் பேத்திகள் மூக்கும், முழியுமாய்... கொள்ளை அழகாய் இருக்கிறார்களே!'' என்று சிவகாமி குழந்தைகளை அணைத்துக் கொண்டாள்.

மானசா குழந்தைகளின் அழகில் மனதை பறி கொடுத்தாள்.

''திவ்யா... அடுத்ததாவும் ரெட்டையா, ரெண்டு ஆண் குழந்தைகளைப் பெற்று கொடுத்துடும்மா!'' சிவசங்கரன் கேட்க...

அங்கிருந்த தமிழ் பேசும் நர்ஸ் ஒருத்தி...

''திவ்யாவால் இனி குழந்தை பெற்றுக்க முடியாதில்ல! கர்ப்பப்பையை அகற்றியாச்சில்லே!'' என்று நீளமாய் பேசப் போக... கௌதமின் மனைவி கீதா அவளை கைப்பிடித்து வேகமாய் அழைத்துக் கொண்டு வெளியேறினாள்.



''என்னடா சொல்றா, அந்த நர்ஸ்?'' ஜெயா கேட்க...

''என்ன மாப்பிள்ளை? ஏன்?'' சங்கரன் கேட்க...

''மாமா... திவ்யாவோட கர்ப்பப்பை பலவீனமா இருப்பதா டாக்டர் சொன்னாங்க! அதை அகற்றி விட்டால் திவ்யாவுக்கு நல்லது என டாக்டர் சொல்ல...'' அன்பு முடிக்கும் முன்பே...

''எதுடா நல்லது? பாவி... என்ன காரியம் செய்தே? எங்களை ஏன் கேட்காமல் செய்தே? ஆண் பிள்ளை வேண்டாமா? உன் பேர் சொல்ல ஒரு ஆண் வாரிசு வேண்டாமா? நாங்களெல்லாம் செத்தா போயிட்டோம்! எங்களை ஒரு வார்த்தை கேட்டுட்டுச் செய்யக் கூடாதா?'' சிவசங்கரன் கத்த...

''லட்ச லட்சமா சம்பாதிக்கிற திமிர்டா உனக்கு! உனக்கு அறிவில்லே! பாசமில்லே! இந்த திவ்யாவுக்கு அறிவு எங்கே போச்சி? நான் ஒருத்தி இங்கிருக்க... என்னை கேட்டுட்டு செய்யக்கூடாதா? என் தலையில ரெண்டு பேரும் நெருப்பையள்ளி கொட்டிட்டீங்களே, பாவி! ரெண்டு பேரும் நல்லா இருப்பீங்களா?'' ஜெயா சபிக்க,

''அம்மா...'' என்று அன்பு கத்த...

''அம்மான்னு உன் வாயாலே கூப்பிடாதேடா! இப்படி ஒரு காரியம் செய்தவன் என் மகனா இருக்க முடியாது!'' ஜெயா பத்ரகாளியாய் கத்த...

''என்ன கொடுமை மாப்பிள்ளை செய்துட்டீங்க? எங்களிடம் ஒரு வார்த்தை கேட்டுட்டு செய்யக்கூடாதா?'' கோபமே கொள்ளாத சிவகாமிகூட வேகமாய் கேட்க...

"அத்தை ஆபரேஷன் செய்து குழந்தையை எடுத்த கையோட அகற்றிட்டால்... திவ்யாவிற்கு சிரமம் இருக்காதுன்னு டாக்டர் சொல்ல... சரின்னு சொல்லிட்டேன்!"

"எதுடா சரி?" சிவசங்கரன் கோபமாய் கேட்க...

"மாமா... கோபப்படாதீங்க, மாமா! எனக்கு அடுத்ததா பிறக்கப்போற ஆண் வாரிசை விட... என் மனைவி திவ்யா தான் முக்கியம்! என் மனைவிக்கு ஒன்று என்றால், அதைப் பார்த்துட்டு நான் உயிரோடு இருக்க மாட்டேன்!" அன்பு சொல்ல...

"என்ன அத்தான் பேசறீங்க?"

மானசா ஓடிவந்து அன்புவின் வாய் பொத்தினாள்.

"ஏன் இப்படி அபத்தமா பேசறீங்க? அவங்களுக்கு கோபப்பட உரிமையிருக்கு! அவங்க கோணத்துல இருந்து பார்க்கும்போது... அது சரின்னு படும்! உங்க கோணத்துல இருந்து பார்க்கும்போது... இது சரின்னு படும்! அதுக்காக...அவங்க வாய்களை அடக்க... இப்படியெல்லாம் யோசிக்காமல் விபரீதமா பேசணுமா, அத்தான்? பெரியவங்களைக் கேட்டு செய்யலையேன்னு கோபப் படறாங்க! இது தப்பா?" மானசா கேட்க...

"தப்பு, சரி பார்க்கற காலமெல்லாம் கடந்துடிச்சி! விடுங்க! மாப்பிள்ளை வலியிலும், வேதனையிலும் இருக்கார்! மேலும் அவர் வலியைத் தூண்ட வேண்டாம்!"

சிவகாமி அனைவரையும் அடக்கினாள்.

டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்கு வந்தார்கள்.

"திவ்யா... மாமாவிடம் உண்மையான காரணத்தை சொல்லி விடலாமே! கேன்சர் வந்ததால்தான் கர்ப்பப் பையை அகற்றினோம்ன்னு சொல்லிடலாமே! பிறகு தெரிய வந்தால் மாமா எத்தனை சீறுவாரோ! ஒரு



உண்மையை மறைக்க நிறைய பொய்களை சொல்ல வேண்டி வரும்! எனக்கு பயமா இருக்கு, திவ்யா!" அன்பு சொல்ல...

"வேண்டாம், அத்தான்! எல்லோரும் துடிச்சிப் போவார்கள்! நம்மால் அவங்களும் நிம்மதியை இழந்து வாழ வேண்டி வரும்! தேவையா? நம் துக்கம் நம்மோடே இருக்கட்டும்!" திவ்யா கட்டாயமாய் மறுக்க...

"வேண்டாம், திவ்யா! சொல்லிடலாம், திவ்யா! ப்ளீஸ்..." அன்பு கெஞ்ச...

கௌதமும் அதையே அறிவுறுத்த...

திவ்யா திடமாய் மறுத்து விட்டாள்.

கொஞ்ச நாளில் மானசாவும், சிவசங்கரனும் கிளம்ப... ஜெயாவும், சிவகாமியும் தங்கி இரு குழந்தைகளையும் பார்த்துக் கொண்டனர்.

முதலில் குழந்தையை நேசித்த திவ்யா... பின்னர் தன்னைக் கட்டுப்படுத்தி... குழந்தைகளை வெறுப்பது போல அவ்வப்போது சொற்களை வீசினாள்.

அதன் காரணம் புரியாமல் ஜெயாவும், சிவகாமியும் குழம்பித் தவித்தனர்.

## 12

**"போலியான நண்பனைவிட உண்மையான எதிரியே மேலானவன்!"**

திவ்யா குழந்தைகளைக் காணும் போதெல்லாம் எரிச்சலோடு எதையாவது சொன்னாள்.

''இந்த தரித்திரங்கள் உதிச்ச வேளைதான் என் உடம்பு கெட்டுப் போச்சு!''

''சனியனுங்க... என் உயிரை வாங்கிட்டு வந்து எப்படி கொழுகொழுன்னு இருக்குது பாருங்க!''

''இதுங்களைப் பார்க்கவே வெறுப்பா இருக்கு! முதல்ல தூக்கிட்டு தூரப்போங்க!''

''ஏன் அத்தை... என் கண்ணுல படறாப்போல தூக்கிட்டு வரீங்க? அதுங்களை எங்காவது கழுத்தை முறித்து வீசனாத் தேவலாம் போல இருக்கு!''

நாளுக்கு நாள் அவள் வெறுப்பின் தன்மை அதிகரிக்க...

''உனக்கு எதுனா பைத்தியம் பிடிச்சிடிச்சா, திவ்யா? குழந்தைங்க என்ன செய்யும்? பாவம் பச்சை மண்ணை... இப்படி மனசே இல்லாமல் சபிக்கறையே! பாவி... நீயெல்லாம் தாயா? இல்ல பேயா? உன்னிடமுள்ள இரக்க குணத்தை யாரிடமாவது இரவல் கொடுத்துட்டையா? ஏண்டி இப்படி அரக்கத்தனமா இருக்கே?'' இது சிவகாமி!

''யாராவது தன் குழந்தைகளை எமன், தரித்திரங்கள் என்று சொல்வார்களா? கொல்லுவேன்னு சொல்வார்களா? இதுங்களை உன்னிடம் விட்டால் செய்தாலும் செய்வாய்டி!'' இது ஜெயா.

''ஆமாம் கொல்வேன்தான்!'' என்று திவ்யா கத்த -

''உனக்கு அப்படி என்னதான்டி ஆச்சி? என்ன நோய்தான் வந்திருக்கு? இன்னைக்கு நாட்டுல நிறைய பெண்கள் கர்ப்பப்பை பிரச்சனையால்... அதை எடுத்துட்டு சர்வ சாதாரணமா நடமாடறாளுங்க! இதைப் போய் பெரிசா எடுத்துட்டு கோபப்படறீயே!'' இது சிவகாமி.



''குழந்தைங்க விஷயத்துல அநியாயமா... நியாயம் தவறி நடக்கறே, திவ்யா! என் பிள்ளை வரட்டும்! போனால் போகுதுன்னு ஒவ்வொரு நாளும் பொறுத்துப் போனால்... தினம் தினம் குழந்தைகளை கரிச்சிக் கொட்டறதும்... வெறுப்பை உமிழறதும்... உன்னை அன்பு கிட்ட சொல்லி அடக்கலேன்னா அடங்க மாட்டேடி! ஆபீஸ் விட்டு என் பையன் வரட்டும்! இன்னைக்கு ஒரு முடிவு கட்டறேன்!'' இப்படி ஜெயா கத்த...

''என்னை அடக்க எந்தக் கொம்பனாலும் முடியாது! அன்பு எம்மாத்திரம்?'' திவ்யா சீற...

''உன்னை எப்படி அடக்கறதுன்னு எனக்குத் தெரியும்டி! பொம்பளையாவா நடந்துக்கிறே? அதுவும் ரெண்டு பிள்ளைகளை பெத்தவளாவா பேசறே? என் மகன் வரட்டும்! அந்த வாய்லே சூடு வைக்க சொல்றேன்!'' ஜெயா கத்திக் கொண்டே வாசலுக்குப் போக...

''நீ மட்டும் ஏன் நிற்கறே! இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் ஆசை மாப்பிள்ளை வரலாம்! போ... போய் உனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லும்மா!'' என்று திவ்யா சொல்ல... சிவகாமி ஆடிப்போய் விட்டாள்.

திவ்யா பட்டென்று கதவு மூடி... படுக்கையில் விழுந்து... முதுகு குலுங்க... நெஞ்சே வெடித்து விடும் அளவு அழுதாள்.

கொஞ்ச நேரத்தில் அன்பு வர... ஜெயாவும், சிவகாமியும் மாறிமாறி குழந்தைகளை இந்த ஒரு மாதமும் திட்டுவதைக் கூற... அன்பு கோபத்தோடு வந்து அறைக் கதவைத் தட்ட...

அழுது அழுது களைத்து தூக்கத்துக்குப் போன திவ்யா... சட்டென்று அன்புவின் குரல் கேட்டு... அலறி அடித்துக் கொண்டு வந்து திறந்தாள்.

கட்டிலில் கோபத்தோடு வந்து அமர்ந்தவன்... அவளையும் அருகில் அமர்த்தி கோபத்தோடு கேட்டான்.

''திவ்யா... அம்மாவும், அத்தையும் சொல்வதெல்லாம் நிஜமா? நம் குழந்தைகளைப் பிடிக்கலையா? அதுங்களை வெறுக்கிறாயா?''

''என்னை நீங்களும் புரிஞ்சிக்கலையே! பெத்த குழந்தையை வெறுக்கும் தாயை உலகத்தில் பார்க்க முடியாதே! அப்படின்னால்... டாக்டர் இதுங்களை அழிச்சிட்டு சிகிச்சையை மேற்கொள்ளலாம் என்றபோது... என் உடம்புதான் முக்கியம்... என் ஆயுள்தான் முக்கியம் என்று முடிவெடுத்து... அன்றைக்கே குழந்தைகளை கருவிலேயே அழிச்சிருக்கலாமே!'' என்று அழுதாள்.

''பின்னே ஏன்டா?''

''ரெண்டு குழந்தைகளும் இங்கே வளர வேண்டாம்!''

''எதுக்காக இப்படியெல்லாம் பேசறே? நம் குழந்தைகள் நம்மிடம் வளராமல் எங்கே வளர்வது?''

''இந்தியாவில்! என் தாய், தந்தை, தங்கையோடு!'' கண்ணீர் வழியச் சொல்ல...

''என்ன திவ்யா சொல்றே? ஏன்?''

''என்னிடம் குழந்தைங்க ஒட்டிக் கொண்டால்... பிறகு பிரிந்து இருப்பது கஷ்டம்?'' என்று புதிராய் சொல்ல...

''உன்னை எதுக்கு பிரிந்து இருக்கணும்?''

''நான்... நா... நான்...!'' வார்த்தைகள் தடுமாறியது.



''நீ... நீ...''

''நான்... நா... நான் இ... இந்த புற்று நோயால் இறந்து விட்டால்...!''

சட்டென்று கண் மண் தெரியாமல் கோபம் வர... அவன் கை நீண்டு விட்டது. ஓங்கிக் கன்னம் பழுக்க அறைந்து விட்டான்.

திவ்யா அவன் கைப்பற்றி முத்தமிட்டு 'கடகட'வென சிரித்தாள். பின் சொன்னாள்.

''என்னை நீங்க எவ்வளவு நேசிக்கறீங்கன்னு உங்க அழுத்தமான அடியிலிருந்து தெரியுது, அத்தான்!''

''ஏய் திவ்யா... ஏன்டி என்னை கொல்றே? ஏன் இப்படியெல்லாம் பேசி... என் உயிரைக் கொஞ்ச கொஞ்சமா எடுக்கறே? உனக்கு எவ்வளவு செலவானாலும் செலவு செய்ய நான் இருக்கேன்! மருத்துவம் எவ்வளவு முன்னேறியிருக்கு, தெரியுமா?''

''நீங்க எவ்வளவு வேணா செலவு செய்வீங்க? ஆனால் இந்த நோய் என்னை விடாது! புற்று நோய் வந்து பிழைத்தவர்கள் அரிது! அது தெரியாதவரா, நீங்கள்?''

''பேசாதே, திவ்யா! இனி ஒரு நாளும் இப்படியெல்லாம் பேசாதே! என் உயிர் போகுது, திவ்யா! என்னால் தாங்கிக் கொள்ள முடியலையே!'' என்று சட்டென்று குழந்தையாய் அன்பு முதுகு குலுங்கி அழ... திவ்யா தாங்க முடியாமல்.. மடியில் இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

அன்புவின் துக்கம் மலைமலையாய் உயர்ந்தது.

கொஞ்ச நேரம் கழித்து மெல்ல எழுந்தவனிடம்...

''குழந்தைங்க இங்கே வளர வேண்டாம்! நீங்க எனக்கு எவ்வளவு முக்கியமோ... உங்களை எப்படி என் நெஞ்

சிலே வைத்து நேசிக்கிறேனோ... அது போல அதுங்களையும் விரும்பறேன்! என்கிட்ட அதுங்க பாலே குடிக்கலன்னாலும்... ரத்த சம்பந்தத்தாலோ என்னவோ... என்னிடம் இருக்கும்போது அழறதுயில்லே! அதுங்க என்னிடம் நல்லா ஒட்டிட்டா... பிறகு கஷ்டமாய் போய் விடும்!''

அவள் புதிராய் பேசினாள்.

''ஏன் திவ்யா இப்படிப் பேசறே? என்னை வேதனைப் படுத்தாமல் இருக்க முடியாதா?'' அன்பு வலியோடு கூற...

அவள் எதுவும் பேசாமல் அழ...

''நீ அதிகமா அழக்கூடாது! உன் உடம்புக்கு அது ஆகாது! மாமாவை வரவழைக்கிறேன்! அவர் வந்த பின் அம்மா, அத்தையிடம் விஷயத்தைச் சொல்லலாம்! உன் ஆசையை நிறைவேற்றறேன்! உன் குழந்தைங்க இந்தியாவுல வளரணும்! அப்படித்தானே?''

''ம்... அதுவும் மானசாவிடம்!''

''சரிம்மா... முயற்சிக்கிறேன்!'' என்றதும்... திவ்யா மலர்ந்தாள்.

அவளின் மலர்ச்சி விரைவிலேயே வாடப் போகிறது என்று அறியாமல்!

# 13

**''எளிதில் சம்பாதிக்க முடியும், எதிரிகளை!**
**எளிதாய் சம்பாதிக்க முடியாது, நண்பர்களை!''**

விடியலின் உற்சாகத்தில் வானமும், பூமியும் துள்ளி குதியாட்டம் போட்ட காலை 8 மணி!



மானசா வேலைக்காரியோடு சமையலறையில் அப்பாவிற்கு தேவையான டிபன், மதிய சாப்பாட்டு வேலையை முடித்தாள்.

பின்னர் குளித்து முடித்து... ஒரு நல்ல அழகிய சேலையை எடுத்தாள்.

மானசாவிற்கு மாடர்ன் ட்ரஸ் மேல் எல்லாம் மோகமில்லை! அவளுக்குப் பிடித்த உடை சேலைதான்!

தன்னை வெகு நேர்த்தியாய் அலங்கரித்துக் கொண்டு ஒரு முறைக்கு இரு முறையாய் கண்ணாடியில் தன்னை திரும்பித் திரும்பிப் பார்த்து திருப்திப் பட்டவளாய்... புத்தகத்தை அள்ளிக் கொண்டு கல்லூரிக்குக் கிளம்ப...

''மானசா...'' அதிகாரத் தோரணையில் சிவசங்கரனின் குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.

''அப்பா...'' என்று அருகில் போனவளை... மேலிருந்து கீழாய் நோக்கி முறைக்க... மானசா பயந்து விட்டாள்.

''நானும் கொஞ்சநாளாய் கவனிச்சிட்டு வரேன். உன் கிட்ட நிறைய மாற்றம் தெரியுதே! உடையில் அக்கறை காட்டறே! பளிச்சின்னு முகத் திருத்தம்! உதடுகளில் எந்த நேரமும் மென்னகை... இரவு நெடு நேரம் உறங்காமல் பால்கனியில் உலாவறே! தனியா சிரிக்கறே! தோட்டத்து மலரோட பேசறே! பறவைகளை கொஞ்சறே! சாப்பிடும் போது சதா ஏதாவது எண்ணம்! அதெல்லாம் என்ன?''

''அதெல்லாம் இல்லப்பா!'' பயத்தோடு சொன்னாள்.

''காதல் வயப்பட்டவர்களின் நடத்தைப்போல தெரியுதே! நீ யாரையாவது காதலிக்கிறாயா...?''

சிவசங்கரன் சாதாரணமாய் கேட்க... மானசாவிற்கு உடம்பெல்லாம் உதறியது.

"அதெல்லாம் இல்லேப்பா!"

"அப்படி ஒரு எண்ணம் இருந்தால்... அந்த எண்ணத்தை தீயிட்டுக் கொளுத்திடு!"

மானசா விதிர் விதிர்த்துப் போனாள்! வியர்த்துப் போனாள்!

"காதல், கத்திரிக்காய்ன்னு நம்ம குடும்பப் பெண்கள் இதுவரைக்கும் வழிதவறிப் போனதில்லே! நம்ம பரம்பரைப் பெண்கள் அப்படி ஒரு இழிவான காரியத்தை செய்து குடும்ப மானத்தை வீதிக்குக் கொண்டு வர்லே! உன் அக்கா திவ்யா எப்படி இருந்தால் தெரியுமில்லையா? அன்புவைக் கட்டிக்கோ என்றதும் மறு பேச்சியில்லாமல் தலையைக் குனிந்து, கழுத்தை நீட்டினாள். அதுபோல நீயும் படிப்பு முடிஞ்சதும்... நான் பார்த்து முடிவு பண்ற மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டணும்! புரியுதா?" கழுத்து நரம்புகள் புடைக்க சிவசங்கரன் கத்தினார்.

மானசா மௌனமாய் நின்றாள்.

"ஏய்... என்ன எதுவும் பேசாமல் நிற்கறே? அப்போ உன்கிட்ட ஏதோ கள்ளம் இருக்கு! என்னடி எவனையாவது மனசுல நினைச்சுட்டு இருக்கீயா?"

"இல்லேப்பா...!"

"மனசுல இருந்து வார்த்தை வராப்போல இல்லையே! வாய் மட்டும் சொல்லுது! மனசு மறுக்குது போல!"

"இல்லேப்பா!"

"என்னைப் பற்றி தெரியுமில்லையா? ஜாதி, மதம் பார்க்கிறவன்! ஜாதியா சோறு போடுது? மதமா உங்களைத் தாங்குதுன்னு கேள்வி கேட்டுடாதே!



உன்னை ஆஸ்பிட்டலில் சேர்த்து, ரத்தம் கொடுத்து காப்பாற்றினானே ஒரு பயல்... அவன் உன்னிடம் பேசறானா? உன்னைக் காப்பாத்தினானேன்னு அவன் மேல் பாசம் வந்துடப் போகுது! அந்த பாசம் நட்பாகி... நட்பு காதலாகி... அப்புறமா அவனை எனக்குக் கல்யாணம் பண்ணி வையுங்கன்னு வந்து நின்னுடாதே! பஸ்ட் இயர் பரிட்சை வருதில்லையா?"

"ம்...."

"அதில் உன் கவனத்தைச் செலுத்து!"

"சரிப்பா!"

"அதை விட்டுட்டு உன் மனசை மதிகெட்ட வழியிலே செலுத்திடாதே! இந்தக் காலத்து படமும், டி.வி.யும் உங்களுக்குக் காதலையும், வழி தவறலையும் தானே போதிக்குது!"

மானசா மௌனமாய் நிற்க...

"போ... போ... புத்தியுள்ளவளாய் இரு!

மானசாவிற்கு விரிவுரையாளர் நடத்தும் பாடம் மனதில் பதியவில்லை! காலையில் தந்தை எச்சரித்த சொற்களே காதில் மீண்டும் மீண்டும் ரீங்காரமிட... முகம் சோர்ந்து... கண்கள் கலங்கி அமர்ந்திருந்த மானசாவைக் கண்ட மைக்கேல்... மதிய இடைவேளையில் வழக்கமாய் சந்திக்கும் இடத்தில் அமர்ந்திருந்தான்,

மானசாவும் சாப்பாட்டைக் கைகளால் அலைந்து விட்டு... டப்பாவை மூடி வைத்து விட்டாள். பின் மைக்கேலிடம் சென்றாள். அவன் முன்பு அமர்ந்தாள்.

"மானு... காலையில இருந்தே உன் முகம் சரியில்லையே! உடம்பு சரியில்லையாம்மா...?" அவன் அக்கறையாய் கேட்க...

அவள் விழிகள்... நொடிப் பொழுதில் கண்ணீரில் மிதந்தன. மைக்கேல் பதறிவிட்டான்.

"மானு... மானும்மா... என் கண்ணே... என்னடாம்மா? நிஜமாவே உடம்பு சரியில்லையாடாம்மா?" அவன் நெற்றியில் தொட்டுப் பார்க்க...

"உடம்பு நல்லாத்தான் இருக்கு! உள்ளம் தான் நல்லாயில்லே!" அவள் அழ...

"உன் மனசை நோகறாப்பல என்னடாம்மா நடந்தது?"

மானசா அழுகையினூடே காலையில் நடந்த நிகழ்ச்சியை சொல்லி முடித்தாள்.

"ப்பூ... இவ்வளவுதானா? நான் என்னவோ, ஏதோன்னு பயந்துட்டேம்மா! நீ கவலையேப்படாதே! உன் அப்பாவுக்கு பிடிச்சாப்போல... நான் மதம் மாறிடறேன்!"

"உண்மையாகவா, மைக்கேல்?"

"பொய்யில்லே, மானு! நிஜமாத்தான்! கெஜட்டுக்கு எழுதிப் போட்டு என் பெயரை மாத்திக்கிறேன்! என் இதயம் கவர்ந்த மானுவுக்காக இதைக்கூட செய்ய மாட்டேனா...? ம்? சரி... எனக்கு என்ன பெயர் வைக்கலாம்? நீயே சொல்லுடா, கண்ணே? ராம், சிவா, முருகன்?..." அவள் மௌனமாய் இருக்க...

"விஜய், அஜீத், சூர்யா, விக்ரம்?"

"ஐய்யோ... உங்களை என்ன செய்தால் தகும்?" சிரிப்போடு கைத்தூக்க...



"ராமசாமி... குப்புசாமிங்கிற பேர்தான் உனக்கு ரொம்பப் பிடிக்குமா?"

"ஐயே...!" மானசா முகம் சுருக்க...

"மானசா ப்ரியன்... இந்த பேர் உனக்குப் பிடிச்சிருக்கா?"

"ரொம்பத்தான் என்மேல் உங்களுக்கு ப்ரியம்! உங்க ப்ரியத்துக்கு... உங்களை மெச்சிக்க வேண்டியதுதான்! எனக்கு ஐயா அரவிந்தரைப் பிடிக்கும்! ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்று போதித்த புத்த பெருமானைப் பிடிக்கும்! உண்மையையே உயரிய கொள்கையாய் கொண்ட அண்ணல் காந்தியடிகளைப் பிடிக்கும்! அரவிந்தர், புத்தர், கௌதம், சித்தார்த், காந்தி இப்படிப் பட்ட பெயரில் ஒன்றை தேர்ந்தெடுத்து வச்சிக்கலாம். உங்களுக்கு எந்தப் பெயரைப் பிடிக்குது, மைக்கேல்?"

"எனக்குன்னு எந்த விருப்பு, வெறுப்புமில்லே! என்றைக்கு உன்கிட்ட என் மனசைப் பறி கொடுத்தேனோ... அன்றிலிருந்து உனக்கு பிடிச்சதெல்லாம்... எனக்கும் பிடிக்கும்! உனக்குப் பிடிக்காததெல்லாம் எனக்கும் பிடிக்காது!"

"நீங்க அசைவம் விரும்பிச் சாப்பிடுவீங்க! ஆனால் எனக்கு அசைவம் பிடிக்காது! எனக்காக அதை விட்டுடுவீங்களா?"

"விட்டுட்டேனே! உன்னை காதலிக்க ஆரம்பித்த நாட்களிலிருந்து!"

"எப்படித் தெரியும்?"

"நிர்மலாகிட்ட கேட்டுத் தெரிஞ்சுகிட்டேன்! ஆ
சமீபமா லவ்வர்ஸ் டே வரப்போகுதே! எனக்காக என்

பரண்ட் பண்ணப் போறே? மானசா... காதலர் தினத்தை எப்படி கொண்டாடலாம்?'' மைக்கேல் கேட்டதுதான் தாமதம்... மானசா பொங்கியெழுந்தாள்.

''கடற்கரை, ரெஸ்டாரெண்ட், இரவு விருந்து, மகாபலிபுரம் காட்டேஜ், படகு மறைவுன்னு நீங்களும் சராசரி இளைஞனா கற்பனைப் பண்ணிக்காதீங்க, மைக்கேல்! உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சதுக்குக் காரணமே... மற்றவர்களிலிருந்து நீங்க வேறுபட்டு காணப்பட்டதால்தான்! மேலை நாடுகளில் நம் நாட்டைப் போல கலாச்சார, பண்பாடு, சமய திருவிழாக்கள் இல்லை! அதனால்தான் கண்ட நாட்களையெல்லாம் ஏதாவது ஒரு தினம் என்று கொண்டாடுகிறார்கள்! அதிலும்... இந்தியாவிலும் காதலர்தினம் என்ற நோய் இளைஞர்களைப் பிடித்து ஆட்டுவிக்கிறது! அந்த நாட்களில் இளைஞர்களும், இளைஞிகளும் அடிக்கும் கொட்டம் காணச் சகிக்கலே! மேலை நாடுகளில் என்னடாவென்றால் பல லட்சம் மக்கள் ஒன்று கூடி முத்தத் திருவிழா என்று உதட்டோடு உதடு வச்சி... ச்சே... காணச் சகிக்கலே! கலாச்சாரம், பண்பாடெல்லாம் அதள பாதாளத்துக்கு போயிட்டேயிருக்கு! அதையெல்லாம் பொறுத்துக்கவே முடியல!''

மானசா முகம் கறுத்து, கண்கள் சிவக்க, உணர்ச்சி பொங்கக் கூற...

''கூல் டவுன்... கூல் டவுன் மை ஸ்வீட்டி! யாரோ எப்படியோ போய் போறாங்க! நாம ஒழுங்கா இருக்கோமா... அதை நினைத்து சந்தோசமாய் இரு! சும்மா உன்னைச் சீண்டினேன், மானும்மா! சிரித்த முகத்தைக் காண ஆவல் கொண்டதன் விளைவு, தட்ஸ் ஆல்!''



''சரி... சரி... அதுயென்ன கையில பேப்பர்! என்ன கவிதையா? எந்த மாதிரி கவிதை? கொடுங்க!'' என்று வாங்கிப் படித்தாள்.

''உன்னை மோகத்தோடு
தீண்டும் தென்றலுக்கும்...
உன்னை வேகத்தோடு
வாட்டும் வாடைக்காற்றுக்கும்...
என்னால் வேலி போட முடியும்!
என்னை எதிர்கொள்ளும்
தடைகளைத் தகர்த்தெறிவேன்...
முட்டுக்கட்டைகளை முறியடிப்பேன்...
உன் கடைக்கண்
காதல் பார்வை மட்டும் கிடைத்துவிட்டால்...''

''ரொம்ப நல்லாயிருக்கே! எப்போதிருந்து கவிஞனானீங்க?''

''உன்னைக் கண்ட நாள் முதல்!''

''அழகா பேசறீங்க! உங்களுக்கொரு முக்கியமான விஷயம், மைக்கேல்! நம் படிப்பு முடியும் வரை எங்க வீட்டுக்கு நம் காதல் தெரிய வேண்டாம்! அதனால் இனி நாம் இப்படி அடிக்கடி சந்திப்பதை குறைத்துக் கொள்வோம். சரியா...?''

மானசா சொல்ல...

மைக்கேல் இறக்கையை இழந்த வண்ணத்துப் பூச்சியாய் துடிதுடித்துப் போய்விட்டான்.

# 14

''சோதனைகளையும் வேதனைகளையும் கடப்பவனே வெற்றி பெறுகிறான்!''

அன்பு அழைக்க... மானசாவை வேலைக்காரியின் பொறுப்பில் விட்டுவிட்டு... சிவசங்கரன் மட்டும் பயண மானார், தாய்லாந்திற்கு!

திவ்யாவின் விருப்பத்தை அன்பு சொல்ல... சிவசங் கரன் ஒரேயடியாய் மறுத்தார்.

''தாய்ப்பால் குடிக்கலே! திவ்யாவின் உடல்நிலை கண்டிஷனில்... குழந்தைகளை வளர்க்க முடியாது! நீங்களும் எத்தனை நாட்களுக்கு அத்தை, அம்மாவைப் பிரிந்து இருக்க முடியும்? நான் சொல்வதை செய்யுங்க, மாமா!''

''உனக்கு ஏன் அன்பு புத்தி இப்படிப் போகுது? குழந்தைங்க தாயோடத்தான் இருக்கணும்! வளரணும்!'' கட்டாயமாய் சிவசங்கரன் சொல்ல...

''வேண்டாம்ப்பா! என்னோட விருப்பத்தை நிறை வேற்றுங்கப்பா! குழந்தைகளை இந்தியாவுக்குத் தூக் கிட்டுப் போங்கப்பா! ப்ளீஸ்ப்பா...'' திவ்யா கெஞ்சி னாள்.

''நீ சும்மாயிரு, திவ்யா! குழந்தைங்க கொஞ்சம் வளரும் வரை அம்மாவும், அத்தையும் இருக்கட்டும்! நான் சமாளித்துக் கொள்வேன்! மானசா இருக்காயில் லையா?''



''சொல்றதை கேளுங்கப்பா! என் வேண்டுகோளை நிறைவேற்றுங்க!''

''என்ன காரணம், திவ்யா? ரெண்டு பேரும் எதையோ மறைப்பது போல இருக்கே?''

திவ்யா மௌனமாய் இருந்தாள்.

திவ்யாவின் மெலிந்த தோற்றத்தைக் கண்டவர்... அப்போதுதான் கவனித்தார். திவ்யா முகமெல்லாம் வற்றி... கன்ன எலும்புகள் தூக்கிக் கொண்டு... மயில் தோகையாய் இருந்த முடியை இழந்து... திவ்யா பார்க்கவே சகிக்காமல் இருந்ததைக் கண்டவரின் உள்ளம் நடுங் கியது.

பாசத்தோடு அருகில் அமர்ந்தவர்... ''திவ்யா... உன் முடியெல்லாம் என்னாச்சிம்மா? முன்பிருந்த முடியில் பாதிகூட இல்லையே! ஏய் சிவகாமி... நம்ம பெண் ஏன் இப்படி இருக்கா?''

''பிரசவம் ஆனால் முடி கொட்டறது இயல்புதாங்க!'' என்றாள் சிவகாமி.

''சங்கரா ஆபரேசன் செய்து குழந்தை எடுத்ததில் லையா... அதான் திவ்யா நலிந்த தோற்றத்தில் இருக்கா! இன்னும் கொஞ்ச நாளில் சரியாயிடுவா'' என்றாள் ஜெயா.

திவ்யாவிற்கு கேன்சருக்கான ட்ரீட்மெண்ட் கொடுக்கப் பட்டதிலிருந்து முடி கொட்ட ஆரம்பித்து விட்டது என்று அன்பு எவ்வாறு சொல்லுவான்? அதை பெற்றவர்கள் தாங்குவார்களா? அதுவும் திவ்யாவின் மேல் உயிரையே வைத்திருக்கும் மாமா தாங்க மாட்டாரே! என்று அன்பு உள்ளுக்குள்ளே ஊமையாய் அழுது கொண்டிருந்தான்.

ஆனால் சிவகாமியும், ஜெயாவும் சொன்ன காரணத்தை சிவசங்கரன் நம்பவில்லை!

அன்புவின் அருகில் வேகமாய் போனார்.

"அன்பு... சொல்லு, அன்பு? திவ்யாவுக்கு என்னடா?" என்று கேட்க...

அவன் மௌனமாய் இருக்க... கோபம் கொண்ட சங்கரன் அவனின் சட்டையை கொத்தாய் பற்றி உலுக்கினார்.

"என் பொண்ணுக்கு என்னடா? என்ன நோய்டா?" என்று கத்த...

திவ்யா ஆத்திரத்தோடு "அப்பா... அவரை விடுங்க! மாப்பிள்ளைங்கிற மரியாதை வேண்டாம்? இன்னும் அவர் அத்தையோட மகன்னே உங்களுக்கு நினைப்பா? வாடாங்கிறதும்... போடாங்கிறதும்...! இப்போ அவர் என் புருஷன்! என் புருஷனுக்கு மரியாதை கொடுங்க... இனிமேலாவது பழகிக்கங்க!" என்று திவ்யா கேட்க... சிவசங்கரன் ஆடிப் போய் விட்டார்.

"எனக்கு என்னன்னு தெரியணும் அவ்வளவுதானே? நான் சொல்றேன்!"

"திவ்யா வேணாம், திவ்யா! மாமா தாங்க மாட்டார் திவ்யா!" என்று அன்பு அலற... சிவகாமியும் ஜெயாவும் அதிர்ச்சியோடு நோக்கினர்.

"இல்லத்தான்... சொல்லிடறேன்! சொல்ல வேணாம்னு உங்ககிட்ட கேட்டுகிட்டவளும் நான்தான்! இப்போ சொல்லிடறேன்னு கேட்கறவளும் நான்தான்! இப்போ சொல்லாமல் விட்டுட்டா... அப்பா அப்புறம் உங்களை கொலைகாரன்னே... உங்க மேல பழியைச் சுமத்திடு



வார். அதனால் அவரும் தெரிஞ்சிக்கிறது நல்லதுதான்!" என்ற திவ்யா...

"எனக்கு வந்திருக்க நோய் கேன்சர்! அந்த காரணத்தாலதான் என் கர்ப்பப்பையை எடுத்தது! இப்போ ஓவரியில பரவியிருக்காம். திரும்பவும் ஆபரேஷன் செய்து ஓவரியை அகற்றணுமாம்!"

"ஐய்யோ திவ்யா..." அத்தனை பேரும் அலறினர்.

அம்மா ஓடிவந்து கட்டிக் கொண்டாள்.

"நான் இன்னும் உங்களோட எத்தனை நாட்களுக்கு உயிரோடு இருப்பேனோ...? அப்பா... அப்பா... அதனால் தான்... அதனால்தான்... என் குழந்தைகளை..." அதற்கு மேல் சொல்ல முடியாமல் கதற... சிவசங்கரன் ஓடிவந்து மகளின் வாயைப் பொத்தினார்.

ஜெயா மார்பில் அடித்துக் கொண்டு அழுதாள்.

அரை மணி நேரத்திற்கு மேலாய் அழுது... பின்னர் முதலில் தெளிவுக்கு வந்தது திவ்யாதான்!

"சொல்லுங்கப்பா... என் குழந்தையை இந்தியாவுக்கு எடுத்துட்டுப் போறீங்களா?"

"இல்லே திவ்யா! நாம எல்லோரும் கும்பலா போறோம்!"

"அத்தானோட பிஸினஸ் இப்போ உச்சிக்கு வந்திருக்கு! இப்போ வேண்டாம்ப்பா!" திவ்யா மறுக்க...

"பிஸினஸூம் வேண்டாம்... ஒரு மண்ணும் வேண்டாம்! சம்பாதித்தது போதும்! எல்லோரும் புறப்படலாம்!"

"இல்லப்பா... அது சரிப்படாது! அத்தானோட முன்னேற்றத்துக்கு நாமே தடையா இருக்கக் கூடாது!"

"அப்போ இவன் மட்டும் இங்கே இருந்து பிள்ளைங்க பார்க்கட்டும்! நீ எங்களோட வந்துரு!"

"அத்தானை பிரிந்து என்னால் இருக்க முடியாதுப்பா! கடைசி நேரம் அத்தான் அருகிலே இருக்கணும்! அவர் மடியில உயிர் விடணும்னு ஆசைப்பா!" திவ்யா அழுத வாறு சொல்ல...

"வார்த்தையால கொல்லாதம்மா! உனக்கு ஒண்ணும் ஆகாது! அன்புவோட நீண்ட காலம் நலமா வாழ்வே!" என்று சிவசங்கரன் கதறினார்.

"மாமா... கலங்காதீங்க! திவ்யா நல்லாயிடுவா! டாக்டர்ஸ் நம்பிக்கையா சொல்றாங்க! இங்கே இருந்து அங்கேன்னு மருத்துவத்தை மாற்ற வேண்டாம்! அங்கே போனால் அப்புறம் ஆரம்பத்துல இருந்து ட்ரீட்மெண்ட் தருவாங்க! அது சரிப் படாது! குழந்தைகளை மட்டும் தூக்கிட்டுப் போங்க!"

"தாயையும் பிள்ளையையும் பிரிச்ச பாவத்தை செய்ய மாட்டோம்! திவ்யாவுக்கு குணமாகிற வரை உன் அத்தையும், அம்மாவும் இங்கே இருக்கட்டும்! மானசாவும், நானும் அடிக்கடி இங்கே வந்து பார்க்கறோம்! மானசாவின் படிப்பு முடியட்டும்... நாங்களும் பறப்பட்டு இங்கே வந்துடறோம்! திவ்யா நீ பயப்படாதே! உடம்பைப் பார்த்துக் கொள்!" என்று சொன்னவர்...

இரண்டு நாளில் விமானம் ஏறிவிட்டார்.

சிவகாமியும் ஜெயாவும் அவளை கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண்டனர்.

மீண்டும் ஆபரேசன் செய்ய நாட் குறித்தனர்.



அதற்கு முதல் நாள்... அன்புவோடு தனிமையில்...

"அத்தான்... நான் இன்றைக்கு உங்களோட மனசு விட்டுப் பேசணும்! நீங்களும் என் வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுத்து காதுல வாங்கிக்கணும்! பேசவா? பேச அனுமதிப்பீங்களா?" திவ்யா கேட்க...

"வேணாம், திவ்யா! உன் பேச்சென்ற வாள் எடுத்து... என் இதயத்தை அறுத்தெறிவாய்!" அவன் மறுக்க...

"நிச்சயமா நான் பேசணும்... ப்ளீஸ்" என்று கெஞ்ச... அவன் அமைதியானான்.

"இந்த சின்ன வயதிலேயே சாமியாரைப் போல... உங்களை அடக்கி... உணர்வுகளை கொன்னுட்டு வாழற நிலைமை வந்துடிச்சே! என்னால் உங்களுக்கு எந்த சுகமும் இல்லே! வாழ வேண்டிய வயசுல நோய் வந்து படுத்துட்டேன்! உங்களுக்கு அனுபவிக்க வேண்டிய வயது! அடங்கிப்போய் இருக்கீங்களே! உங்களுக்கு பயன்படாத இந்த உடம்பு, உயிர்... சீக்கிரமே போய் சேர்ந்துடணும்னு ஆண்டவனை வேண்டிக்கிறேன்!"

"திவ்யா..." அன்பு கத்தினான்.

"நிஜமாத்தான்! நாளைய ஆபரேஷன்ல நான் செத்துப் போகணும்!"

"ஐய்யோ திவ்யா..."

"நான் செத்துப் போனால்... கொஞ்ச நாளில் என்னை மறந்து... வேறு பெண்ணைக் கட்டி இன்பமா வாழுவீங்க இல்லையா?"

"ஏன் திவ்யா இப்படிப் பேசறே? இப்படிப் பேசறதுக்கு பதிலா... என் கழுத்தை நெரித்துக் கொன்னுப் போட்டுடு! நிம்மதியாய் போய்ச் சேர்ந்துடறேன்!"

அவள் கைகளை எடுத்து... அவன் கழுத்தில் வைத்து இறுக்கினான். அவள் கைகளை உதறிக் கொண்டாள்.

''நான் செத்தால்... பின் வேறு பெண்ணை மணந்துக்கணும்!''

''மாட்டேன்... மாட்டேன்!''

''நீயில்லேன்னால் நானும் இருக்க மாட்டேன்! உன்னோடவே வந்துடுவேன்!''

''அப்படியெல்லாம் பேசக்கூடாது! என்னால் உங்களுக்கு எந்தச் சுகமுமே இல்லை! நல்லவளாய் மணந்து... நீங்கக் கெட்டியான ஆயுளோடு, சந்தோசமா வாழணும்! என் பிள்ளைகளை... உங்களை நம்பித்தான் விட்டுட்டுப் போறேன்! நீங்க இப்படிப் பேசலாமா?''

''பேசாதே, திவ்யா! இன்னும் ஒரு வார்த்தை பேசாதே! அப்புறம் நான் மனுசனா இருக்க மாட்டேன்!'' ஆத்திரத்தில் கத்தினான். நெஞ்சுக்கூடு ஏறியிறங்கியது.

திவ்யா கட்டிலில் படுத்திருக்க... தாங்க முடியாமல்... அவள் நெஞ்சில் தலை சாய்த்துக் கொண்டான்.

''மானசா படித்து முடித்து... அவள் நெஞ்சில் யாருமே இல்லேன்னால்... மானசாவை மணந்துட்டால் எனக்கு சந்தோசம்! மேலிருந்து அந்தக் காட்சியைக் கண்டு மகிழ்வேன்!''

''மாட்டேன், திவ்யா!''

''மானசாவோ... அல்லது உங்கள் மனம் கவர்ந்தவளையோ சந்திப்பீர்கள்! அவளை மணந்து மகிழ்ச்சியாய் வாழணும்!''

''நிசமாவே நீ என் பொண்டாட்டிதானா? என் மேல் உனக்கு அன்பே இல்லையா? உண்மையான... ஒரு



பாசமுள்ள மனைவி... என் மரணத்துக்கு... மறைவுக்குப் பின் யாரையுமே மணந்து வாழக்கூடாதுன்னு சொல்லுவாளேடி!'' அன்பு கதற...

''இல்லே, அத்தான்! ஒரு உண்மையான, தன் கணவனை உயிராய் நேசிப்பவள் அப்படிச் சொல்ல மாட்டாள்! தன் கணவன், தன் மறைவுக்குப் பிறகு தனியாளாய் கஷ்டப்படுவதை எந்த மனைவியும் விரும்ப மாட்டாள்! கல்யாணத்துக்கு முன்பு உங்களை நான் ஒரு போதும் விரும்பவே இல்லை! கல்யாணத்துக்குப் பின்னாடி என் சுவாசமாகவே ஆகிப் போனவர், நீங்கள்! என் காதல் நிஜமென்பதால்... உங்கள் நல்வாழ்வை வேண்டுகிறேன்! எனக்குப் பின்பு ஒரு பெண்ணை மணந்து வாழணும்!''

''அது ஒன்று மட்டும் முடியாது! என் வாழ்வின் கடைசி வரை திவ்யா... திவ்யாதான்! திவ்யாவை மறந்து வேறொரு பெண்ணா... நோ... நெவர் மை டார்லிங்!'' அடித்துச் சொன்னான். உடல் குலுங்க வீறிட்டான்.

அவன் வாக்கு பொய்க்கப் போவது தெரியாமல்!

## 15

**''கெட்ட எண்ணங்கள் நெருங்காவண்ணம் நமக்கு வேலி போட்டுக் கொள்ள வேண்டும்!''**

திவ்யாவின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமானது!

'நான் இருந்து என்ன செய்யப் போகிறேன்! இன்னும் எத்தனை நாட்களுக்கு ஒரு புண்ணியமும் இல்லாமல்...

கட்டையைப் போல்... செத்த பிணம் போல்... படுக்கையில் கிடந்து அன்புவின் உயிரை வாங்கிக் கொண்டிருப்பது?

'இந்த சின்ன வயதில்... அத்தானை இன்னும் எத்தனை நாட்களுக்கு இம்சிப்பது? வேதனைப்படுத்துவது? தன் ஆசாபாசங்களையெல்லாம் மறந்து, துறந்து இன்னும் எத்தனை நாட்களுக்கு சாமியாரைப் போல வாழ விடுவது?

'ஒரு சுகத்தையும் அனுபவிக்காமல்... வெளிப்பூச்சுக்கு சிரித்து, மழுப்பி வளையவரும் அன்புவை எத்தனை நாட்களுக்கு இன்னும் சின்னா பின்னப்படுத்திக் கொண்டிருப்பது?

'அம்மாவும் அத்தையும் தினம் கண்ணீர் விடாத நாட்கள் இல்லையே!

'அப்பாவும், மானசாவும் ஒரு மாதத்திற்கு ஒரு முறை கட்டாயமாய் வந்து பார்த்து அழுதுவிட்டு செல்கின்றனரே!

'இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி என் மரணம்தான்!

'தூக்க மாத்திரை விழுங்கி உயிர் விடலாம் என்று நினைத்தால்... அன்பு அத்தனை மாத்திரைகளையும்... அவளறியாமல் மறைத்து வைத்துக் கொண்டு தினம் ஒன்றாய் தருகிறான்!

'தூக்கு மாட்டி உயிர் விடலாம் என்று நினைத்தாலோ... அம்மா, அத்தை, அன்பு, வேலைக்காரி என்று யாராவது ஒருவர் அருகிலேயே இருக்கின்றனர்.'

கடைசியாய் திவ்யா மேற்கொண்ட வழி உணவுதான்!



உணவு உண்ணாமல்... மனதில் வைராக்கியம் கொண்டாள். திரவ உணவான பால், ஜூஸ், கஞ்சி தவிர அவள் அருந்துவதில்லை!

திட உணவு உண்ண முடியாத அளவு திவ்யாவின் உடல்நிலை மோசமாகிவிட்டது என்று அன்பு முதற்கொண்டு நம்பினான்.

திவ்யாவின் உடல்நிலை ரொம்பவே மோசமானது! படுத்த படுக்கையானாள்!

அன்று கௌதமும், கீதாவும் வந்தார்கள்.

அவர்களைக் கண்டவுடன் திவ்யா கண்ணீர் விட்டாள்.

''என்னம்மா? ஏன்?'' என்று பரிவுடன் கேட்க...

''திட உணவு உண்ண மாட்டேங்கிறாள்! நானும் எவ்வளவோ முயற்சி செய்கிறேன்! முடியலடா, கௌதம்!'' அன்பு வருத்தத்துடன் கூற...

''திவ்யா... நிஜமாகவே உன்னால் உண்ண முடியலையா?''

''ஆமாண்ணா! எனக்கும் வாழணுமுன்னு ஆசையிருக்கில்லையா? திட உணவு சாப்பிட்டால் வாந்தி வராப் போல இருக்கு!'' திவ்யா பொய் சொன்னாள்.

''அண்ணா... நான் செத்துப் போயிட்டா அன்புவைப் பார்த்துக்குவீங்களா?'' என்று அழுகையுடன் கேட்க...

''என்ன பேச்சிம்மா பேசறே? ஏன் இப்படியெல்லாம் பேசி... எங்க மனசை நோகடிக்கறே? அன்பு தாங்குவானா? நீ அடிக்கடி மரணம் பற்றிப் பேசி... வேதனைப் படுத்தறதா சொல்லி என்கிட்ட வருத்தப்படறான்!''

"அண்ணா... அவருக்கு நல்லப் பெண்ணாப் பார்த்து திருமணம் பண்ணி வச்சிருங்கண்ணா? நீங்களெல்லாம் இருக்கிற தைரியத்துலதான்... சாவைக்கூட நான் சந்தோசமா வரவேற்கிறேன்! செய்வீங்களாண்ணா?"

"ஐய்யோ..." என மூவரும் கத்தினர்.

"திவ்யா... திவ்யா... தாங்க முடியலே, திவ்யா!"

"லட்ச லட்சமா செலவு செய்யறீங்க! இந்த நோய் முழுசா ஒழியலையே! கொஞ்சம் விஷம் கொடுத்தீங் கன்னால் குடிச்சிட்டு நிம்மதியாப் போய் சேர்ந்துடுவேன்!"

"வாயை மூடலே... என் கையாலயே உன் கழுத்தை நெரிச்சிக் கொன்னுடுவேன்!'

"திவ்யா பேசறது சரியில்லே! அவளைக் கூட்டிட்டு இந்தியா போடா! மாற்று இடம் போய் இருந்தால்கூட... திவ்யா மெல்ல எழலாம்!"

"அண்ணா நான் செத்துப் போனால்... என்னை இங்கே அநாதையாய் அடக்கம் செய்ய வேண்டாம்! இந்தியா வுக்குத் தூக்கிட்டுப் போய் அங்கேதான் எ.... என்னை..."

அதற்கு மேல் அவள் பேச முடியாமல்... அன்பு அவளை அறைந்தான்.

"ச்சே... ராட்சசியாய் ஏன் என்னைக் கொல்றே? கத்தியில்லாமல்... ரத்தமில்லாமல்... நீ தினம் தினம் என்னை சாகடிக்கறையே!"

சொன்னவன் அங்கே நிற்காமல் காரை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

அன்பு காரை எழுபது, எண்பது என வேகமெடுக்க... ஒரு திருப்பத்தில் எதிரே வந்த லாரியில் மோதி உயிர்



விட்டிருப்பான், லாரிக்காரன் நிதானித்து பிரேக் போடா மல் இருந்திருந்தால்!

# 16

**"தோல்வியை எளிதாய் எடுத்துக் கொள்வதே வெற்றியின் முதல்படி!"**

திவ்யாவின் உடல்நிலை ரொம்ப சீரியஸாகி... ஒரே யடியாய்... அன்புவுக்கு நிம்மதியைத் தந்து விட்டதாய் எண்ணி... அன்புவின் நிம்மதியை, சந்தோசத்தை திவ்யா கையிலெடுத்துக் கொண்டு கண் காணாத தேசம்... திரும்பி வர முடியாத தேசம் போய் சேர்ந்து விட்டாள்.

அன்பு கத்தி, கதறி பைத்தியம் பிடிக்காத குறையாய் வீழ்ந்து போனான்.

உடனடியாய் செயல்பட்டது கௌதம்தான்!

திவ்யாவுக்கு சீரியஸ்! உடனடியாய் வருகிறோம் என்று சிவசங்கரனுக்கு போன் செய்துவிட்டு... சிறிய விமா னத்தை வாடகைக்குப் பிடித்து இந்தியாவிற்கு வந்து சேர்ந்தனர்.

"ஐய்யோ... மாப்பிள்ளை!" என்று சிவசங்கரன் ஓடி வந்து கட்டியழ... அன்புவின் துக்கம் அதிகமாகிக் கத்தி னான்... கதறினான்.

மானசா வீறிட்டு அழுததை... மைக்கேலால் கண் கொண்டு பார்க்க முடியவில்லை!

மக்களோடு மக்களாய் ஓரமாய் உட்கார்ந்துவிட்டான்!

குழந்தைகள் ஷாம்னா, சாதனாவைக் கண்டுதான் அத்தனைக் கூட்டமும் கதறியது.

ஆயிற்று! எல்லாம் ஆயிற்று!

சிவசங்கரனும், சிவகாமியும் தவமிருந்து பெற்ற பெண்... அன்புவின் மேல் நேசம் வைத்த திவ்யா என்ற ஜீவன்... காற்றாய், நெருப்பாய், கைப்பிடிச் சாம்பலாகிப் போனது!

கங்கா, யமுனா, காவேரி போன்ற புண்ணிய நதிகளில் எல்லாம் கரைந்து காணாமல் போனாள்!

அன்பு எழவேயில்லை!

அன்பு பசி, தூக்கம், தாகம், என் உணர்வு அத்தனையும் அற்று அறையிலேயே முடங்கிக் கிடந்தான்.

திவ்யா, திவ்யா என்று கண்ணீர் விட்டு... கதறிக் கொண்டு படுக்கையிலேயே கிடந்தான்.

கௌதம் இந்தியா, தாய்லாந்து என அலைந்து திரிந்துக் கொண்டிருந்தான். அன்புவின் வேலைகளும் சேர்ந்து அவன் தலையில் விழுந்தாலும்... நேரம் கிடைக்கும் போது ஓடிவந்து அன்புவைத் தேற்றினான்.

ஆனால், அன்பு தேறியபாடில்லை!

மாமாவின் கட்டளைக்கு கீழ்ப் படிந்து தினம் பிடி உணவு உண்டுவிட்டு சுருண்டால் நாள் முழுக்க எழுந்து வெளியே வரமாட்டான்! ரெண்டு பிள்ளைகளின் தகப்பன் என்ற நினைப்பு கூட இல்லாமல்... அவர்களின் வாழ்வு தன்னை நம்பியிருக்கிறது என்ற ஞாபகமில்லாமல் தன் உடலை கெடுத்துக் கொண்டிருந்தான்.

மானசா கல்லூரி பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. மானசாவால் அன்புவை கண்கொண்டு காண முடிய



வில்லை! அன்புவின் நிலைகண்டு துக்கப்பட்டாள்! துயரப்பட்டாள்!

மானசா அன்பு இருந்த அறைக்குள் நுழைந்தாள். அவன் மானசாவின் கொலுசு சப்தத்தில் கண் திறந்தான். அன்புவின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் காதோரங்களை நனைத்திருந்தது.

''அத்தான்... அன்பு அத்தான்... இங்கே பாருங்க! இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படியே அழுதுட்டுப் படுத்திருப்பீங்க? இத்தனை நல்ல கணவனை... அன்பான, பண்பான, பாசமான கணவனை இப்படி அம்போன்னு விட்டுட்டுப் போக... அந்த பாவிக்கு எப்படித் தான் மனசு வந்ததோ? பாதகி... வாழவேண்டிய வயசுல... அநியாயமா, உங்களைத் தவிக்க விட்டுட்டு பொட்டுன்னு போய் சேர்ந்துட்டாளே!'' மானசா அழுதாள்.

''முதல்ல எழுந்திரிங்க! நீங்க ஆண் பிள்ளை! இப்படி அழலாமா? பார்க்க கஷ்டமாவும் இருக்கு! அதே சமயம் அசிங்கமாவும் இருக்கு! முதல்ல எழுந்து உட்காருங்க!''

அவனை வலுக்கட்டாயமாய் தூக்கி... அமர வைத்து... கட்டிலில் அவனுக்கு எதிரில் அமர்ந்தாள்.

''கண்ணைத் துடைங்க! உங்களால் எங்களுடைய துக்கமும் அதிகமாகுது! அக்கா இறப்புல யாருக்குத்தான் துக்கமில்லே! சோகமில்லே! துயரமில்லே! உங்களுக்கு அவள் மனைவின்னால்... அப்பாவுக்கும், அம்மாவுக்கும் பிள்ளை! அத்தைக்கு மருமகள், ஷாம்னா, சாதனாவுக்கு தாய்! எனக்கு உடன் பிறந்த சகோதரி! இப்படி நம்ம எல்லோருக்குமே முக்கியமானவள் திவ்யா! அவளையே நினைத்து வேதனைப்பட்டால்... உங்க துக்கம் அதிக

மாயிடும்ன்னு... அப்பாம்மா துக்கத்தை மூட்டை மூட்டையா கட்டி... இதயத்துக்குள்ளே புதைச்சிட்டு... உங்களை தேத்திட்டு நடமாடறாங்க...

அவங்க தனிமையில் அழற கொடுமையைப் பார்க்க முடியலே! இப்படி எல்லோரும் நம்மை வருத்திட்டு இருந்தால்... திவ்யா திரும்ப வந்து விடுவாளா?

மரணத்தால் ஒரு மனிதனுடைய உடல்தான் அழியுதே தவிர... மரணிக்கிதே தவிர... அவர்களுடைய ஆன்மா அழிவதில்லை! மாண்டு போவதில்லை!

திவ்யா நம்மை விட்டு எங்கேயும் போகலே! அவள் உடலுக்கு மட்டும்தான் மரணம்! ஆன்மா நம்ம எல்லோரோடும் சேர்ந்து வாழ்ந்துட்டு இருக்கு! அக்கா... உங்களோட ஐக்கியமாகி வாழறா! அக்கா... என்னோட... அப்பாம்மா... குழந்தைகளோட கலந்து வாழறா! அக்கா உங்ககிட்ட இருக்கா! என்கிட்ட இருக்கா!...''

மானசா பேசப் பேச... அன்பு கண்களில் சிறு ஒளியோடு நோக்கினான்.

''அக்கா... ஆன்மா நம்மோட இருக்கு! நமக்குள்ளே இருக்கு!...

திவ்யாவோட மூச்சுக் காற்று வாயு வெளியில கலந்திருக்கு! நாம் சுவாசிக்கிற காற்றுல அவளுடைய சுவாசமும் கலந்திருக்கு! அவள் சுவாசத்தையும் சேர்த்துத்தான் நாமெல்லாம் சுவாசிக்கிறோம்! அக்காவை எரிச்ச சாம்பல் மேக மண்டலத்தோட கலந்திருக்கு! அக்காவோட அஸ்தி கங்கா, யமுனா, காவிரின்னு... புனித நதிகள்ல கலந்து, கரைந்து ஓடிட்டு இருக்கு!...



அக்கா கலந்துட்ட மேகத்தை நாம் நுகர்கிறோம்! அக்கா கரைந்துவிட்ட பனியை நாம் உணர்கிறோம்! அக்கா ஐக்கியமான நிலத்தடி நீரை நாம் பருகுகிறோம்! அக்கா எங்கேயும் போயிடலே! நம்மோட உணர்வா, உயிரா, சுவாசமா, காற்றாய், கடலாய், பனியாய், மேகமாய், புயலாய் உலகில் விரவியிருக்கிறாள்! காற்றிலே கலந்தவள் கடலிலே கரைந்தவள் நம்... நம்மோட ஜீவிக்கிறாள்! திவ்யா! சாகலே! செத்தது அவள் உடல்! உணர்வில்லே! ஆத்மா இல்லே! மரபு இல்லே! மரபாய் ஷாம்னா, சாதனாவா இருக்கா!''

அன்பு கண்ணீரை துடைத்துக் கொண்டு நிமிர்ந்தான்.

''அக்கா... நீங்கள் கலங்குவதைக் கண்டு கதறுவாள்! அக்காவோட ஆசைகளும், கனவுகளும், கற்பனைகளும், யாருமே வறுமையில் வாடக்கூடாது... நோயில் துயரப்படக் கூடாது என்பதுதான்! அக்காவின் பெயரில் ட்ரஸ்ட் ஆரம்பிங்க, அத்தான்! ஏழையாய் பள்ளி, கல்லூரி படிப்பைத் தொடர முடியாதவர்களுக்கு உதவுங்க! புற்று நோய் வந்து நிராகரிக்கப்பட்டவர்களுக்கு ஒரு மருத்துவமனை ஆரம்பியுங்க! இலவச மருத்துவ சேவை தொடங்குங்க! முதியோர் இல்லம், அநாதை இல்லம்ன்னு எவ்வளவோ செய்யலாம்! அக்காவுடைய ஆன்மாவும் சாந்தியடையும்! நிம்மதியடையும்!''

அன்புவின் கண்களில் கண்ணீர் நின்று... ஒரு திடம், தெளிவு தெரிந்தது.

''திவ்யா ரெண்டு தங்கக் கட்டிகளை உங்களுக்கு கொடுத்துவிட்டு போய் இருக்கிறாள்! அவர்களின் எதிர்காலம் உங்கள் கையில்தானே? அதையெல்லாம் யோசிக்

காமல்... பட்டினி கிடந்து அவள்கிட்ட நீங்களும் போய்விட்டால்... குழந்தைகளின் கதி, எதிர்காலம் என்னாவது? எழுங்க!''

மானசா சொல்ல... அன்பு மந்திரத்திற்கு கட்டுப் பட்டவன் போல எழுந்தான்.

தாய்லாந்தில் பார்த்த பிஸினஸை இங்கே தொடங் குங்கள். ஏற்றுமதி செய்யுங்கள்! உங்களால் முடியும்! இந்த ரெண்டு குழந்தைகளுக்கு நல்ல தகப்பனா இருங்க! அவர்களுடைய பாசமும், நேசமும் உங்களுக்கு மருந்தா இருக்கும்! கட்டாயமா, அத்தான்!''

''நீ சொன்ன ட்ரஸ்ட், இலவச மருத்துவமனை?''

மானசா புன்னகைத்தாள்.

''முதல்ல பிஸினஸ்...! அடுத்ததா உடனடியா ட்ரஸ்ட், இலவச மருத்துவமனைன்னு இறங்கலாம்!''

''எனக்கு துணையிருப்பாயா, மானு?''

''நிச்சயமா, அத்தான்!''

''இது போதும் மானு! இந்த ஒரு சொல் போதும், மானும்மா! நான் எழுந்துடுவேன்! திவ்யாவின் மறை வால்... எனக்கு எல்லாமே மறந்துடிச்சி! நீ... நீதான் வழிகாட்டணும்!'' அவன் கண்கள் கலங்கி கேட்க...

''கண்டிப்பா, அத்தான்!'' அவன் கைப்பற்றி சத்தியம் செய்தாள்.

மானசா தன் வாக்கை, சத்தியத்தைக் காப்பாற்றாமல், மீறப்போவது தெரியாமல்!



# 17

**''வாழும்வரை பிறருக்கு நன்மை செய்து வாழ்தலே... நல்ல வாழ்க்கை!''**

அன்புவின் துக்கம், துயரம், சோதனை, கஷ்டம் கண்டு வெறுமனே பரிதாபப்படாமல்... அவனின் தேவையை அறிந்து மானசா உதவினாள். அவனுக்கு தேவை இப்போது அன்பு, ஆறுதல்! அந்த ஆறுதலை, பாசத்தை, நட்பை, உள்ளன்போடு தாராளமாய் வழங்கினாள்.

உடனடியாய் கையில் இந்த பணத்தைக் கொண்டு நகரின் மத்தியில்... கட்டுமானப் பணியோடு விலைக்கு வந்த... பெரிய பில்டிங்கை வாங்கிப் போட்டுத் தொழிலைத் தொடங்கினான்.

மானசாவும் கல்லூரிக்குச் சென்றாள்.

கல்லூரிக்கு போன நேரம் போக மீதி நேரத்தை... அன்புவோடும், குழந்தைகளோடும் செலவிட்டாள்.

குழந்தைகள் அவள் முகம் பார்த்து 'அம்மா...' என்று அழைத்தனர்.

அன்புவுக்கு பார்த்துப் பார்த்து பரிமாறுவாள்.

அன்று...

''என்ன இது ட்ரஸ்? பேண்டும், சட்டையும் பொருந் தலே! தள்ளுங்க. நான் தேர்வு செய்யும் உடையைத்தான் இனி நீங்க அணியணும்!'' அக்கறையோடு சொன்னாள்.

பீரோவைத் திறந்து... மானசா எடுத்துக் கொடுத்த உடையை அணிந்து கொண்டு வெளியே வர...

''அத்தான்... மாலை நேரமா வர முயற்சி செய்றீங்களா?''

''எதுக்கு?''

''உங்களுக்கு கொஞ்சம் உடை பர்சேஸ் பண்ணணும்!''

மாலை நேரத்தோடு வர... 'ரமேஷ் சில்க்ஸ்' போனார்கள்.

''நான்தான் தேர்வு செய்வேன்!'' என்று அவனை அமரவைத்துவிட்டு... கடை முழுக்க சுத்தி, அலைந்து, திரிந்து, அற்புதமான ஆடைகளாய் அள்ளி எடுத்து வந்து பில் போடச் சொன்னாள்.

''இவ்ளோ் எதுக்கு? மானு?'' அவன் மறுக்க...

''சும்மாயிருங்க! உங்களுக்கு தேவைதான்! ஆபீஸ் போறவர்! எம்.டி. வேற! அட்டகாசமா உடுத்திட்டுப் போனால் தானே... இந்த மன்மதனை நிறைய ரதிகள் திரும்பித் திரும்பிப் பார்ப்பார்கள்!'' என்று கூறி மொட்டவிழ்ந்தாற்போல மலர... அந்த அழகை கண் எடுக்காமல் பார்த்தான், அன்பு.

அவன் மனம் கொஞ்ச கொஞ்சமாய் அவள் வசமாய் சென்றது.

* * *

சனி, ஞாயிறுகளில் செஸ், கேரம் என்று விளையாடுவார்கள். அது போரடித்தால்...

''அத்தான்... டென்னிஸ் விளையாடலாமா? ப்ளீஸ் வாங்களேன்'' அவன் கைப்பிடித்து இழுப்பாள்.

''ரொம்ப நாளாகுது, மானு! மறந்துகூட இருப்பேன்!'' என்று அன்பு மறுத்தால்...



''சைக்கிள், நீச்சல், எழுதுதல், படித்தல், விளையாட்டு இதெல்லாம் ரொம்ப நாள் விட்டுப் போனாலும் மறக்காது, தெரியுமா? பொய் சொல்லாதீங்க!'' அவள் சிணுங்குவாள்.

''விடமாட்டே போல! சரி வா, மானு!'' என்று அழைத்துக் கொண்டு போய் பங்களாவின் வலப்புறமாய் இருந்த டென்னிஸ் கோர்ட்டில் வலையைக் கட்டுவான், அன்பு.

இரண்டு பேரும் விளையாட குழந்தைகள் குதூகலிக்கும்! சிவசங்கரன் நாற்காலி போட்டு அமர்ந்து ரசிப்பார்.

சில நாட்கள் கிரிக்கெட்கூட விளையாடுவார்கள்!

அன்பு பேட்ஸ் மேன் என்றால்... மானு போலர்! சிவசங்கரன் அம்பயர்! வேலைக்காரர்கள் பந்தை பொறுக்கிப் போடுவார்கள்!

மானு வீசும் பந்தை... அன்பு லாவகமாய் தட்டிப் போரும், சிக்ஸுமாய் அடிப்பான்!

இப்படி சில நாட்கள் குதூகலமாய் இருப்பார்கள்.

சிவசங்கரன் ஒரு நாளும் தடை போட்டதில்லை!

அன்புவோடு என்ன சிரிப்பு... விளையாட்டு என்று கேட்டதேயில்லை!

'அவருக்கு அது பிடித்திருந்தது!'

அன்று அரசு விடுமுறை என்பதால் அன்புவும் வீட்டில் இருந்தான்.

''அத்தான்... புதுசா 'மாயாஜால்'ன்னு கல்லையில திறந்திருக்காங்க! பல தியேட்டர்கள்... அதில் பல மொழி படங்கள்! ஷாப்பிங் செய்யலாம்! அருவியில குளிக்கலாம்! ராட்டினம் சுற்றலாம்! அருவியில நீந்தலாம்! நாம போகலாமா...? வேலையிருக்கா...?'' மானசா கேட்க...

''வேலையிருக்குதான்! அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்!'' என்று ஆளுக்கொரு குழந்தையைத் தூக்க...

சிவசங்கரன் ''குழந்தைங்க வேண்டாம்! எதையும் பார்த்து என்ஜாய் பண்ண முடியாது! நீங்க ரெண்டு பேரும் போயிட்டு வாங்க!'' என்று தனியே இருவரையும் அனுப்பி வைத்தார்.

'மாயாஜால்' போனார்கள்! அருவியில் குளித்தார்கள். நீந்தினார்கள்! ஷாப்பிங் செய்தார்கள்.

ஒரு இடத்தில் கணவன் - மனைவி ஜோடிகளுக்கான டென்னிஸ் போட்டி நடக்க... சுவாரசியம் வந்து இருவரும் அருகில் போக... அன்புவைப் பார்த்து அந்த பெண்மணி சொன்னாள்.

''வாங்க சார்! உங்களுக்கு டென்னிஸ் தெரியுமா? உங்க மனைவியோடு சேர்ந்து விளையாட ஒரு நல்ல வாய்ப்பு! ரெண்டு ஜோடி பேர் கொடுத்திருக்காங்க! உங்க பேரை மூன்றாவதாக எழுதிக் கொள்ளவா?''

''வேணாம்மா... நாங்க...'' என்றவனின் வாயைப் பொத்தி... ''அத்தான் நாமும் ஆடலாமே! நாம ரெண்டு பேரும் கணவன், மனைவி இல்லேன்னு நமக்கு மட்டும் தானே தெரியும்! அவங்களுக்குத் தெரியாது, இல்லையா? ப்ளீஸ் அத்தான்.. சரின்னு சொல்லுங்க?'' என்று மானசா குழந்தையாய் சிணுங்க... அன்புவும் அமைதியானான்.

ஒரு அப்ளிகேஷனை நீட்டி ''உங்க பேரையும், உங்க மனைவி பெயரையும் எழுதுங்க!'' என அந்த பெண்மணி ஒரு தாளை கொடுத்தாள்.



மனைவி என்ற இடத்தில் மானசாவின் பெயரை ஒவ்வொரு எழுத்தாய் எழுதும்போது.. ஏற்கனவே அவனுள் புதைந்திருந்த காதல் சில சமயம் மெல்ல மெல்ல மேலெழும்பி வந்த நிலையில்... இப்போது.. இந்த நிகழ்வால்.. அவன் இதயத்தை உடைத்துக் கொண்டு.. மேலெழுந்து.. அவன் கண்களின் வழியாய் பீறிட்டு மானசாவைத் தாக்கியது!

அந்த பார்வையின் அர்த்தம் புரியாமல்... தாக்கம் தாங்காமல் மானசா தலைக் குனிந்தாள்.

டென்னிஸ் ஆடுகளத்தில் உற்சாகமாய் அன்புவோடு இறங்கினாள். மானசா உடுத்தியிருந்தது சுடிதார் என்பதால் எளிதாய் விளையாட முடிந்தது.

அன்புவும், மானசாவும் எதிர் ஜோடிகளை நிறைய வித்தியாசத்தில்... ஒவ்வொரு அணியாய் தோல்வியுறச் செய்து... வெற்றி பெற்றார்கள்.

''இதுபோல டேலண்ட் ஜோடியை இதுவரை பார்த்த தில்லே, சார்! உங்கள் மண வாழ்க்கை மேலும் மேலும் இனிமையாக.. உங்கள் வாழ்க்கையில் இன்னும் பிற வெற்றிகளை குவிக்க... மனதார வாழ்த்துகிறோம்!''

அங்கிருந்த குட்டி மேடையில் நடுவர் பேச... அந்த மேடைக்கு முன்புறமிருந்த அரங்கத்தில் உள்ளோர் கைத்தட்ட... அன்றைய நாளைய கோப்பையை மானசா - அன்பு ஜோடி பெற்றுக் கொண்டு வீடு திரும்பியது.

காரில் திரும்பும்போது ''நல்லா ஏமாந்துட்டாங்க! நாம ரெண்டு பேரும் நிஜ கணவன், மனைவி என்று ஏமாந்துட்டாங்க! என்ன அத்தான்... இப்படி கூட ஏமாறும்

மனிதர்கள் இருப்பார்களா?'' என்று கூறி, வியந்து சிரித்துக் கொண்டே வந்தாள், மானசா.

வீட்டில் அம்மா, அப்பா, அத்தை என ஹாலில் அமர்ந்திருக்க.. அப்பாவிடம் கோப்பையை நீட்டிவிட்டு நடந்த அத்தனையையும் கதைகதையாய் கூறிவிட்டு... மானசா அன்புவின் பின்னே டைனிங் ஹாலுக்குச் செல்ல...

அங்கிருந்த மூவரின் பார்வைகளும் ஏதோ ரகசியங் களைப் பேசிக் கொண்டது.. அவர்களுக்குத் தெரியாது!

* * *

அன்று இரவு ஆபீஸ் கணக்கு வழக்குகளை கம்யூட்டரில் சரிபார்க்க.. எங்கோ இடித்தது. டேலி ஆகாமல் அவனுக்கு போக்குக் காட்ட... மண்டையைப் பிய்த்துக் கொண்டான்.

வெகு நேரமாய் அவனுடைய ஆபீஸ் அறையில் விளக்கெரிய.. மானசா போய் பார்த்தாள்.

“அத்தான்.. இன்னுமா தூங்கலே? ஆபீஸ் வேலையை ஆபீஸ்ல வச்சிக்கணும்! இது வீடு! போய்ப் படுங்க! தூங்குங்க!'' என்று அதட்ட...

“மானு.. இந்த கணக்கு டேலி ஆகமாட்டேங்குதும்மா! நாளைக்கு ஜப்பான்ல இருந்து வர கொள்முதலாளர்கள் கிட்ட சமர்ப்பிக்கணும்மா! என்ன செய்ய?'' அவன் பரிதாபமாய் கூற...

“சரி தள்ளுங்க! நீங்க போய் தூங்குங்க! எனக்கு கம்ப்யூட்டர் பற்றியும், கணக்கு பற்றியும் தெரியும்! நான் முயற்சிக்கிறேன்! இல்லே... இல்லே முடிச்சி தரேன்!''



மறுநாள் வந்தவன் அதிசயத்துப் போனான்.

“மானு... மானும்மா... ரொம்பவே நன்றிடா!'' அன்பு அவள் கைப்பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான்.

‘கல்யாணமா...? எனக்கா...? கட்டாயமாய் மாட்டேன்' என்று வெறுத்த அன்புவின் மனசு இன்று மறுமணத்தை விரும்ப ஆரம்பித்தது.

வெறுப்புக்கும், விருப்புக்கும் இடையே மெல்லிய திரைதான் தடுப்பு சுவராய் உள்ளது. அந்த திரை கிழியும் போதோ... விலகும் போதோ வெறுப்பு விருப்பாகிறது என மாமா சிறுவயதில் அவனுக்கு கூறிய புத்தி புகட்டல் இப்போது நிஜமாகிக் கொண்டிருந்தது.

மானுவைத் தவிர.. வேறு ஒருத்தி வந்து.. மேலே விழுந்து கட்டிப் புரண்டு பழகியிருந்தாலும்.. அவன் மனம் அசைந்திருக்காது!

மானு.. சிறு வயது முதற்கொண்டே நேசித்த பெண்! நினைவு தெரிந்த நாளிலிருந்து மனைவியாய் தன் நெஞ்சத்தில் பூஜித்து வந்த தேவதை! அந்த தேவதை யோடு சேர்ந்திருக்க வேண்டியவனை.. மாமா அவருடைய மதிகெட்ட பிடிவாதத்தால்...அவனுடைய விதியை மாற்றி திவ்யாவோடு எழுதிவிட்டார்!

‘தன்னையே நம்பி, மணந்து வந்த திவ்யாவை கலங்க வைக்கக் கூடாது! மாமா செய்த தவறுக்கு திவ்யா என்ன செய்வாள்? பாவம்! இனி மானு யாரோவோ...' அவள் மேலான காதலை உள்ளுக்குள்ளே கட்டாயமாய் ஒரு குழி தோண்டி ஆழப் புதைத்துவிட்டு.. திவ்யாதான் இனி எனக்கு எல்லாமும்! திவ்யாவின் சந்தோசம்.. என் சந்தோசம். திவ்யாவின் துன்பம்... என் துன்பம்! என்று மனதுக்கு

அறிவுறுத்த.. அந்த கட்டாய அறிவுறுத்தல்.. அவனை கரைத்து.. அவள்மேல் இரங்க வைத்தது. அவளும் அன்புவின் மேல் உயிராய் இருக்க.. இருவரும் இணைந்து வாழ்ந்தனர்.

திவ்யாவோடு எல்லாத்தையும் மறந்து குடும்பம் நடத்த... அவள் கர்ப்பமாக.. 'கொஞ்ச நாளைக்கு செக்ஸ் கூடாது! திவ்யா ரொம்ப வீக்கா இருக்கா!' என டாக்டர் சொல்ல.. அதன் பிறகு நோய்.. குழந்தை பிறப்பு.. நோய்க்கான வைத்தியம் என்று வீணாக நாட்கள் கழிந்தது.

திவ்யாவின் உள்ளம் அன்புவை சந்தோசப்படுத்த நினைத்தாலும்.. அவளின் உடல் ஒத்துழைக்க மறுத்தது.

எண்ணி நாலைந்து மாதங்கள் கூட அன்பு திவ்யாவோடு உடலால் வாழ்ந்திருக்க மாட்டான்!

இப்போது...

எத்தனையோ நாட்களாய் காய்ந்து கிடந்த உடம்பு.. மானசா தொட்டால்.. குழைந்து.. உருகியது! ப்ளீஸ்.. ப்ளீஸ்.. என்று கெஞ்சும்போது அவன் கன்னத்தைப் பிடித்து கொஞ்சுவாள்! உள்ளுக்குள் உணர்ச்சி அலைகள் புரட்டிப்போடும்! அவனுள் புதைந்திருக்கும் நூதன காதல் உணர்வு மென்மையாய் எட்டிப் பார்க்கும்!

கஷ்டப்பட்டு தன் மனதுக்கு, உணர்வுகளுக்கு கடிவாளம் போட்டாலும்... கட்டுத்தறியை பிய்த்துக் கொண்டு ஓடும் கன்றாய்.. தாவி தாவி மானுவிடம் அவன் மனம் ஓடி தஞ்சம் புகும். அவனும் அந்த மனதின் இஷ்டத்திற்கு வளைந்து கொடுத்தான்!

இதனால் பின்னால் வரப்போகும் விபரீதம் உணராமல்!



# 18

**"அதிர்ஷ்டத்தை நம்பாதீர்கள்;**
**உழைப்பை நம்புங்கள்!"**

மாலை தென்றல் இலவசமாய்.. மானுவின் மேனி தழுவ... மெல்ல வகுப்பறையை விட்டு வெளியே வந்தாள்.

மைக்கேல் பூங்காவில் காத்திருந்தான்.

"மானு.. அன்பு நல்லாயிருக்காரா? குழந்தைங்க எப்படி இருக்காங்க! அவர் ஒப்பன் பண்ணிய ஆஸ்பத்திரி பங்ஷனுக்கு வரணும்னு பார்த்தேன்! தேவையில்லாமல் உனது தந்தையின் கண்களில் பட்டு.. ஏன் நாமே விபரீதத்தை இழுத்து விட்டுக் கொள்வானே என்று வர்லே! ஸாரி, மானு!"

"இட்ஸ் ஓ.கே. மைக்கேல்! நான் எதுவும் நினைத்துக் கொள்ளமாட்டேன்! என்னைப் பற்றி தெரியுமில்லையா?"

"தெரியும், மானு! உன்னால் யாரையுமே வெறுக்க முடியாது! யாரிடமும் குற்றம் காணத் தெரியாது! தப்பே செய்துவிட்டாலும்... அவர்களுக்கு தெரிந்தது அவ்வளவு தான் என்று சாதாரணமாய் எடுத்து கொள்ளும் மனம் படைத்தவள்!"

மானு தன் பட்டாம்பூச்சி இமைகள் படபடக்க அவனை நோக்க....

"வாழ்க்கையில் ஒரு பிடிப்பேயில்லாமல்... கொஞ்சம் அநாதையென்ற தாழ்வு மனப்பான்மையுடன் உலாவிய வனை இன்று எவ்வளவு உயரம் தூக்கி நிறுத்தி

யிருக்கிறாய்! இனி தனக்கு வாழ்க்கையே இல்லை என்று சுருண்டுப் போன அன்புவை.. வானுக்கும் பூமிக்குமாய் எழுந்து கம்பீரமாய் நிற்க வைத்திருக்கிறாய்! இதெல்லாம் உன்னால் மட்டும்தான் மானு முடியும்! மானு.. உன் அத்தானிடம் நம்ம விஷயத்தை கொஞ்சம் காதில் போடேன்!''

''என்ன அவசரம், மைக்கேல்? பொறுங்க! நம்ம படிப்பும் கூடிய சீக்கிரம் முடியப்போகுது! அப்புறமா சொல்லலாம்!''

''உன் அக்கா இறந்ததிலிருந்து எனக்கு பயம் மானு! எங்கே உன்னை அன்புக்கு ரெண்டாம் தாரமா...''

''ச்சே.. வாயை கழுவுங்க, மைக்கேல்! ஏன் புத்தி இப்படிப் போகுது? அன்பு அத்தான் எவ்வளவு நல்லவர் தெரியுமா? இதுவரை தவறுதலா ஆடை உரித்து.. என்னை அசிங்கமா பார்த்ததில்லே! தன் மச்சினிகளிடம்.. மூணாம் தர கிண்டலும், கேலியும் செய்யற ஆண்கள் மத்தியிலே எங்க அன்பு தங்கம், தெரியுமா? புரிந்துகொள்ளுங்கள்! அன்பும், ஆறுதலும் இல்லாமல் பரிதவிக்கற அவர்கிட்ட அன்பா இருக்கேன்! அக்கறையா இருக்கேன்! அதுக்காக நீங்களே ஏதாவது அர்த்தம் எடுத்துக்க வேண்டாம்!''

மானசா கோபமாய் சொல்ல.. மைக்கேல் பதறினான்.

''ஐயோ மானு.. நான் சொன்னதுக்கு தப்பா அர்த்தம் புரிஞ்சிக்காதே! உன்னைப் போய் சந்தேகிப்பேனா? உங்க வீட்டுப் பெரியவங்க ஏதாவது குறுக்கே புகுந்து குளறுபடி பண்ணிடுவாங்களோன்னு பயத்துல வந்த வார்த்தைகள்! உன் இதயத்தை அந்த வார்த்தைகள் ரொம்ப நோகடிச்சதுன்னா... அந்த வார்த்தையை வாபஸ் வாங்கிக்கறேன்! ஸாரி... ஸாரிடாம்மா மானு!'' மைக்கேல் தவிப்புடன் கூற...



''மைக்கேல்.. ஒன்று மட்டும் நல்லா புரிஞ்சிக்கங்க! மானசா என்ற மரத்தில் பழுக்கும் அன்பு கனிகளை யார் வேணா உண்டு, உயிர்ப்பித்து வாழலாம்! ஆனால், அந்த மரம் மைக்கேலுக்கு மட்டும்தான் சொந்தம்! மைக்கேலைத் தவிர என்னை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது! மைக்கேலுக்குத்தான் மானசா... மானசாவுக்குதான் மைக்கேல் என்ற பிணைப்பை அந்த கடவுளாலும் மாற்ற முடியாதுடா! அப்படி இருக்க... எதையாவது பேசி என்னையும் நோகடிச்சி...எதையாவது யோசித்து உங்களையும் ஏன் வருத்திக்கிறீங்க?'' மானசா மென்மையாய் அறிவுறுத்த...

''மானும்மா... எனக்கு இது போதும்! இந்த சொற்களிலே ஓராயிரம் பிறவிகளைக் கடந்துவிடுவேன்! மானு.. எப்படி இவ்வளவு பண்பட்டவளாய் ஆனாய்?''

''நான் பண்பட.. என் அப்பாதான் காரணம்! அப்பாவைப் பார்த்து அவரைப்போல மூர்க்கமா, முசுடா இருக்கக்கூடாது! உயிருள்ள, உயிரற்ற எந்த ஜீவனானாலும் அன்பு செலுத்தணும்ன்னு என்னைக்கோ ஏற்பட்ட பண்படல்தான் இதெல்லாம்!''

''நீ என் காதலியாய் கிடைக்க ஏதோ தவம் செய்திருக்கிறேன், மானு!''

''வீட்டுலன்னா அன்புவை திருத்தி வழிக்கு கொண்டு வருவதற்குள் முழி பிதுங்கிடுது! கல்லூரியிலன்னால் உங்க அழிச்சாட்டியம் சின்ன குழந்தையா தாங்கலே! உங்க ரெண்டு பேரைவிட... என் ரெண்டு குட்டி தேவதைகளே மேல் தெரியுமா?''

''என்னை மன்னிக்க வேண்டுகிறேன், மானு! இத்தனை ஆழமாய் பாதருக்கு பிறகு என்மேல் அன்பு

செலுத்தும் நல்ல இதயம் கிடைத்த மகிழ்ச்சியில்.. என் மனம் உன்னிடம் அதிகச் சலுகை எடுத்துக்குது. அது தப்பா?''

''தப்பில்லே.. ஓவராப் போனா சமாளிக்க முடியாமல் மூச்சு முட்டுது... என் இனிய முட்டாளே!'' மானசா கலகல வென சிரித்தாள்.

இனி இதுபோல் மலர்ந்து சிரிக்க முடியாது எனத் தெரியாமல்!

# 19

**''கனவுகளைச் சிதைக்காதே;**
**அது உன் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்!''**

தேர்வு நெருங்க... இரவு, பகல் பாராமல் படித்தாள், மானசா. இரு குழந்தைகளின் தொந்தரவு இல்லாமல்... அவளுக்கு நிறைய தனிமையை ஏற்படுத்தி கொடுத்து படிக்கச் சொன்னான், அன்பு.

இரவு நேரங்களில் அவளோடே அவனும் ஏதாவது பைலை பிரித்துக் கொண்டு அமர்ந்து விடுவான்.

கொஞ்ச நேரத்திற்கு கொஞ்ச நேரம் இடைவெளிவிட்டு பூஸ்ட், ஹார்லிக்ஸ் என்று கலந்து வந்து நீட்டுவான்.

''நீங்க எனக்கு செய்யணுமா? என்ன அத்தான் நீங்க? உங்க தூக்கத்தை கெடுத்துட்டு...!''

''உனக்கு செய்யாமல் வேற யாருக்கு செய்யப்போறேன்! என்னை தாங்கி நிறுத்திய உனக்கு நான் இதுகூட செய்யக்கூடாதா? தவறா?''



அன்பு அக்கறையோடு கேட்க...

''அதெல்லாம் இல்லே! ரொம்ப நன்றி, அத்தான்!''

''மானு ஒன்று கேட்கலாமா? மனசு திறந்து சொல் வாயா?''

''என்ன?'' அவள் ஆச்சரியத்தோடு புருவம் தூக்கி கேட்க...

''படிப்பு முடிந்து என்ன செய்யப்போறே? உன் ப்ளான் என்ன? மேல் படிப்பா? கல்யாணமா?''

''படிப்பா..? இந்த படிப்புக்கே எவ்வளவு போராட்டம் தெரியுமா? படிப்பெல்லாம் போதும்!''

''அப்புறம்?''

''கல்யாணம்தான்!'' அவள் சொல்லிவிட்டு வெட்கப் பட...

அன்பு அச்சத்துடன் அவளின் முகத்தைப் பார்க்க...

''காலா காலத்துல கல்யாணம் பண்ணி புருஷன், குழந்தைன்னு செட்டில் ஆகலாம்ன்னு நினைக்கிறேன்!''

அவன் முகமும், மனமும் சுருங்கிப் போனது.

''நிஜமாவா? சந்தோசம், மானு! நானும் உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும், மானு! உன் திருமணத்திற்கு பிறகு... உன்னைப் பிரியணுமே என்ற எண்ணம்... எனக்கே கஷ்டமா இருக்கு! அப்படி இருக்க.. அறியாத ஜீவன்களான ஷாமும், சாதனாவும் எப்படி பிரிந்து இருப்பார்கள்? உன்னிடம் குழந்தைங்க ரொம்ப ஒட்டு தலாயிருக்கும். அதனால் நான், அம்மா, குழந்தைகளோட தனியாப் போயிடலாம்ன்னு பார்க்கறேன்! இப்போதிருந்து உன் பிரிவுக்கு அவர்களை தயார்ப்படுத்தணும், மானு!

அப்போதான் உன்னை மறப்பார்கள்! உன் வாழ்வும் சிறக்கும்! என்ன சொல்றே?"

சட்டென்று சொன்னான்.

"என் பிரியணும்? பிரியாமல் இருக்க என்ன வழின்னு யோசியுங்களேன்! எனக்கு கல்யாணம் என்றாலும் வெளியே போகாமல் இங்கேயே இருக்க.. என்ன செய்யலாம் என்று சிந்திக்கக் கூடாதா? ப்ளீஸ் அத்தான் நீங்க.. நீங்க மட்டுமே மனசு வச்சால் முடியும். தெரியுமா?" என்று கண்களால் யாசிக்க...

அன்பு மலர்ந்து விட்டான்.

'மானு.. என் தங்கமே! நீயும் என்னை விரும்புகிறாயா? என் கண்ணே.. இது தெரியாமல் நித்தம் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தேனடா! எங்கே என்னை மணமானவன் என்று நிராகரித்து விடுவாயோ என்று பயந்திருந்த என்னிடமே.. நான் வெளியே போகாமல் இருக்க.. நீங்க மட்டுமே மனசு வச்சால் முடியும்ன்னு கூறி என்னை உயிர்ப்பித்தெழ வைத்தாயே! என் தேவதையே! என் சுவாசமே..! என் இதயத்தை இத்தனை நாளும் கசக்கி பிழிந்த இனிய, அழகான ராட்சசியே! ஒற்றைச் சொல்லில் உயிர்ப்பித்தெழ வைத்த என் பிரம்மாவே! கண்ணே.. என் கனியமுதே.. என்னுள் எழுந்த உண்மையான நேசம்... என் மானுவை.. எனக்கு பரிசாக கொடுத்துவிட்டதே!' என்று அன்பு ஒருபுறம் சந்தோசிக்க...

மானசா கல்யாணம் பற்றி குறிப்பு காட்டிவிட்டதையும்.. கல்யாணத்துக்கு பிறகு அன்பு மனசு வச்சால்.. அந்த மாப்பிள்ளையோடு அதே வீட்டில் வாழலாம் என்ற அர்த்தத்தில்.. தைரியமாய் சொல்லி விட்டதையும் எண்ணி மகிழ்ச்சியின் உச்சிக்கேப் போனாள்.



வைக்கோலையும் அத்தானின் பிரிவினையில் இணைத்து விட்டால்.. அவரின் கவலை குறையும்! தானும் வெளியே போகத் தேவையில்லை என்று எண்ணினாள்.

கல்யாண விஷயம் பற்றி அத்தான் அப்பாவிடம் கூறுவார் என்ற எதிர்பார்ப்புடன்.. பரிட்சையை நல்லபடியாய் முடித்தாள்.

கொஞ்சநாளில் திவ்யாவிற்கு முதல் வருட திதி வர... குடும்பமே சோகத்தில் மூழ்கிவிட்டது.

ஒரு பத்துநாட்கள் சோகத்தின் காயம் இருந்து... மெல்ல ஆறவும்..

அன்று மானசா தோழி நிர்மலாவை பார்க்கச் சென்ற சமயம்...

சிவசங்கரன் அன்பு முதற்கொண்டு மனைவி, தமக்கை மூவரையும் ஹாலிற்கு அழைத்தார்.

"அன்பு இன்னும் எத்தனை நாட்களுக்கு தனியே கஷ்டப்படுவாய்? உனக்கொரு கல்யாணத்தை செய்து வைக்கலாம் என்று விரும்புகிறேன்! பொண்ணு கூட முடிவு பண்ணிட்டேன்!" என்று மாமா சொல்ல.. அன்பு அதிர்ந்துவிட்டான்.

"வேணாம், மாமா!" என்று மறுத்தான்.

"ஏற்கனவே வேண்டாம் வேண்டாம் என்றவனின் தலையில்.. திவ்யாவைக் கட்டி வைத்து.. பெரிய தப்பு பண்ணிட்டேன். அந்த தவறை நேர்ப்படுத்த வேண்டாமா?"

"நீங்க என்ன சொன்னாலும் என் வாழ்க்கையில் இன்னொரு பெண்ணுக்கு இடமில்லை!"

"உங்கள் மனசுக்கு பிடித்த மானசா என்றால் கூடவா மறுப்பீர்கள்? ம்?"

அந்த சொல் அவனின் இதயத்தில் பூஞ்சாரலாய் மோதி சிலிர்க்க வைத்தது.

''என் பெண் மானசாவைத்தான் உனக்கு மறுமணம் செய்து வைக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்! நானும் உன்னை கவனிச்சிட்டு வரேன், அன்பு! நீ மானசாவை பார்க்கும் பார்வையில் உன் ப்ரியத்தையும்.. அன்பையும் கண்டேன்! அவளுக்கு கட்டுப்படலில் உன் பிணைப்பைக் கண்டேன்! மொத்தத்தில் உனக்கு அவளைப் பிடித்திருக்கிறது என்பதை உணர்ந்துதான்.. நான் இந்த முடிவெடுத்தேன்! இந்த முடிவில் சம்மதமா?''

''மானசா..'' என்று இழுத்தான்.

''அவளுக்கு உன் மேல் ப்ரியம் இல்லாமல்.. உன்னை இந்த அளவு கவனிச்சிக்குவாளா? தாங்குவாளா? உன் குழந்தைகளுக்கு திவ்யா போனப்பின் நிஜத்தாயாகவே மாறியவள்.. உனக்கு மட்டும் மனைவியாக மாட்டாளா? சொல்லு அன்பு? ஜோசியரைக் கலந்து ஆலோசித்து விட்டேன்! நாள் கூட பார்த்துட்டேன்! வீட்டிலேயே சிம்பிளாய்.. ஐயரை வச்சி.. உறவுக்காரர்களை மட்டும் அழைச்சி.. கல்யாணத்தை முடிச்சிடலாம்ன்னு பார்க்கிறேன்! நீ என்ன சொல்றே அன்பு? அக்கா.. நீ?'' என....

''நான் என்ன சொல்வது? திவ்யாவை திருமணம் செய்துக்க என்றபோது அவ்வளவு மறுத்தவன்.... இப்போ மௌனமா இருக்கான்! இதிலிருந்து அன்பு மானுவை விரும்புவது தெரியுது! அப்போ எனக்குக் கூட இவனோட திவ்யாவை இணைச்சி வைக்கப் பிடிக்கலே! ஆனாலும், அவள் என் மருமகளானதும்.. என் மனதை கவர்ந்து விட்டாள். போன மகராசியைப் பற்றிப் பேசி என்ன புண்ணியம்? மானு என் மருமகளானால்.. என்னை விட



பெரும் அதிர்ஷ்டசாலி இருக்கமாட்டார்கள். என் பேத்திகளுக்கு பெயரளவில் தாயாய் இருப்பவள் நிஜத்தாயானால்.. எல்லோருக்குமே சந்தோசம் தானே!'' ஜெயா மகிழ்ச்சியாய் சொல்ல...

''சிவகாமி.. உனக்கு? நீ எதுவும் சொல்லலையே?'' மனைவியைப் பார்த்து கேட்க...

''சந்தோசங்க!'' என்றாள்.

''மாமா.. மானுவின் சம்மதம் பெற்று.. பிறகு எதையும் செய்யுங்க!''

''அவளுக்கும் விருப்பம்தான்! கண்டதைப் போட்டு மனதை குழப்பிக்காமல் இரு! வாங்க எல்லோரும் இனிப்போட உணவு உட்கொள்வோம்!'' என்று சிவசங்கரன் கூற உணவு மேஜையை நோக்கிச் சென்றார்.

கொஞ்ச நேரத்தில் பிசினஸ் விஷயமாய் அன்பு சிங்கப்பூர் செல்ல ஏர்போர்ட்டுக்கு கிளம்பிவிட்டான். அவன் வர நான்கு நாட்கள் ஆகும்.

சிவகாமி, ஜெயா, குழந்தைகளை தூக்கிக் கொண்டு அருகில் இருந்த கோவிலுக்குச் சென்றுவிட....

கொஞ்ச நேரத்தில் மானசா வந்தாள். அவளிடம் அன்புவோடு கூடிய திருமண விஷயத்தைச் சொல்ல.. நெருப்பில் விழுந்த கணக்காய் துடிதுடித்து விட்டாள்.

''அப்பா.. இந்தக் கல்யாணம் வேண்டாம்ப்பா!'' அவர் காலில் விழுந்து கூற.. அவளைத் தூக்கி நிறுத்தி கோபத்தோடு...

''ஏன்?'' என்று கேட்டார்.

''என்கிட்ட எதற்காகவும் மறுப்புச் சொல்லக்கூடாதுன்னு தெரியுமில்லையா? படிப்பு முடிந்ததும் நான்

கைகாட்டற மாப்பிள்ளையை கட்டிக்கிறேன்னு ப்ராமிஸ் பண்ணியிருக்க இல்லையா? சொன்னதை செய்! இன்னும் பத்துநாளில் திருமணம்! மாப்பிள்ளை அன்புதான்! அவனைக் கட்டிக்க கசக்குதா? உன் அக்கா அவனை தவிக்கவிட்டு போனதுக்கு பரிகாரமா.. நீதான் அவனுக்கு வாழ்வு அளிக்கணும்! புரியுதா? கடமையும் கூட! தெரியுதா?'' என்று கொதிப்புடன் சிவசங்கரன் கத்த...

''முடியாதுப்பா... என்னால் முடியாது!''

''முடியாதுன்னு சொல்ல உனக்கு உரிமையில்லே! என் பேச்சுக்கு கட்டுப்படலேன்னால் சாகடிச்சிடுவேன்!''

''சாகடிங்க! நிம்மதியாய் போய்ச் சேர்ந்துடறேன்!''

''என்னைக்கு இருந்தாலும் ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கப்போறேன்தான்! அந்த மாப்பிள்ளை நம்ம அன்புவாக இருக்கட்டுமே! கல்யாணமாகி ஒரு வருடம் வரை சேர்ந்து வாழலையாம்! அப்புறமா ரெண்டு பேரும் சந்தோசமா இருந்தது ஒரு மூணுமாசம் தானாம். பிறகு நோய், இறப்புன்னு திவ்யா போய் சேர்ந்துட்டா! இது பரிதாபம் இல்லையா, மானு? இது பாவம் இல்லையா, மானு! எத்தனை கொடுமையான செயலை அவனுக்கு செய்துட்டேன்! அதற்கெல்லாம் ஈடாகத்தான்... பரிகாரமாகத்தான் உன்னை அவனுக்குக் கட்டி வைக்கறேன்! என்ன தப்பு?''

''என் சம்மதம் வேண்டாமா?''

''சம்மதிக்கக் கசக்குதா? அவனோட சந்தோசமா சேர்ந்து ஒட்டி உறவாடினவதானே? வீழ்ந்து போனவனை எத்தனை சாதுரியமாய் தூக்கி நிறுத்தியிருக்கிறாய்! அதெல்லாம் அவன் மேல் நேசமில்லாமலா? பாசமில்லாமலா?''



''ஐய்யோ.. உங்களுக்கு எப்படிப் புரிய வைப்பேன்! சிறுவயது முதற்கொண்டே நாங்க எப்படி பழகியிருக்கோம்! அதுபோலத்தான் இப்போதும்! அவர் மேல் என் அத்தை மகன், அக்கா புருஷன்னு அன்பு, ப்ரியம், பாசம், நேசம் எல்லாமே இருக்கு! ஆனால் கணவனா அவரை ஒருநாளும் நினைத்துப் பார்க்கலேப்பா!'' கண்களில் கண்ணீர் சரம் தொடுத்து நிற்க.. மானு பரிதாபமாய் சொல்ல...

''இப்போ மட்டும் என்ன கெட்டுப் போச்சி? இனி அவன்தான் கணவன்னு நினைச்சிக்கோ! அடம் பண்ணாதே! இன்னும் பத்தாம் நாளில் இந்த நேரமெல்லாம் அவன் மனைவியாய் இருப்பாய்!''

''அவருக்கு விருப்பமா?''

''ஓ.. யெஸ்!''

''ஆனால் எனக்கில்லே!''

சிவசங்கரன் ஓங்கி அறைந்து விட்டார்.

''ஏன்? ஏன்? எதுனா காதலா?'' கத்தினார்.

''ஆமா! நான் மைக்கேலை உயிருக்குயிரா காதலிக்கிறேன்! அவரைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்!''

''யார் உன்னோட படிச்சானே.. ஒரு அநாதைப்பயல் அவனையா...? பைத்தியக்காரி.. பைத்தியக்காரி.. உனக்கு நிஜமாகவே கிறுக்குதான்டி பிடிச்சிருக்கு! எத்தனை படிச்சிப் படிச்சி சொன்னேன்? காதல், கத்திரிக்காய் எல்லாம் நம்ம குடும்பத்துக்கு ஒத்துவராதுன்னு! சனியனே... சனியனே.. என்ன பேசறே?'' கோபம் அதிகமாகி மீண்டும் கை ஓங்கினார்.

"அவரைத்தான் திருமணம் பண்ணிப்பேன்!"

"கொன்னுடுவேன்! பிள்ளையே வேண்டாம்ன்னு கொலைப்பண்ணிடுவேன்! நீ எவ்வளவு கெஞ்சினாலும், கத்தி கதறினாலும் அந்த ஈனச் செயல் மட்டும் செய்ய மாட்டேன்! உன்னால் என்ன முடியுமோ... பாரு!" என்று அவர் எகிற.. மானசா தாழ்ந்து போனாள்.

"அப்பா.. அப்பா.. ப்ளீஸ்ப்பா..."

"என்னைக் கோபப்படுத்தாதே! இதுக்கு மேலே பேசினே என் உயிரை மாய்ச்சிக்குவேன்! இப்படி ஒரு பிள்ளையைப் பெற்று வளர்த்த பாவத்திற்காக...!

"ஏய் மானு.. கல்யாணம் வேண்டாம் என்றவன்... நீ தான் பெண் என்றதும் மறுக்கலே, தெரியுமா? அவனும் மனுசன்தானே? வாழவேண்டிய வயசுல காலனுக்கு மனைவியை வாரி கொடுத்துட்டு.. எத்தனை துக்கப் பட்டுப் போனான்! கண்முன்னே அந்த கொடுமையை கண்டுமா.. உனக்கு அவன் மேல் இரக்கம் வர்லே! கருணை வர்லே! குழந்தைங்க ரெண்டும் உன்னைத்தான் முதல் முதலா அம்மான்னு சொல்லி அழைச்சிட்டு வருதுங்க! நீ வேறவனை பண்ணிட்டுப் போயிட்டால்... அந்த ரெண்டு இளம் குருத்துகளும் தாங்குமா? உன்னைப் பிரிந்து உயிர் வாழுமா? அம்மாவும், அத்தையும் சந்தோசமா கோவிலுக்கு போயிருக்காங்க! அன்பு சிங்கப்பூர் போறதுக்கு முன்ன பத்து லட்சத்துக்கான செக் எழுதி நீட்டி 'மானுக்கு பிடிச்சதா வாங்கிக்கச் சொல்லுங்க, மாமா!' என்று ஆசையா சொல்லிட்டுப் போயிருக்கான். இந்த குறுகிய நாட்களில்.. இவ்வளவு பெரிய அளவு ஒருவனால் உயர முடியுமா? அன்பு... ஆண் இனத்திலே



அபூர்வமான குறிஞ்சிப் பூ! அந்த பூவைச் சூடிக்க உனக்குக் கொடுத்து வச்சிருக்கணும்! தெரியுதா?"

அவள் விம்மிக் கொண்டே இருந்தாள்.

"எங்களுக்கு சமாதியைக் கட்ட சம்மதம்ன்னால்.. போய் மைக்கேலைக் கட்டிக்கோ!" சொல்லிவிட்டு வெளியேறிவிட்டார்.

மானசா பிழியப் பிழிய அழுதாள். அவள் அறையைப் பூட்டிக் கொண்டு அழுது புலம்ப... சிவகாமி, ஜெயா அதனை வெட்கமாய் எடுத்துக் கொண்டனர்.

மறுநாளே தகப்பன் வீட்டில் இல்லாத சமயம் வெளியேறி மைக்கேலைச் சந்தித்தாள்.

விஷயத்தைச் சொல்ல.. அதிர்ந்துவிட்டான்! அவன் கண்கள் கண்ணீரில் மிதந்தன.

இருவரும் அழுது, ஓய்து... கண்ணீர் வற்றியதும் நிஜத்திற்கு வந்தார்கள்.

"எனக்குத் தெரியலே, மைக்கேல்! என்ன செய்யறதுன்னே தெரியலே! அப்பா இந்த அளவு தீவிரமா இருப்பார்ன்னு நினைக்கலே! உங்களைப் பார்ப்பதா... குழந்தைகளைப் பார்ப்பதா.. அத்தானைப் பார்ப்பதா.. பெற்றோரைப் பார்ப்பதான்னு எனக்கு தெரியலையே! கடவுள் ஏன் என்னை இப்படி சோதிக்கணும்?" விம்மி வெடித்தாள்.

"உன் முடிவு என்ன, மானு?"

"எல்லோரையும் வருத்தி நாம் சேரணுமா, மைக்கேல்?"

"மானு.. என்ன சொல்றே?" அதிர்ச்சியில் கத்தினான்.

"மறந்துடுங்க! எல்லாத்தையும் மறந்துடுங்க! மானசா என்ற ஒருத்தியை சந்திக்கலேன்னு நினைச்சிக்கங்க, மைக்கேல்!"

"ஐய்யோ மானு.. உன்னை எப்படி மறப்பேன்? என் தலையில பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போடறியே!"

"அப்பாவை எதிர்த்து இனி ஒன்றுமே செய்ய முடியாது மைக்கேல்! எவ்வளவு தீவிரமா இருக்கார்! விதி.. விதி விட்ட வழியே செல்வதைத் தவிர, வேறு ஒன்றும் செய்ய முடியாதே, மைக்கேல்! என்னை மறந்துடுங்க!" வீறிடலோடு சொல்ல...

"உன்னால் மறக்க முடியுமா, மானும்மா!" அவன் உயிர் கரைய கேட்க...

"ஐய்யோ..." என்று அலறி துடித்துக் கொண்டு ஓடினாள், மானு.

## 20

**"பிறரை வெல்பவன் புத்திசாலி!**
**தன்னையே வெல்பவன் வீரன்!"**

அன்பு நான்கு நாட்களின் வேலையை மூன்று நாட்களில் முடித்துக் கொண்டு வந்தான். மானசாவை காண வேண்டும் என்ற ஆசையில் இரவு, பகல் பாராது உழைத்து.. ஒரு நாளை மிச்சப்படுத்தி.. உடனே ஓடி வந்தான்.

மானசா அன்புவின் எதிரில் வரவே தயங்க.. அதை வெட்கமாய் எடுத்துக் கொண்டான்.



அன்று மானசா தோட்டத்தில் மனம் நொந்து.. களையிழந்து.. சோகமாய் அமர்ந்திருந்த போது.. அன்பு அருகே வர.. சட்டென்று முகத்தை மாற்றி புன்னகைக்க கஷ்டப்பட்டாள்.

"மானு.. என் கண்ணே.. உனக்கு பூரண விருப்பம் தானே?" அன்பு கேட்க... 'இல்லை' என்று கத்த தோன்றிய மனதை அடக்கி மௌனமாய் நின்றாள்.

"என்னடா? மௌனத்தை சம்மதமா எடுத்துக் கொள்ளலாமா? மாமா கேட்க சட்டென்று பூரிச்சிட்டேன், மானு! என்ன மானு பேசமாட்டேங்கிறே? உடம்பு எதுனா சரியில்லையாடா?"

அன்பு அருகில் வந்து நெற்றியில் கை வைத்துப் பார்க்க.. அவளுக்கு கண்ணீர் திரையிட்டது.

"ஏய் மானு.. அழறியா என்ன?" அவன் பதற...

"இவ்வளவு எளிதாய் நீங்க கிடைப்பீங்கன்னு எதிர் பார்க்கலே, அத்தான்! அதனால் ஏற்பட்ட ஆனந்த கண்ணீர்!" அந்த சமயம் அழுகையை மறைக்க.. சட்டென்று என்ன பேசுவதென்று உளறிவிட்டு வர... அன்புவின் மனமோ ஆகாயத்தில் பறந்தது.

புடவை மற்றும் தேவையான பொருட்கள் வாங்க அவளை அழைக்க.. அவள் மறுக்க...

"அன்பு இத்தனை நாளா உன்னிடம் செமையா வாயாடிட்டு இருந்தாள் இல்லையா... இப்போ நீதான் அவள் புருஷனாகப் போறேன்னு தெரிய பயந்துப்போய் இருக்கா போல! அடுத்ததா இதுநாள்வரை யாரோவா உன்னோட வந்தாள். அது மேலும் தொடர பிடிக்கலே போல! கல்யாணம் கட்டி.. கணவன் மனைவியாப் போக

மானு ஆசைப்படறாளோ என்னவோ?'' சிவசங்கரன் சொல்ல...

''அப்படியா மானு?'' அன்பு கேட்க...

''ம்...'' என்று கட்டாயமாய் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு உள்ளே ஓடினாள்.

பாதர் வில்லியம்ஸ் மைக்கேலிடம் செய்தி கேள்விப் பட்டு...

''மகனே.. மகனே.. சிவசங்கரன் சார்கிட்ட நான் போய் பேசிப் பார்க்கட்டுமா?'' என்று கேட்க...

''என்னை வளர்த்து ஆளாக்கிய பாவத்திற்கு.. அவரிடம் நீங்க நிற்க வேண்டாம், பாதர்! மனுசனுக்கு மரியாதையென்றால் என்னன்னே தெரியாது!''

மைக்கேல் மறுத்து விட்டான்.

மைக்கேல் உள்ளுக்குள்ளேயே புலம்பினான்.

'மானசா.. மானசா.. மானசா...

'நீயில்லாமல் எப்படி வாழ்வேன்? உன்னை என்னால் மறக்க முடியுமா? மறந்துதான் வாழமுடியுமா? என் நெஞ்சத்தில் ஊடுருவிவிட்ட நீ இல்லாமல் என்னால் வாழவே முடியாதே, மானசா! என் ஒவ்வொரு செல்லிலும் கலந்துவிட்ட உன்னை எப்படி விலக்குவேன்?

'என் நெஞ்சில் தென்றலாய் தவழ்ந்தவளை எப்படி மறவேன்?

'உன் காதல் எனக்கு வரமாய் கிடைத்ததே!

'என் சுவாசமானவள் நீ! அந்த சுவாசம் வேறு ஒருவருக்கு சொந்தமானால்... நான் இங்கே மரிப்பதைத்தவிர வேறு வழியில்லை, மானசா!



'என் இனிய இதயமே.. என்னை மறந்து உன்னால் அன்புவோடு வாழ முடியுமா?

'நியாயமா மானசாம்மா.. உருகி உருகி.. மருகி.. மருகி காதலித்துவிட்டு.. கடைசியில் தீயாய் தாக்குகிறாயே!

'என்னுள் பூவாய் மலர்ந்தவள்... புயலாய் தாக்கி விட்டுப் போகலாமா?

'தேவதையாய், கவிதையாய், கற்பனையாய் என்னுள் நுழைந்த உன்னை எப்படி அழிப்பேன்?

'என் கண்ணுள் நின்றவளை.. கருத்தில் வியாபித்தா வளை.. என் உயிரில் கலந்துவிட்டவளை... என் உள் எத்தை ஆக்கிரமித்தவளை... என் கற்பனைகளை கள வாடியவளை... என் கனவுகளை சொந்தமாக்கிக் கொண்ட வளை.. என்னை முழுவதுமாய் சிறைப் பிடித்துக் கொண்ட வளை எப்படி மறப்பேன்?

'காலமெல்லாம் உங்களை சந்தோசத்தில் ஆழ்த்து வேன் என்று சொல்லிவிட்டு... கடைசியில் என்னை கண்ணீரில் மூழ்கடித்துவிட்டாயே, மானு!

'மானு... உன் மேலான ஆசை என்னுள் வானமாய் விரிந்து, பரந்து, வியாபித்து இருக்கிறதே! அதை மடித்து, சுருட்டி, சுக்கல் சுக்கலாய் எவ்வாறு கிழித்தெறிவேன்? என்னால் முடியுமா... என்னுயிரே?'

ஏசுவின் பாதத்தில் கண்ணீர் விட்டு கதறி தஞ்சம் புகுந்தான்.

'கடவுளே.. மானுவை எனக்குக் கொடுத்துவிடு!

'மாண்டு மாண்டு.. மருகி மருகி... உருகி உருகி என்னைக் காதலில் விழ வைத்துவிட்டு.. கடைசியில் என்னை கண்ணீரில் கரைய வைத்துவிட்டாயே!'

'எனக்கு ஆரோக்கியமான உடலை கொடுத்திருக்கிறாய்! சுயநலமில்லாத சுத்தமான இருதயத்தை கொடுத்திருக்கிறாய்! அடுத்தவருக்கு உதவும் உயரிய எண்ணத்தை என்னுள் விதைத்திருக்கிறாய்! வகுப்பில் முதல் மாணவனாய் சிறந்து விளங்க நல்ல அறிவைக் கொடுத்திருக்கிறாய்! அழகான நல்ல காதலியை எனக்கு கொடுத்தாய்! கொடுத்த வேகத்திலேயே தட்டிப் பறிக்கப் பார்க்கிறாயே, இறைவா!

'அவள் உயிருக்குள் என் உயிரை முடிந்துக் கொண்டு விட்டாளே! என் உயிரை எப்படி மீட்பேன்?

'என் உயிரை அவளுள் தொலைத்துவிட்டேனே! தொலைந்து போனதை தொலைத்த இடத்தில்தானே தேட முடியும்!

'இப்படி ஒரு சோதனையைக் கொடுத்திருக்கிறாயே! இந்த சோதனையை எப்படி கடப்பேன்?

'இப்படி ஒரு விஷப் பரிட்சை எனக்கு தேவையா? இந்த விஷப்பரிட்சையில் எப்படி வெற்றி பெறுவேன்?

'இவ்வளவு பெரிய தடைக்கல்லை எப்படி தாண்டுவேன்?

'உன்னிடம் தேவ விசுவாசத்துடன் இருந்தேனே! என்னை இப்படி வேதனைப்பட வைத்துவிட்டாயே, இறைவா!'

கண்ணீர் வற்றிப் போகும் வரை கலங்கியவன்... பிறகு ஒரு முடிவெடுத்தான்.

அந்த முடிவால் விதியோ.. தனது அடுத்த காயை விபரீதமாக நகர்த்தப் போவது தெரியாமல்!



# 21

**''பகைமையும் பொறாமையும் நம்மை இருமடங்காய் தாக்கி தரைமட்டமாக்கிவிடும்!''**

''மானுவை நான் பார்க்க வேண்டும்! கடைசியாய்.. கட்டாயமாய்!'' என்று மைக்கேல் நிர்மலா முன்பு நிற்க... மறுக்க முடியாமல் மானசா வீட்டுக்குச் சென்றாள்.

வீட்டில் மானசாவும் அன்பு மட்டுமே இருந்தனர். மற்றவர்கள் கடைக்குச் சென்றிருந்தனர்.

''உன்னை மைக்கேல் கடைசியாய்ப் பார்க்கணுமாம்!''

''எப்படி நிர்மலா?'' கண்கலங்க...

''ஏதாவது ஒரு பொய் காரணத்தைச் சொல்லிட்டு கிளம்பு, மானு! இன்னும் ரெண்டுநாள் தான் இருக்கு உன் திருமணத்துக்கு! உன் மேல் நேசம் வைத்த காரணத்திற்காகவாவது மைக்கேல் மேல் இரக்கம் காட்டக் கூடாதா? ப்ளீஸ் மானு!'' என்று கெஞ்ச... மானசா அன்புவின் முன்பு நின்றாள்.

''அத்தான்... முகமெல்லாம் வறவறன்னு இருக்கு! பியூட்டி பார்லர் போயிட்டு வரவா? துணைக்கு நிர்மலா வராளாம்!'' என்று கெஞ்ச... அன்பு சம்மதித்துவிட்டான்.

மைக்கேல் முன்பு நின்றாள்.

''வா மானு! உட்கார்! ரொம்ப நேரம் நீ இங்கே இருக்க முடியாதில்லையா? என் முடிவு உனக்கு பிடிச்சிருக்கோ..

இல்லையோ.. நீ கட்டுப்படணும்!'' என்று புதிர்போட... மானசா பயந்துவிட்டாள்.

''மானு.. நான் நல்லா யோசிச்சிட்டேன்! நீயில்லாமல் என்னால் வாழவே முடியாது! இந்த முடிவு ஒன்றுதான் நம்மை சேர்த்து வைக்கும்! நாம ரெண்டு பேரும் கண் காணாத இடத்துக்கு ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக் கலாம்! சந்தோசமா வாழலாம்! அதுக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்துட்டேன்!'' மைக்கேல் சொல்ல...

''ஐய்யோ.. நான் மாட்டேன்!'' மானசா வீறிட்டாள்.

''உனக்கு பிடிக்குதோ.. இல்லையோ எனக்குப் பிரச்சனையில்லை! நீ எனக்கு வேண்டும்! உன்னைப் பிரிந்து வாழமாட்டேன்! நீ வரே!'' அவன் கட்டாயமாய் சொல்ல...

''அப்படி ஒரு இழிவான செயலைச் செய்யமாட்டேன்!''

''அப்போ நீ என்னை நிஜமா காதலிக்கலையா? வெறும் இனக்கவர்ச்சி தானா? டைம் பாஸிங் தானா?''

''ஏன் இப்படிப் பேசறீங்க? என்னைத் தப்பா எடைப் போடறீங்க? எத்தனையோ பேரோட நெறிபிறழ் நடத் தையை மாற்றியமைத்தவர், நீங்க! நீங்களே ஒழுக்கம் தவறலாமா?''

''அடுத்தவங்களுக்கு புத்தி புகட்டுவது எளிதுன்னு தெரிஞ்சுட்டேன்! ஆனால் அதே இக்கட்டான சூழ்நிலை எனக்கு ஏற்படும்போது.. என்னால் சராசரி மனிதனாய் தான் சிந்தித்துப் பார்க்க முடிகிறது! மானும்மா... மறுத் துடாதேடா! எனக்கு நீ வேணும்டா! இல்லேன்னால் செத் துடுவேன்! உன் கழுத்தில் தாலியேறிய மறுநிமிடமே செத்துடுவேன்!'' மைக்கேல் மனமொடிய பேச...



''ஏன் முட்டாள் மாதிரி பேசறீங்க?''

''நிஜமா மானும்மா! நாளை மாலை நிர்மலா வருவாள்! எல்லோரும் தூங்கிய பின் எப்படியாவது புறப்பட்டு நிர்மலாவோடு நீ வரணும்! ஜெய்ப்பூர் போறோம்! எல்லா ஏற்பாடும் செய்துட்டேன்! நான் வரேன்!''

அவள் பதில் சொல்லும் முன்... அவ்விடம் விட்டு புயலாய் கிளம்பிவிட்டான்.

இங்கே அன்புவுக்கு போரடிக்க... மானசாவின் அறைக்குள் நுழைந்தான்! நிம்மதியாய் அவள் கட்டிலில் சரிய... போர்வைக்கு அடியில் இருந்து எதுவோ அவன் முதுகை உறுத்த... எடுத்துப் பார்த்தான்.

டைரி!

அடுத்தவர் டைரி படிப்பது அநாகரீகம் என்றாலும்... அவன் மானுவின் எண்ணம், கொள்கை, விருப்பம், பிடித்தது, பிடிக்காதது தெரிந்தால்தானே திருமணத்திற்கு பின் அவளை உள்ளங்கையில் வைத்து தாங்கலாம் என்று பிரித்துப் பார்க்க...

அதிலுள்ள செய்திகள் அனைத்தும் அவனைத் தாக் கியது! தரைமட்டமாக்கியது! ஒரு முடிவோடு மைக்கேலைக் காணச் சென்றான்.

மாலை நேரம்!

மானுவிடம் அத்தனையையும் கொட்டிவிட்டு வந்து... சர்ச்சின் முன்புறமிருந்த புல்வெளியில்... வெட்ட வெளியை வெறித்துக் கொண்டு மைக்கேல் படுத்துவிட்டான்.

இலக்கின்றி பார்வையை சுழலவிட்டவனின் அருகில் வந்து.. அன்பு நிற்க.. பதறி எழுந்தவன்...

''வாங்க.. வாங்க அன்பு சார்!'' என்றான்.

''மைக்கேல்... நீங்களும், மானசாவும் என்ன காரியம் செய்து விட்டீர்கள்? இது உங்களுக்கே நல்லாயிருக்கா? இது துரோகமில்லையா? இது துன்பமில்லையா? ஏன் இப்படி செய்தீங்க? மானசாவும் உங்களோட கூட்டா?'' என்று கேட்க.. மைக்கேல் கொஞ்சம் நடுங்கிவிட்டான்.

'நன்றி கெட்ட மானசா.. அத்தனையையும் அன்புவிடம் உளறி... அன்புவை சண்டைக்கு அனுப்பிவிட்டாள்.

'ச்சே.. பெண்களையே நம்பக்கூடாது!' என்று நினைத்தான்.

''ரெண்டு பேரும் உயிருக்குயிரா நேசிச்சிட்டு இப்படி மறைச்சிட்டீங்களே! மானசாவாவது என்கிட்ட ஓபனா சொல்லக்கூடாதா? காதலைப் புரிந்து கொள்ள முடியாத மடையனா நான்? இந்த விஷயம் தெரியாமல் போயிருந்தால்.. மானசாவிற்கு எவ்வளவு பெரிய துரோகம் செய்திருப்பேன்! எந்த பிறவி பாவமோ துரத்தி வந்து என்னைத் துன்பப்படுத்துது! மேலும்.. மேலும் பாவம் செய்து... அந்த பாவத்தால் வரும் வினையை என்னால் தாங்க முடியுமா, மைக்கேல்?''

விஷயம் வேறுவிதமாய் போக மைக்கேல் நிம்மதியானான்.

''கவலைப்படாதீங்க, மைக்கேல்! உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்கறது, என் பொறுப்பு! மாமாகிட்ட சொன்னால் அவர் புரிஞ்சிக்க மாட்டார்! அதனால் அவர் வழிக்கே போய் அவரை நாம ஜெயிக்கணும்! நாளைக்கு அடுத்தநாள் காலை முகூர்த்தம்! சரியா ஏழுமணிக்கு வந்துடுங்க! ஏழரைக்கு முகூர்த்தம்! மணமேடையில



அமர்ந்து மானசாவுக்கு நீங்கதான் தாலி கட்டப்போறீங்க! என்ன சந்தோசமா? இந்த செய்தியை யாரிடமும் மூச்சு விடாதீங்க! மானசாகிட்ட கூடத்தான்! கள்ளி மறைச்சா இல்லையா? நானும் மறைச்சி.. சர்ப்ரைஸ் ஹாப்பி கொடுக்கணும்! வரேன், மைக்கேல்!''

அன்பு கிளம்ப இருந்த சமயம் கௌதமிடம் இருந்து போன்!

''பட்டுச்சேலை எந்த கலர்ல எடுக்கலாம், அன்பு?'' கேட்க... அன்பு மைக்கேலைப் பார்த்து கேட்க...

''பச்சையில ரோஸ்பார்டர்..'' என்று மைக்கேல் சொல்ல... அதையே ரிபிட் செய்தான், அன்பு.

இரவு தாங்க முடியாமல் கௌதமிடம் அத்தனையையும் அன்பு கொட்ட...

''மடையா.. மடையா... பெரிசா தானம், தர்மம் பண்றதா நினைப்பா? மாய்ந்து மாய்ந்து காதலித்த பெண்ணை இப்படியா அடுத்தவனுக்கு தாரை வார்க்கறேன்னு சொல்லிட்டு வந்து நிற்பே! உன் காதல்?''

''என் காதலை என்றும் போல என்னுள்ளே மீண்டும் போட்டுப் புதைத்துக் கொள்வேன்!'' அன்பு சொல்ல....

''காதலை நல்லா குழிதோண்டி புதைக்க கற்றவனாச்சே!'' என்று கௌதம் எரிந்து விழ...

''காதலர்களைப் பிரிப்பது பாவம்டா! அதுவும் நேசிச்ச பெண் கஷ்டப்படறதை பார்த்துட்டு எப்படிடா இருக்க கௌதம்?''

''உன்கிட்ட பேசவே பிடிக்கலே! நீயெல்லாம் என்ன மனுசனோ?'' என்று முகம் சுளிக்க.. அன்பு கசப்பான சிரிப்பொன்றை உதிர்த்தான்.

# 22

**"சோம்பலை சாம்பலாக்கு!**
**தோல்வியை எருவாக்கு!**
**வெற்றியை உருவாக்கு! (விதையாக்கு)"**

அடுத்தநாள் மாலை நிர்மலாவின் வரவை வழிமேல் விழி வைத்து காத்திருந்தாள், மானசா.

அப்பா, அம்மா, அத்தை மகிழ்ச்சியில் துள்ளினர்.

அன்பு மட்டும் உற்சாகம் குறைந்தவனாய் காணப் பட்டது... அவளின் பிரமையா? நிஜமா? தெரியாமல் மானசா முழித்தாள்.

மைக்கேல் எங்கே தனது திருமணத்திற்குப் பிறகு தவறான முடிவெடுத்து விடுவானோ என்று உள்ளுக் குள்ளே கலங்கினாள்.

மைக்கேலோடு பேசிவிட்டு வந்த பின்.. அப்பாவின் முகத்தில் கரியைப் பூசவே எண்ணம் வந்து அலைக் கழித்தது.

அன்பு அத்தான் கொஞ்ச நாள் வருந்துவார். பின் இயல்புக்கு மாறி நல்லப் பெண்ணாய் மணந்து வாழுவார் என்றும்... அம்மாவும், அத்தையும் குழந்தைகளை கண் ணும் கருத்துமாய் பார்த்துக் கொள்வார்கள் என்றெல்லாம் நம்பிக்கை பிறந்த பின்...

நான்கைந்து துணிகளை சின்ன சூட்கேஷில் வைத்து பூட்டிவிட்டு காத்திருக்க... நிர்மலா வந்த பாடில்லை.



எல்லோரும் உறங்கியதும் தனியாவே வெளியேற லாம் என்று தூங்காமல் விழித்திருக்க.. சிவசங்கரனோ நொடிப் பொழுதையும் வீணாக்காமல் அவளின் அறை வாயிலில் ஒரு சாய்வு நாற்காலியைப் போட்டு அமர்ந்து கொட்டக் கொட்ட விழித்திருந்தார்.

சுற்றத்தாரும், சொந்தங்களும்.. அந்த மிகப்பெரிய பங்களாவினுள் தஞ்சம் புகுந்து நித்திரையில் ஆழ்ந் திருக்க...

மானசா அறையின் கட்டிலில் விம்மியழுதுக் கொண் டிருந்தாள்.

மறுநாள் எல்லோருக்கும் ரம்யமாய் விடிய...

பங்களாவே நாதஸ்வர இசையில் களைகட்டியிருந்தது.

ஒருபுறம் விருந்து தயாராகிக் கொண்டிருந்தது. மறுபுறம் எல்லோரும் குளித்து, உடுத்தி காபி, டீ என்று அலைந்து கொண்டிருந்தனர்.

மானசாவும் குளிக்க வைக்கப்பட்டாள்.

பியூட்டி பார்லரிலிருந்து வந்த பெண்மணி அவளது அலங்காரத்தை முடித்தாள்.

சரியாய் எழுமணிக்கு மைக்கேல் வர...

அன்பு பட்டு வேட்டி, சட்டை இருந்த தாம்பூலத்தை ஐயரிடமிருந்து வாங்கி மைக்கேலிடம் கொடுக்க...

"அன்பு.. என்ன செய்யறே?" என்று சிவசங்கரன் மிரட்ட.. உறவினர் கூட்டம் புரியாமல் முழிக்க...

"நீங்க சும்மா இருங்க மாமா! நான் செய்யறதுதான் சரி!" என்று கூற...

"நான் மானசாவைப் பார்க்கணும்..! பேசணும்...!" மைக்கேல் கூற... அன்பு அவளறையைச் சுட்டிக்காட்ட.. அங்கே வந்த மைக்கேலைக் கண்டு.. மானசா ஆனந்தக் கூத்தாடினாள்.

## 23

**"தாயன்புக்கு ஈடுயிணை ஏதுமில்லை! தாயன்பு கிடைப்பது பெரும் வரம்! பெரும் பேறு!"**

மைக்கேல் வந்துவிட்டான். இனி கவலையே இல்லை என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டாள், மானசா.

"நான் உன்கிட்ட பேசணும், மானசா! அதுவும் நிறைய!" என்று மைக்கேல் புதிர்போட... மானசா மலங்க மலங்க விழித்தாள்.

"உலகத்துலயே மிக புனிதமான உறவு தாய்க்கும், பிள்ளைக்கும் உள்ள உறவுதான், மானசா! காதலைவிட தாய்மைதான் சிறந்தது! உயர்ந்தது! தாய்ப் பாசத்தோடு எதையும் ஒப்புமைப் படுத்தவோ... உயர்த்திக்காட்டவோ முடியாது! எனக்கு நீ காதலியாய்.. மனைவியாய் இருப்பதை விட... அந்த ரெண்டு குழந்தைகளுக்கு தாயாய் இருப்பதில்தான் உனக்கு புண்ணியம்! புனிதம்! ஆண் பிள்ளையானாலும் எளிதாய் வளர்த்து விடலாம்! ரெண்டும் பெண் பிள்ளைகள்! இதனுடைய அம்மாவையே அறியாதவர்கள்! உன்னைத்தான் தாயாய் நினைத்து கொண்டிருக்கிறார்கள்! இந்த தளிர்களுக்கு நல்வழி காட்டல் வேண்டும்! அடுத்ததா வாழ்க்கையே



போயிடிச்சேன்னு இருட்டுல தழாவிகிட்டு இருக்கற அன்புக்கு நீ வெளிச்சமா இருக்கணும், மனு!"

"ஐய்யோ.. என்ன பேசறீங்க, மைக்கேல்?" அதிர்ந்தாள்.

"எனக்கு முன்னவே சிறு வயது முதற்கொண்டு உன்னைக் காதலிச்சவர், அன்பு! பெரியவங்க பேச்சை மீற முடியாமல்.. விருப்பமே இல்லாமல் திவ்யாவை மணந்தாலும்.. அவளோடு ஒன்றியே குடும்பம் நடத்தியிருக்கார்! இத்தனை நல்ல மனசு யாருக்கு வரும்! அந்த நல்ல மனுசனுக்கு வாழ்வு கொடு, மானசா!"

மானசா மேலும் அதிர்ச்சியில் வாய் பேச முடியாது சிலையாய் நின்றாள்.

"நீ மணந்தால் மட்டும் அவர் வாழ்வு மலரும்..!" என்று சொன்ன மைக்கேல் மீண்டும் தொடர்ந்தான்.

"அந்த பிள்ளைகளோட எதிர்காலத்தை அழிக்கவோ, தீயிட்டு கொளுத்தவோ நான் காரணமா இருக்கமாட்டேன்! தாய், தாயன்பு கிடைக்காத எனக்கு தான் தெரியும், தாயின் அருமையை! அது எத்தனை கொடுமையான விஷயம் தெரியுமா? எத்தனை ஏக்கமான செய்தி தெரியுமா? ஒரு உயிருள்ள ஜீவன்... விலங்கோ, மனுசனோ... அவன் வாழ்க்கையில எதுவேனா மறுக்கப்படலாம்! எது கிடைக்கலேன்னாலும் உயிர் வாழலாம்! தாயும், தாயன்பும் இல்லாத வாழ்க்கை வெறுமை! வீண்! கஷ்டம்! நரகம்...!

எந்த ஜென்மத்துல செய்த பாவமோ.. இந்த மானிடப்பிறவியில் எனக்குத் தாயில்லாமல் போய்விட்டாள்! அநாதையான வாழ்க்கை வேதனை, கொடுமை மானசா! அதைப் பூரணமா அனுபவித்தவன் என்ற முறையில்

சொல்கிறேன்! அந்தக் குழந்தைகளுக்கு தாயற்ற வாழ்க்கை வேண்டாம், மானசா! உன்னைத்தவிர வேறு ஒருத்தியை அன்பு இனி எப்பிறவியிலும் நினைத்துகூடப் பார்க்க மாட்டார்! குழந்தையும், தெய்வமும் ஒண்ணுன்னு சொல் வாங்க! இந்த தெய்வங்களை நான் தண்டிக்க விரும் பலே...!

இதுங்களோட அம்மாவை அபகரிக்க விரும்பலே! அப்படி ஒரு காதல் எனக்கு வேண்டாம்! அப்படி ஒரு கல்யாணம் எனக்கு வேண்டாம்! அநாதையான வாழ்க்கை எனக்கு பழக்கம்! ஆனால் இந்த குழந்தைகளுக்கு.." அங்கே அவளை இருபுறமும் பற்றிக் கொண்டு நின்ற குழந்தைகளை சுட்டிக் காட்டினான், மைக்கேல்.

அன்பு, சிவசங்கரன் முதற்கொண்டு அத்தனை பேரும் ஸ்தம்பித்து நின்றனர்.

"ரெண்டு பேரும் சுயநலம் பாராமல்.. நீ அன்பு, குழந்தைகளுக்காகவும்.. நான் சமுதாய மக்களுக்காகவும் நம் வாழ்க்கையை உரித்தாக்கலாம், மானு! பாதர் வில்லியம்ஸ் என்னை ஒரு பாதிரியாராப் பார்க்கத்தான் விரும்பினார்! என்னை வளர்த்தவர்! என் ஞானத் தந்தை! என்னை உருவாக்கிய பிரம்மா! அவர் விருப்பத்தை நிரா கரித்து.. என்னுள் உன் மேலான காதல் ஏற்பட்டது! அது தப்புன்னு இப்போ தெரிஞ்ச மனசுக்கு அப்போ தெரி யலே! காதலுக்கும், கல்யாணத்திற்கும் பிராப்தம் இல்லா தவன் நான்! எனக்கு கர்த்தர் விதிச்ச வாழ்க்கை.. மக்களுக்கு இறை சேவை செய்வதுதான்! நான் இறையியல் படிக்கப் போறேன், மானும்மா!"

மைக்கேல் சொல்ல.. மானசா கண்களில் கண்ணீர் ஆறாய் ஓடியது.



"நேற்று முதல் நானும் சராசரி மனிதனாய்தான் இருந் தேன்! அன்பு சார் வந்து 'உங்கள் காதலை ஏன் மறைத் தீர்கள்? உங்க ரெண்டு பேருக்கும்தான் திருமணம்!' என்று கூறிவிட்டு சென்றதும்.. வானமே வசப்பட்டாப் போல மகிழ்ந்தேன்! தரையிலே நடக்காமல் பறந்தேன்...!

கொஞ்ச நேரத்தில் கௌதம் வந்தார். அன்புவின் அழி யாதக் காதலைச் சொன்னார். குழந்தைகளின் எதிர் காலத்தை விளக்கினார்.

பிறகு நைட் முழுக்க டிப்பா சிந்திச்சப்போதான்... சாதனா, ஷாம்னாவோட நிலைமை, நினைவெல்லாம் வந்து.. என் தலையில் தட்டி... தரையில் கால் பதிக்க வச்சது! அந்த பிஞ்சுக்களும் 'என்னை அநாதையாக் கரீயேடா பாவி! நீ ஒருத்தன் இந்த நிலைமையில வாழ்ந்தது போதாதான்னு' என் முகத்துக்கு நேரா கைநீட்டி அழுகையோடு கேட்பதுபோல உணர்ந்தேன்! என் நெஞ்சிலும், கண்ணிலும் அவர்கள் நினைவே வந்து என்னை விழிக்க வைத்தது! நான் விழிச்சுட்டேன், மானும்மா! நீயும் விழிக்கணும்! உன் விழிகளால் அவர்கள் மூவரையும் தாங்கணும்!

குழந்தைகளுக்கு நான் யாரோ! உறவே இல்லாத எனக்கே அதுங்க மேல் பரிதாபமும், பச்சாதாபமும் ஏற் படும்போது... உனக்கு இதுங்க சொந்த அக்கா குழந்தை கள்! அன்புவோ... உன் அத்தை மகன்! மூவரோட எதிர்கால மும் நீ சரின்னு சொல்ற ஒரு வார்த்தையிலதான் இருக்கு!"

மானு விம்மினாள்.

"பெண்கள் பராசக்தியின் மறு வடிவம்! அவர்களுக்கு ஆக்கத்தான் தெரியும்! அழிக்கத் தெரியாது! அழித்தலுக்கு

ஒரு நாளும் துணை போகமாட்டார்கள்! இந்த மூவரின் வாழ்வும் துளிர்ப்பதும்... தளிர்ப்பதும்... கருகுவதும்... காய்வதும் உன் கையில்தான் மானசா இருக்கு! யோசிக்காதே, மானசா! உன் அன்பு, ப்ரியம், பாசம், நேசம் அத்தனையும் இந்த மூன்று ஜீவன்களுக்கு உயிர் கொடுக்கப் போகுது!

''அன்பு சார்... என் காதலைவிட உங்க காதல் தெய்வீகமானது! வீரியமானது! சக்தி வாய்ந்தது! உங்க தவம் பொய்க்காது! மானசா உங்களுக்கு மட்டும்தான்!'' அன்பு நீர் திரையிட்ட விழிகளோடு மைக்கேலை நோக்கினான்.

''மானசா... நீயும், நானும் இணைந்தால் இன்பம்! ஆனால் நீயும், அன்புவும் இணைந்தால் பேரின்பம்! நிஜம், மானசா! நான் பக்குவப் பட்டுட்டேன்! என் மனப்பூர்வமா... இதயப் பூர்வமா சொல்றேன்! ரெண்டு பேரும் சேரணும்! இனிமையாய் வாழணும்! நீயும், நானும் இணைந்தால் மகிழப் போவது நாம ரெண்டு பேர் மட்டும் தான்! ஆனால் நீங்கள் ரெண்டு பேரும் இணைந்தால் எல்லோருக்குமே மகிழ்ச்சி!

காதல் என்பது என்ன? நேசிச்ச ரெண்டு உயிரும் சேருவது மட்டும்தானா? கல்யாணம் பண்ணி சுகிப்பது மட்டும்தானா? இல்லே, மானசா! விட்டுக் கொடுத்தல் கூட உண்மையான நேசம்தான்! மொட்டுக்களின் நல்வாழ்வை கருத்தில் கொண்டு... நாம் பிரிந்து போவது கூட நேசம்தான், மானசா!''

மானசா கதறிவிட்டாள்.



''மானசா... நான் உன்னை நேசிச்சேன் என்றால்... அன்பு உன்னையே சுவாசிச்சார்! விழுந்து போனவரை தூக்கி நிறுத்தி விழுதுவிட வைத்திருக்கிறாய்! திரும்ப அந்த விழுதுகளுக்கு வெந்நீர் பாய்ச்சலாமா? கோடாரி கொண்டு சாய்க்கலாமா? திரும்ப ஒரு ஏமாற்றத்தை அவர் உடலும், உள்ளமும் தாங்குமா? நீ எனக்கு தேவைப் படுவதைவிட... முக்கியமாய் அன்புவுக்குதான் தேவை! மானசா நீ தேவதையாய் அவரை தாங்கிக்கணும்!''

மானசாவின் கண்களில் கண்ணீர் காட்டாறு வெள்ளமாய் கரைபுரண்டு ஓடியது.

''மானசா... அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால் அப்போது நான் உன் மகனாய்... உன் வயிற்றில் பிறக்கணும், தாயே! இப்பிறவியில் மறுக்கப்பட்ட தாயன்பை எனக்கு தடையில்லாமல் வாரி வழங்கணும்! தட்டி தாலாட்டணும்! இது ஒன்று மட்டும் நிறைவேற எனக்காக இப்பிறவியில் வேண்டிக்கொள், என் தாயே!''

''மைக்கேல்...!'' நா தழுதழுக்க கூறி... அன்பு ஓடி வந்து அணைத்துக் கொண்டான்.

''மானும்மா... உன்னிடம் முதன் முதலாய் உணர்ந்தது, என் தாயைத்தான்! தாய்ப்பாசத்தைதான்! பிறகுதான் மத்ததெல்லாம்! எனக்கு நீ தாயாகணும், தாயே!''

மைக்கேல் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''அன்பு சார்... மானசா உங்களுக்குதான்! நிஜக்காதல் எண்ணைக்குமே பொய்க்காது! அதான் உங்களின் உயிருக் குயிரான காதலும் கைகூடிவிட்டது! இந்த உடையை உடுத்திட்டுப் போய் மணவறையில் அமருங்கள்!'' என்று மைக்கேல் சொல்ல...

ஒரு நாளும் துணை போகமாட்டார்கள்! இந்த மூவரின் வாழ்வும் துளிர்ப்பதும்... தளிர்ப்பதும்... கருகுவதும்... காய்வதும் உன் கையில்தான் மானசா இருக்கு! யோசிக் காதே, மானசா! உன் அன்பு, ப்ரியம், பாசம், நேசம் அத்தனையும் இந்த மூன்று ஜீவன்களுக்கு உயிர் கொடுக்கப் போகுது!

''அன்பு சார்... என் காதலைவிட உங்க காதல் தெய்வீகமானது! வீரியமானது! சக்தி வாய்ந்தது! உங்க தவம் பொய்க்காது! மானசா உங்களுக்கு மட்டும்தான்!'' அன்பு நீர் திரையிட்ட விழிகளோடு மைக்கேலை நோக்கினான்.

''மானசா... நீயும், நானும் இணைந்தால் இன்பம்! ஆனால் நீயும், அன்புவும் இணைந்தால் பேரின்பம்! நிஜம், மானசா! நான் பக்குவப் பட்டுட்டேன்! என் மனப்பூர்வமா... இதயப் பூர்வமா சொல்றேன்! ரெண்டு பேரும் சேரணும்! இனிமையாய் வாழணும்! நீயும், நானும் இணைந்தால் மகிழப் போவது நாம ரெண்டு பேர் மட்டும் தான்! ஆனால் நீங்கள் ரெண்டு பேரும் இணைந்தால் எல்லோருக்குமே மகிழ்ச்சி!

காதல் என்பது என்ன? நேசிச்ச ரெண்டு உயிரும் சேருவது மட்டும்தானா? கல்யாணம் பண்ணி சுகிப்பது மட்டும்தானா? இல்லே, மானசா! விட்டுக் கொடுத்தல் கூட உண்மையான நேசம்தான்! மொட்டுக்களின் நல்வாழ்வை கருத்தில் கொண்டு... நாம் பிரிந்து போவது கூட நேசம்தான், மானசா!''

மானசா கதறிவிட்டாள்.



''மானசா... நான் உன்னை நேசிச்சேன் என்றால்... அன்பு உன்னையே சுவாசிச்சார்! விழுந்து போனவரை தூக்கி நிறுத்தி விழுதுவிட வைத்திருக்கிறாய்! திரும்ப அந்த விழுதுகளுக்கு வெந்நீர் பாய்ச்சலாமா? கோடாரி கொண்டு சாய்க்கலாமா? திரும்ப ஒரு ஏமாற்றத்தை அவர் உடலும், உள்ளமும் தாங்குமா? நீ எனக்கு தேவைப் படுவதைவிட... முக்கியமாய் அன்புவுக்குதான் தேவை! மானசா நீ தேவதையாய் அவரை தாங்கிக்கணும்!''

மானசாவின் கண்களில் கண்ணீர் காட்டாறு வெள்ள மாய் கரைபுரண்டு ஓடியது.

''மானசா... அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால் அப்போது நான் உன் மகனாய்... உன் வயிற்றில் பிறக் கணும், தாயே! இப்பிறவியில் மறுக்கப்பட்ட தாயன்பை எனக்கு தடையில்லாமல் வாரி வழங்கணும்! தட்டி தாலாட்டணும்! இது ஒன்று மட்டும் நிறைவேற எனக்காக இப்பிறவியில் வேண்டிக்கொள், என் தாயே!''

''மைக்கேல்...!'' நா தழுதழுக்க கூறி... அன்பு ஓடி வந்து அணைத்துக் கொண்டான்.

''மானும்மா... உன்னிடம் முதன் முதலாய் உணர்ந்தது, என் தாயைத்தான்! தாய்ப்பாசத்தைதான்! பிறகுதான் மத்ததெல்லாம்! எனக்கு நீ தாயாகணும், தாயே!''

மைக்கேல் கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''அன்பு சார்... மானசா உங்களுக்குதான்! நிஜக்காதல் என்னைக்குமே பொய்க்காது! அதான் உங்களின் உயிருக் குயிரான காதலும் கைகூடிவிட்டது! இந்த உடையை உடுத்திட்டுப் போய் மணவறையில் அமருங்கள்!'' என்று மைக்கேல் சொல்ல...

மானசா நின்றாள்! யோசித்தாள்! எதுவுமே பேசாமல் அன்புவை காதலோடு நோக்கிவிட்டு மணவறையில போய் அமர...

உலகத்து சந்தோசமெல்லாம் அன்புவின் இதயத்தில் ஒன்றுகூட இதமான தென்றலாய் தீண்ட... அந்த சிலிர்ப்புடன் நொடிப் பொழுதில் ரெடியாகி மானசா அருகே அமர்ந்தான்.

மங்கள இசை முழங்க... மானசாவின் சங்கு கழுத்தில் தாலியைக் கட்டினான்.

மானசாவும் சந்தோசத்தோடு அவனுக்கு மாலையை அணிவித்தாள்.

அங்கே மகிழ்ச்சி அலையலையாய் பொங்கிப் பரவி... அத்தனைப் பேரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தியது!